

# வேதாகமத்தில் போதிக்கப்பட்டிருக்கிறபடி ஒற்றுமை

## UNITY AS TAUGHT IN THE BIBLE

*J.C. Choate*

ஒற்றுமை பற்றி அதிக அளவிலான போதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன, அதே நேரத்தில் பிரிவினையானது கடுமையாகக் கண்டிக்கப்பட்டுமிருக்கிறது. கண்டிக்கப்பட்டவைகளில் பெரும்பகுதி மார்க்கப்பிரிவினை சம்மந்தமானது தான். அதாவது, மனிதனால் உண்டாக்கப்பட்ட பல சபைகள் மற்றும் மத அமைப்புகள், மக்கள் கிறிஸ்துவின் ஒரே சரீரத்தில் ஒற்றுமையாக இருப்பதைத் தடுக்கின்றன. ஆனால், தேவன் ஆரம்பத்திலிருந்தே ஜனங்கள் பக்தி காரியங்களில் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என உத்தேசித்திருந்தார்.

ஒருவேளை ஒற்றுமை பற்றிய வசனப்பகுதிகள் அறியாமையினால் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். யோவான் பதினேழாம் அதிகாரத்தில் தம்மைப் பின்பற்றுபவர்கள் தம்முடைய சபையில் ஒன்றாயிருக்க வேண்டுமென்று கிறிஸ்து ஜெபிக்கிறார். இப்பகுதியில் ஒற்றுமை சம்மந்தமாக சொல்லப்பட்டிருக்கும் புத்திமதிகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்பட வேண்டிய ஒற்றுமை பற்றிதான் பேசுகிறது. அந்தப் புத்திமதிகளெல்லாம் *கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்திற்கு வெளியே இருக்கிறவர்களுக்குப் பொருந்தாது.*

பொதுவாக, எல்லா மார்க்கப்பிரிவினை சபைகளும் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்களை உடைய சபைகளாக இருப்பது உண்மையாக இருந்தாலும் கூட, அந்த விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் இல்லை. ஏனென்றால், கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படும்படியாக அவர் என்ன கட்டளையிட்டிருக்கிறாரோ அவைகளை அவர்கள் ஒருபோதும் செய்யவில்லை (அப். 2:38-47). சபையை பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பது உலகத்திற்கு பரிச்சயமில்லாத ஒன்றாக இருக்கிறபடியால், மனிதனால் உண்டாக்கப்பட்ட இந்த சபைகளெல்லாம் தங்களுக்குள்

பிரிந்திருந்தாலும் அவைகளனைத்தும் கர்த்தருடைய சபைகள் என்று தவறாக எண்ணிக்கொள்கிறது. இது வசனங் களின் போதனைக்கு எதிரானவை.

நிச்சயமாகவே, சபை பிரிவினை மோசமானது. போலியான சபை களில் இருப்பது தவறு. இப்படிப்பட்ட சபைகள் பரலோகம் போவதற்கு தங்கள் மனதின் விருப்பப்படி முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிற மனிதர் களால் உண்டாக்கப்பட்டவைகள்.

கிறிஸ்து வாழ்ந்தபோதும், அவருடைய சபை ஆரம்பிக்கப்பட்டு பல நூறாண்டுகளான பிறகும் மார்க்கப்பிரிவினை சபைகள் ஒன்று கூட இருக்கவில்லை. பிரிவினை சபைகளுக்குத் தாயாக இருக்கக் கூடிய கத்தோலிக்க சபை கூட அக்காலத்தில் இருக்கவில்லை. முதல் நூற்றாண்டில் கள்ளப்போத கர்கள் இருந்தார்கள். ஆனால், அவர்களில் ஒருவர்கூட பிரிந்து போய் தனி சபையை உருவாக்க முன்வர வில்லை.

முதல் நூற்றாண்டில் ஒற்று மையாக இருந்தாலும் சரி, பிரிவினை யாக இருந்தாலும் சரி கர்த்தருடைய சபைக்குள்ளேயே அவர்கள் இருந் தார்கள். இப்படிப்பட்ட பிரச்சனை களுக்கு கொரிந்து பட்டணத்தி லிருந்த சபை மிகச்சிறந்த உதாரண மாகும். அங்கே பெரும் பிரச்சனை கள் இருந்த போதிலும், அப்போஸ்த லனாகிய பவுல் கொரிந்து பட்டணத்து சபைக்கு நிருபம் எழுதும்போது, *"பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக் கப்பட்டவர்களுமாயிருக்கிற தேவனு டைய சபைக்கும் "* என்று எழுது கிறார் (1 கொரி. 1:10). அதன் பின்பு, அவர் அவர்களிடம் ஏன் நீங்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து பவுலையும், அப்பொல்லோவையும், பேதுருவை யும், கிறிஸ்துவையும் பின்பற்று கிறீர்கள்? என்று வினவி பிரிவினைக் கான காரண காரியங்களை அறிய விரும்பினார். மேலும், பவுல், கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறைப் பட்டான்? பவுலின் நாமத்தினா லேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என்று கேள்விகளை அடுக்கினார். அங்கே, கிறிஸ்து பிரிந்திருக்க வில்லையென்றும், அவர்களுக்காக கிறிஸ்து மாத்திரமே சிலுவையில் அறையப்பட்டார் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார் கள். அதே போல் அவர்கள் கிறிஸ்து வின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றதையும் அறிந்திருந்தார்கள். பவுல் காரண காரியங்களை அறிய விரும்பியதன் முடிவு வெளிப்படை யானது. அவர்கள் ஏன் மனிதர் களைப் பின்பற்றினார்கள், ஏன் அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்ற வில்லை? நிச்சயமாகவே அவர் களுக்கு பவுல் என்ன சொன்னார் என்பது புரிந்திருக்கும்.

யோவன் 17 ஆம் அதிகாரத்தில் கிறிஸ்து இவ்விதமாக ஜெபித்தார். *"நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல் லாமல், இவர்களுடைய வார்த்தை யினால் என்னை விசுவாசிக்கிறவர் களுக்காகவும் வேண்டிக்கொள்ளு கிறேன் ". என்று அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னி லேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள் ளுகிறேன். நாம் ஒன்றாயிக்கிறது*

*போல அவர்களும் ஒன்றாயிருக்கும் படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறின வர்களாயிருக்கும் படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும் நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர் களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளு கிறேன் என்றார். (யோவான் 17:20-23).*

இயேசுவின் வார்த்தைகள் இதைவிடத் தெளிவாக எப்படிச் சொல்ல முடியும்? கிறிஸ்து உலகத் திற்காக ஜெபிக்கவில்லை அல்லது உலகத்திலுள்ள திரளான கிறிஸ்தவ விசுவாசிகளுக்காகவும் ஜெபிக்க வில்லை. ஆனால், அப்போஸ்தலர் களுக்காகவும், அவர்களுடைய பிரசங்கத்தின் மூலமாக தம்மீது விசுவாசம் அடையப் போகிறவர் களுக்காக - அதாவது சபைக்காகவும் ஜெபித்தார். இயேசு தாமும், பிதாவும் ஒன்றாயிருக்கிறது போல அவர் களும் ஒன்றாயிருக்கும்படி ஜெபித்தார்.

தேவன் இயேசுவை இவ்வுல கத்திற்கு அனுப்பினார் என்பதை இவ்வுலகம் விசுவாசிப்பதற்காக நம் கர்த்தர் இத்தகைய ஒற்றுமைக்காக மன்றாடினார். இவ்வுலகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த நாம் ஏன் கஷ்டப்படுகிறோம்? அதற்குத் தடை யாக இருப்பது நம் மத்தியில் காணப் படும் பிரிவினைகள் தான். நாம் பிரிந்திருந்து நம் நேரத்தையும், பணத்தையும் ஒருவரையொருவர் எதிர்ப்பதில் வீணடிக்கிறோம். நாம் ஒற்றுமையாக இருந்தால் போதிப்ப திலும், உலகத்தை மாற்றுவதிலும், கவனத்தைச் செலுத்துவோம். அது எவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்! ஆனால், கர்த்தரு டைய ஜனங்கள் மத்தியில் ஏன் பிரிவினைகள் இருக்க வேண்டும்? சபையானது மனிதர்களை உள்ள டக்கியது. ஆகவே, நம்மிடம் பல வீனங்களும், யார் பெரியவன் என்ற மோதல்களும் உண்டு, மேலும், உலகத்தாலும் இன்றைய மத உலகின் போதனை களாலும் வஞ்சிக்கப்படுகிறவர்களும் நம்மிடம் உண்டு. சபை மனிதர்களால் உண்டான ஒன்றாக இருக்கிறபடி யால் அவர்களுடைய புரிந்து கொள்ளுதலில் வித்தியாசமும், சத்தி யத்திற்கான அர்ப்பணிப்புமில்லா மல், சமரசம் செய்து கொள்ளும் விருப்பம் இருக்கும் வரை, கர்த்தரு டைய சபையில் பிரிவினையின் சிதறல்கள் இருந்து கொண்டே இருக்கும்.

சிலர் சபையானது ஏதாவ தொரு காரணத்தினிமித்தம் பிரிவி னைக்குட்படுத்தப்பட்டால் அது உண்மையாகவே கிறிஸ்துவின் சபையாக இருக்க முடியாது என்று வாதாடுகிறார்கள். அப்படிப்பட்ட வர்கள் முதல் நூற்றாண்டில் பவுலும், மற்றவர்களும் சபைகளில் கண்ட பிரிவினைகளை சௌகர் யமாக மறந்துவிட்டார்கள்.

நிச்சயமாகவே கர்த்தர் பிரிவி னையை வெறுத்து, அதை கண்டித்து நாமெல்லாரும் ஒன்றாயிருக்கும்படி ஜெபித்தார். கிறிஸ்தவர்களான நமக்குள் ஒற்றுமை வேண்டும். சபை அங்கத்தினர்களுக்குள் கருத்து வேறுபாடு தலைதூக்கினால் அதன் காரணமாக நாம் சபையை விட்டு வெளியேறக் கூடாது. ஏனென்றால்,

அதுவே மிகப் பெரிய தவறாகிவிடும். சபை ஒன்று தான் என்பதையும், இது கிறிஸ்துவுக்குள் ஐக்கியமாக இருக்க வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஐக்கியத்தை விலக்கிக் கொண்டு, பிரிவி னையை உண்டாக்குகிற வர்கள் தவறு செய்கிறார்கள். அதாவது, பாவம் செய்கிறார்கள், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மிகப்பெரிய விலையைக் கொடுக்க வேண்டும்.

இதைக்குறித்து பவுல் சொல்லும் போது, " *அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்* " என்று சொல்கிறார் (ரோமர் 16:17-18).

இங்கே சகோதரருக்குள்ளே பிரிவினையை உண்டாக்குகிற காரியம், கள்ள உபதேசமாக அல்லது போதனையாக இருக்கிறது என்பதை கவனியுங்கள். ஆகவே, கர்த்தருக்கு உண்மையாக இருப்பவர்கள் கர்த்தருடைய ஐக்கிய சபையாக இருக்கிறார்கள்.

மேலும், பவுல் இவ்விதமாகச் சொல்கிறார். " சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் " என்று. *உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு;* (எபேசியர் 3:4-6).

கர்த்தருடைய சபை இன்றும் இருக்கிறதா? ஆம் இருக்கிறது. அது ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இருந்து வருகிறபடியே இப்போதும் இருக்கிறது. (அப். 2 ஆம் அதிகாரம்), மேலும், கிறிஸ்து மறுபடியும் வந்து பிதாவினிடத்தில் அதை ஒப்புக் கொடுக்கும் வரை அது அப்படியே தொடர்ந்து இருக்கும். அது ஒற்றுமையாக இருக்கிறதா? கர்த்தருக்கு உண்மையாக இருப்பவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஆனால், உலகமானது பிரிந்து போனவர்கள், விழுந்துபோனவர்கள் மற்றும் உண்மையற்றவர்கள் மீது கவனம் செலுத்துகிறது. உண்மைக் கிறிஸ்துவர்களுக்கு இப்படிப்பட்டவர்கள் உதாரணங்களாக மாறமாட்டார்கள் ஆயினும், விழுந்து போனவர்கள் கர்த்தருக்கு உண்மையாயிருப்பதை நிறுத்திக் கொண்டதால், அவர்கள் மனந்திரும்பி, தேவனிடத்தில் திரும்பாத பட்சத்தில் நித்திய நித்தியமாக இழந்து போவார்கள்.

நீங்கள் வேதாகமத்தின் ஒரே சபையில் அங்கத்தினராகி, சபை ஒற்றுமையாக இருக்க எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஆம், கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை, நாமும் அவரைப் பின்பற்றினால் பிரிந்திருக்கமாட்டோமென்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நிர்வாக ஆசிரியர் உரை

# கிறிஸ்துவின் நிருபம்

## EPISTLE OF CHRIST

*S. Rajanayagam*

கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தைக் கவனித்தால், மற்ற 13 நிருபங்களில் அவர் அதிகம் பயன்படுத்தாத " நிருபம் " என்ற வார்த்தையை இதில் அடிக்கடி பயன்படுத்துகிறார். (5:12; 10:12, 12:11; 13:6). இது பவுலடியார் பற்றி தவறாகப் பேசுவோருக்கு பதிலளிக்க வேண்டிய கட்டாயம் அவருக் கிருந்துள்ளதென்பதைத் தான் காட்டுகிறது. இன்னும் சிலருக்கு வேண்டிய தாயிருக்கிறது போல, எங்களுக்கு உபசார நிருபங்கள் தேவையில்லையென் பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டு, இங்கு ஒரு பெரிய உண்மை யை வெளிப்படுத்துகிறார். அதுதான், *எங்கள் நிருபம் நீங்கள் தானே* என்பதும், நீங்கள் *கிறிஸ்துவின் நிருபம்* என்பதும்.

இப்பொழுது உபசார நிருபங்கள் என்றால் என்னவென்று கொஞ்சம் தெரிந்து கொள்வோம். உபசார நிருபங்கள் என்பது ஒருவரைப் பற்றி எழுதிக் கொடுக்கப்படும் நற்சாட்சிக் கடிதங்கள். அந்நாட்களில், அப்படிப்பட்ட கடிதத் திற்கு அவசியமிருந்தது. சபை வட்டாரத்தில் அப்படிப்பட்ட பழக்கம் வழக்கத் திலிருந்தது. பிரயாணத்திலிருக்க நேரும் ஒரு கிறிஸ்தவன், ஒரு சபை யிலிருந்த நற்சாட்சி கடிதம் பெற்றுச் சென்றால், அவன் செல்லும் இடங்களில் அங்குள்ள சபையார் அவனை வரவேற்று உபசரிப்பர். வரும் சகோதரனோ அல்லது சகோதரியோ விசுவாசத்திலும், உபதேசத்திலும் பழுதில்லாதிருக்கிறபடியால், தங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் மனமுவந்து செய்வர். அப்போஸ்தலன் பவுல், கெங்கிரேயா சபை சகோதரி யாகிய பெயோளுக்கு நற்சாட்சி கொடுத்து, ஏற்றுக் கொள்ளும்படி ரோமாபுரி யாரைக் கேட்கிறார் (ரோமர் 16:1,2). ஆகவே, உபசார நிருபங்கள் என்பது இது தான். ஆனால், கள்ளதீர்க்கதரிசிகளும், சபையிலிருந்த கள்ளச் சகோதரர்களும் இந்த உபசார நிருபத்தை, தங்களது தவறான நோக்கம் நிறைவேறுவதற்கும், பொய்யான உபசேதத்தைப் பரப்புவதற்கும் கூட பயன் படுத்தினர், ஆகவே தான் அப்போஸ்தலன் யோவன், ஒரு கட்டத்தில், இக்காரியம் பற்றி எச்சரிக்க வேண்டிய கட்டாயம் கூட ஏற்பட்டது. ஆகவே தான், தானது இரண்டாவது நிருபத்தில், இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலி ருந்தால், அவனை உங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லா மலும் இருங்கள் (2யோவான்.10).

"சரி, இப்படிப்பட்ட உபசார நிருபங்கள், அதாவது நற்சாட்சிக் கடிதங்கள் தனக்குத் தேவையில்லையென்று சொல்லும் பவுல் அப்போஸ் தலன், அத்தோடு நிற்காமல், எங்கள் நிருபம் நீங்கள் தானே என்றும்,

நீங்கள் கிறிஸ்துவின் நிருபம் என்றும் சொல்லுகிறார். இப்படிச் சொல்லு வதற்கு முன்பாக அவர் பயன்படுத்தும் வார்த்தைகள் அர்த்தமும் ஆழமும் கொண்டதாயிருக்கிறபடியால், அவை பற்றி பார்ப்போம்.

## எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும்....

அந்நாட்களில், உபசார நிருபங்கள் தோற்சுருள்களிலும், ஓலைச் சுவடிகளிலும் தான் எழுதப்படுவது வழக்கம். ஆனால், கொரிந்தியராகிய நீங்கள், எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டுள்ளீர்கள் என்கிறார். அதெப்படி?

பெரும்பாடுகளுக்கும், மிகுந்த பிரயாசங்களுக்கும் மத்தியில் நாம் விரும்பும் ஒன்றைப் பெற்று கொள்ளும்போது, அது பற்றிய நினைவு நமது நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுவிடும். இந்த அடிப்படையில் தான், கொரிந்தியரே நீங்கள் எங்கள் இருதங்களில் எழுதப்பட்டுள்ளீர்கள் என்று கூறுகிறார். அதாவது, கொரிந்துபட்டணத்தில் கர்த்தருடைய சபையை ஏற்படுத்துவதற்கு பவுல் மிகுந்த சோதனைகளையும், உபத்திரவங்கயையும் சந்திக்க வேண்டி யிருந்தது. அந்த அனுபவங்கள், எங்கள் இருதயங்களிலும் அவைகளின் தாக்கம் உங்கள் இருதயங்களிலும் பதிந்துள்ளபடியால், உங்களிடம் வருவதற்கு எங்களுக்கு எதற்கு உபசார நிருபம் என்று கேட்கிறார்? சுவடி களிலும், தோலிலும் எழுதப்படுவது பெரிதா அல்லது இருதயங்களில் எழுதப்படுவது பெரிதா என்று கேள்வி எழுப்புகிறார்.

## சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற....

கொரிந்தியரே, நீங்கள் சொல்லும் உபசார நிருபங்கள், ஒரு குறிப்பிட்ட சபையினரால் தான் வாசிக்கப்படுகிறது, ஆனால், கொரிந்திய ராகிய நீங்களோ, சகல மனுஷராலும் அறிந்து, வாசிக்கப்படுகிறீர்கள் என்றும் கூறுகிறார். அதெப்படி?

கொரிந்து பட்டணம் அன்றைய உலகின் தலைசிறந்த பட்டணம் அப்போதைய கிரோக்கத்தில் அது மிக முக்கிய நகரம். அதுமாத்திரமல்ல, உலகளாவிய வாணிப கேந்திரமாகவும், உலக நாகரீகத்தின் சின்ன மாகவும், கிரேக்க கலாச்சாரத்தின் வெளிப்பாடகவும், போக்குவரத்து மைய மாகவும், இன்னும் பலவித ஒழுக்கக் கேடுகளுக்கும் சிகரமாக இருந்தது, ஆகவே, இப்பட்டணத்தின் காரியங்கள் எதுவாயினும், அது உலகின் கவனத்திலிருந்து தப்ப முடியாது.

இப்படிப்பட்ட பட்டணம் அப்போஸதலன் பவுலின் சுவிசேஷ பிரசங்கத்தாலும், பலவித பாடுகளாலும் கர்த்தருக்குள் கொண்டுவரப்பட்ட தென்று, அன்றைய உலகம் நன்றாகவே அறிந்திருந்தது. அதுமாத்திரமல்ல, அப்போஸ்தலன் பவுல் ஊழியத்தினிமித்தம் உலகெங்கும் சுற்றித் திரிந்த போது, எங்கெல்லாம் சென்றாரோ, அங்கெல்லாம் கொரிந்து சபை பற்றி பேசப்பட்டது. அவர்களெல்லோரும் கொரிந்து சபை பற்றி தெரிந்து கொண் டார்கள். ஆகவேதான், மற்றவர்களின் உபசார நிருபங்களைப் போலல் லாமல், நீங்கள் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்படுகிறீர்கள் என்று சொல்லுகிறார்.

## நீங்கள் கிறிஸதுவின் நிருபாமயிருக்கிறீர்கள்...

நீங்கள் எங்கள் நிருபம் என்பதின் விரிவாக்கம் தான், நீங்கள் கிறிஸ்துவின் நிருபம் என்பது. கொரிந்து சபையார், பவுலின் நிருபம் என்பது விளங்கிக் கொள்ளக்கூடியது. ஆனால், எப்படி அவர்கள் கிறிஸ்துவின் நிருபம்? கிறிஸ்துவானவர் தமது ஆவியானவரைக் கொண்டு, பவுலடியாரை இடைக்கட்டி, அந்த ஆவியானவரின் வழி நடத்துதலின்படி. இந்த நிருபம் கொரிந்தியருக்கு எழுதப்பட்டபடியால், கொரிந்தியர் கிறிஸ்துவின் நிருபம் என்று அழைக்கப்படுகிறார்கள்.

இங்கே நன்றாகக் கவனியுங்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த கொரிந்தியர்கள், கிறிஸ்துவின் நிருபம் என்றால் அந்த சுவிசேஷத் திற்கு அதே வழி முறையின்படி கீழ்ப்படிந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் நிருபமே. ஒவ்வொரு நிருபத்திலிருந்தும், அதை எழுதினவர் வாசிக்கப்படுவது போலவே, கிறிஸ்துவின் நிருபம் என்றழைக்கப்படுகிற ஒவ்வொரு கிறிஸ்தவனிடமும் கிறிஸ்து வாசிக்கப்பட வேண்டும். அதற்காகத் தான் நீங்கள் கிறிஸ்துவின் நிருபம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி யானால் அருமையானவர்களே, கிறிஸ்து நம்முடைய வாழ்வின் மூலம் வாசிக்கப்படுகிறாரா? சொல்லுங்கள், சிந்தியுங்கள்.

நம்முடைய இரட்சகரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்து, நம்மைப் போல் இப்பூமியில் வாழ்ந்தபோது அவர் ஒரு நிருபமாகவே இருந்தார். அவர் தேவனுடைய நிருபமாயிருந்தார். எப்படியென்று கேட்கிறீர்களா? தொடர்ந்து கவனியுங்கள்.

யோவான் ஒன்றாம் அதிகாரம் ஒன்றாம் வசனம் இயேசுவை வார்த்தை என்று வர்ணிக்கிறது. வார்த்தை என்பது எண்ணங்களின் வெளிப் பாடு. பரலோகத்தின் தேவனுடைய திட்டத்தை கிறிஸ்துவானவர் வெளிப் படுத்தினபடியால் தான், அவர் அங்கே வார்த்தை என்று சொல்லப் பட்டுள்ளார். இக்கருத்துக்கு ஆதராமாக யோவான் 1:18-ஐ கவனியுங்கள். *தேவனை ஒருவனும் ஒருக்காலுங்கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.* அந்தக் கிறிஸ்து வானவர், தன்னுடைய செயல்பாடுகள் அனைத்திலும் தேவனை வெளிப் படுத்தக் கூடியவராக இருந்தார். ஆகவேதான், கிறிஸ்துவை நாம் தேவனு டைய நிருபம் என்று சொல்லமுடியும்.

தேவனுடைய நிருபமாக இருந்த கிறிஸ்துவிடம், ஒரு சமயம், பிலிப்பு பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று கேட்டபோது, அதற்குப் பதிலாக என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று கூறுகிறார் (யோவான் 14:8,9) அவரால் எப்படி, இவ்விதம் கூற முடிந்தது? இதிலே இரகசியம் ஒன்று மில்லை. தன்னுடைய இப்பூவுலக வாழ்க்கையின் எல்லாக் கட்டத்திலும், தேவனுடைய சித்தத்திற்குத் தன்னை சமூலமாய் ஒப்புக்கொடுத்தார். ஆம், சோதனை நேரத்தில், எதிர்ப்பு நேரத்தில், துரோக நேரத்தில், வேதனை

நேரத்தில், உயிரே போகும் நேரத்தில் கூட தன்னை அவர் சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்காமலிருக்கவில்லை. ஆனால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்வு எப்படி?

ஒவ்வொரு கிறிஸ்துவனும், கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவனும் கிறிஸ்துவின் நிருபமாக, அவர் சித்தம் செய்யும் ஒருவனாக வாழாதபடியால்தான், உலகம் கிறிஸ்துவை அறியவேண்டிய அளவு அறிந்து கொள்ளாமலிருக்கிறது. ஆனால், *எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டுமென்பது* (1 தீமோத்தேயு 2:4) தான் தேவனுடைய சித்தம். ஆகையால், தேவனுடைய இச்சித்தம் நிறைவேறி, எல்லாரும் இரட்சிப்படைய வேண்டுமானால், நாம் ஒவ்வொருவரும் உலகம் நம்மில் கிறிஸ்துவைக் காணும்படியான வாழ்க்கை வாழ வேண்டும்.

அதுமாத்திரமல்ல, நாம் ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவை களை மாத்திரம் பேசவும், செய்யவும் வேண்டும். (தீத்து 2:1) ஏனெனில், கிறிஸ்துவின் உபதேசங்கள், கிறிஸ்துவுக்கடுத்த உபதேசம் என்ற பெயரில் பல போலியான உபதேசங்கள் கிறிஸ்துவத்தில் மலைபோல் குவிந்து கிடக் கிறது. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரும்பாலனாவர்கள், *ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தின வுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்கு திரளாகச் சேர்ந்துக்கொண்டு* (2 தீமோத்தேயு 4:3) மாய் மாலமான பக்திப் பரவசத்தில் மூழ்கியிருக்கிறார்கள்.

இப்படி, இன்றைய கிறிஸ்தவத்தைப் பீடித்திருக்கிற இந்த இழிநிலை மாறி, உலகமானது மெய் கிறிஸ்தவத்தை அடையாளம் கண்டு அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனில், கிறிஸ்துவை பின்பற்ற விரும்பும் ஒவ்வொரு வனும், கிறிஸ்துவின் உண்மையான உபதேசம் எது என்பதைக் கண்டு பிடிக்கப் போதுமான பிரயாசை எடுக்க வேண்டும். (1தெசலோனிக்கேயர் 5:21) *தீர்க்கத்தரிசிகளால் முன்னுரைக்கப்பட்டு* (தானியேல் 2:44; ஏசாயா 2:2,3; யோவேல் 2:28) *யோவான் ஸ்நானகனால் பிரசங்கிக்கப்பட்டு* (மத்தேயு 3:1,2), *இயேசு கிறிஸ்துவால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டு* (மத்தேயு 16:18, மாற்கு 9:1) *எருசலேம் பட்டணத்தில், பெந்தெகோஸ்தே நாளில்* (அப்போஸ்தலர் 2ம் அதி.) *ஸ்தாபிக்கப்பட்ட சபை* எதுவென்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அதுமாத்திரமல்ல, அந்த ஒரே சபைக்குள்ளாக, விசுவாசித்து (ரோமர் 10:17) மனந்திரும்பி (அப்போஸ்தலர் 17:30) அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10) பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் (அப்போஸ்தலர் 22:16) பெற்று, கர்த்தரால் சபையிலே சேர்க்கப்பட வேண்டும். (அப்போஸ்தலர் 2:47).

கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒருவன் இவ்விதம் செய்து, *அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தால்* (அப்போஸ்தலர் 2:42), கிறிஸ்து நம்மில் வாசிக்கப்படும்படியான ஒரு வாழ்க்கையை நிச்சயம் வாழ முடியும். இதற்கு வேறு குறுக்கு வழிகள் எதுவும் கிடையவே கிடையாது.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| வேதாகமத்தில் போதிக்கப்பட்டிருக்கிறபடி ஒற்றுமை | ................. J.C. Choate | ... 1 |
| கிறிஸ்துவின் நிருபம் | ................. S. Rajanayagam | ... 5 |
| உபதேசத்தை மனதில் பதிய வைத்தல்... | ................. Byron Nichols | ... 11 |
| **தேவன்** | **God** | |
| இரட்சகரும், ஆண்டவரும் | ................. Jack W. Carter | ... 14 |
| இயேசு : மாபெரும் தொடர்பாளர் | ................. Clarence Deloach,Jr | ... 16 |
| **சாட்சியங்கள்** | **Evidences** | |
| காயீன் தன் மனைவியை எங்கிருந்து பெற்றான் | ................. Keith Sisman | ... 19 |
| **தேவனுடைய வார்த்தை** | **The Word of God** | |
| தேவனுடைய ஒளி ஏற்றப்படவேண்டும் | ................. Hollis Miller | ... 22 |
| அதைப் பற்றி எனக்குத் தெரிந்ததெல்லாம்... | ................. David R. Pharr | ... 24 |
| தேவனுடைய இழுக்கும் சக்தி | ................. W.Douglass Harris | ... 27 |
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine To Live By** | |
| அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் | ................. Leon Barnes | ... 30 |
| எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை | ................. Don. L. Norwood | ... 33 |
| மனந்திரும்புதலின் கனிகள் | ................. Tom Kelton | ... 35 |
| உணர்வுகளா அல்லது விசுவாசமா | ................. Jimmy Jividen | ... 37 |
| அழியாத சுதந்திரம் | ................. Wayne Barrier | ... 39 |
| இந்த கிறிஸ்தவ காலம் | ................. John Thiesen | ... 41 |
| **இரட்சிப்பு** | **Salvation** | |
| ஆக்கினைத் தீர்ப்பு முதல் உயர்த்தப்படுதல் வரை | ................. Sunny David | ... 43 |
| மத பாரம்பரியங்களின் அபாயம் | ................. Charles E.Cobb | ... 46 |
| **சபை** | **The Church** | |
| மீட்டமைத்தலின் விதை | ................. Kevin Moore | ... 48 |
| சபையில் இருக்கும் இரண்டு பிரச்சனைகள் | ................. Dan winkler | ... 51 |
| சபை, கிறிஸ்துவின் அழகான மணவாட்டி | ................. Gary C.Hampton | ... 52 |
| சபையின் தனித்தன்மை | ................. Ray Hawk | ... 54 |

சபை முக்கியமானது ..................... P.C. Philomonraja ... 56

**சபை வளர்ச்சி** **Church Growth**

நற்செய்தி பணியில் பிரசங்கியாரின் பங்கு ..................... Clayton Pepper ... 58

**ஆராதனை** **Worship**

நாம் போவோம் ..................... Bobby Wheat ... 63

தேவ தரிசனம் ..................... Dan. R. Owen ... 65

**அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை** **Daily Christian Living**

எனக்கா? புற்றுநோயா? ..................... Sylvia Camp ... 67

வாழ்க்கையின் பதற்றங்கள்: சாபமா அல்லது ஆசீர்வாதமா? ..................... Jerry L. Davidson ... 70

சமாதானம் பண்ணுகிறவர்கள் ..................... Demar Elam ... 73

தந்திரமான சோதனைக்காரன் ..................... Frances Parr ... 75

மறைந்திருந்து தாக்கும் திருடன் ..................... Bobby Dockery ... 77

வெளிச்சம் தருகிறது, உப்பு தூண்டுகிறது ..................... Danny Cline ... 79

நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ ..................... Ancil Jenkins ... 80

ஆசீர்வாதங்கள் திரும்பி வருகின்றன ..................... Betty Tucker ... 82

பொறாமை மற்றும் எரிச்சல் ..................... Bill Nicks ... 84

தேவனால் பிறந்தவர்கள் ..................... B. Arjunan ... 86

**கிறிஸ்தவ இல்லம்** **The Christian Home**

என் பொக்கிஷம் ..................... Betty Burton Choate ... 91

திருமணம் பற்றிய கருத்து ..................... Tunde Akodus ... 93

**வசனப்பகுதி பாடங்கள்** **Textual Studies**

உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு ..................... E. Claude Gardner ... 96

வாடகைக்கு ஆசாரியன் ..................... Jeril (poly) Cline ... 100

தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயிருத்தல் ..................... Leon Barnes ... 103

**வேதாகமக் கேள்விகள்** **Bible Questions**

எனக்குப் பிறன் யார்? ..................... T.Pierce Brown ... 105

பூரணமானதா அல்லது பலவீனமானதா ..................... Royce Frederick ... 107

# உபதேசத்தை மனதில் பதிய வைத்தல் – அது நம்முடைய வேலையாயிருக்கிறது!

## INDOCTRINATION - THAT'S OUR JOB!

***Byron Nichols***

" *உபதேசத்தை மனதில் பதிய வைத்தல்* " என்னும் வார்த்தை அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது மற்றும் தவறாகப் பயன் படுத்தப்படுகிறது. இவ்வார்த்தை, சிலருடைய மனதில் மோசமானவைகளை உட்புகுத்தி, உபதேசத்தை ஏற்றுக்கொள்ள விரும்பாத மக்களை மூளைச் சலவை செய்து பலவந்தமாக சம்மதிக்கச் செய்தல் போன்றவைகளோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. சபையில் கூட இவ்வார்த்தை சம்மந்தமாக குழப்பமும், தவறான புரிந்து கொள்ளுதலும் காணப்படுகிறது. உபதேசத்தை வலியுறுத்துதல் தவறானது என்று வெளிப்படையாகவே அறிவித்த ஓர் எழுத்தாளர் இவ்விதமாகச் சொல்கிறார். " உபதேசத்தை வலியுறுத்துவது சத்தியம், நேர்மை, வெளிப்படைத்தன்மை, சரியானதைத் தேடுதல், புரிந்து கொள்ளுதல் போன்றவற்றை நீக்கிப்போடுகிறது ", " *உபதேசத்தை வலியுறுத்துதல் என்னும் வார்த்தை வேதாகமத்தில் இல்லை*" என்கின்றனர். உபதேசத்தை உட்புகுத்துதல் என்பது பதியச் செய்வது, கட்டுப்படுத்துவது, ஆதிக்கம் செலுத்துவது என்னும் பொருள்படும். உபதேசத்தை உட்புகுத்துதல் என்பதற்கு இந்த எழுத்தாளர் கொடுத்த அர்த்தங்களெல்லாம் துல்லியமாக இருந்தால், அவர் சொல்வது முற்றிலும் சரியானதாக இருக்கும். அப்படிப் பார்த்தால், உபதேசத்தை மனதில் பதிய வைத்தல் தீமையானதாக இருக்கிறது. எனவே, கிறிஸ்தவத்தில் எப்படிப் பார்த்தாலும் அதற்கு இடமேயில்லை. இருந்தாலும், தயவு செய்து இறுதி முடிவுக்கு இப்பொழுது வந்து விட வேண்டாம்.

உபதேசத்தை வலியுறுத்துதல் என்கிற வார்த்தை வேதத்தில் இல்லை என்பதை நான் ஒத்துக்கொள்வேன். ஆனால், சத்தியத்தின் குரல் வாசகர்கள் இப்புத்தகத்தின் முக்கிய நோக்கம் தேவ ஆவியினால் ஏவப்பட்ட புத்தகமாகிய வேதாகமத்திற்கு மக்களைத் திசை திருப்புவதாகும் என்பதை உணர்ந்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன். ஆயினும், வேதத்தில் ஒரு வார்த்தை இடம் பெறவில்லை என்பதற்காக அந்த வார்த்தை தேவனால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்று பொருள்படாது. உதாரணமாக, வெளி நாட்டு ஊழியம் என்கிற வார்த்தை தவறானது என்று நம்புகிற ஒருவரையும் எனக்குத் தெரியாது. இருந்தபோதிலும், இந்த வார்த்தை வேதாகமத்தி லிருந்து வந்த ஒன்றல்ல.

ஆனால், வேதாகமத் திட்டத்தை குறிப்பதற்காக மனிதர்களால் கண்டுபிடிக்கப் பட்ட வார்த்தையாகும். அதேபோல், *சுவிசேஷக் கூட்டம்*, " *கருத்தரங்கம்* " போன்ற வார்த்தைகளெல்லாம் வேதாகமத்தில் இடம் பெறவில்லை. ஆனால், வேதாகம ஒழுங்கின்படியான சபையில் சாதாரணமாக பயன்படுத்தக் கூடிய வார்த்தைகள் தான். நம் கருத்தை வலியுறுத்துவதற்கு இந்த உதாரணங்கள் போதுமானதாக இருக்க வேண்டும்.

எவ்வித சந்தேகமுமின்றி உபதேசத்தை மனதில் பதிய வைத்தல் என்ப தற்கு விளக்கம் கொடுத்த எழுத்தாளர் தன்னுடைய சிந்தனையில் நேர்மை யானவர் என்பது விளங்குகிறது. தான் தவறு என்று கருதும் ஒன்றை சரி செய்ய முயற்சிக்கிறார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனாலும், "உபதேசத்தை மனதில் பதிய வைத்தல் " என்பதற்கு அவர் கொடுத்த விளக்கம் சரியானதல்ல என்பதற்கே சாத்தியம் அதிகம். அந்த வார்த்தை வேதாகமத்தில் இல்லாதபடியால் அதற்குப் பதிலாக அவ்வார்த்தையின் விளக்கத்திற்காக அகராதிக்கு தான் செல்ல வேண்டும். அகராதியில் அதன் பொருள் (1) *உபதே சங்கள், கொள்கைகள், நம்பிக்கைகள் அல்லது விதிகள் போன்றவற்றில் பயிற்றுவித்தல் என்பதாகும். (2) போதித்தல் என்றும் பொருள்படும்.*

இதை மனதில் கொண்டிருந்தால், உபதேசத்தை வலியுறுத்துதல் என்பது தவறல்ல. அது சரியானதே. அது சரியானது மட்டுமல்ல. அது அவசிய மானதும் கூட. ஆனால், உபதேசத்தை உட்புகுத்துவதில் ஈடுபடுபவர்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவது, போதிக்கப்படுபவர்கள் உண்மை எது, தவறானது எது என்று தேட கட்டுப்பாடுகளை விதிப்பது போன்ற குற்றங்களைச் செய்யவேமாட்டார்கள் என்று பொருள்படாது. அப்படிப்பட்ட காரியங்கள் நிச்சயமாக சில வேளைகளில் நடக்கத்தான் செய்கிறது. நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போதும், போதிக்கும் போதும் அதைக் கேட்பவர்களுக்குத் தீங்கிழைக்கத்தக்க உபதேசத்தை உட்புகுத்தி குற்றம் செய்ய முடியும். நாம் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ள வேண்டு மென்று பவுலடியார் எச்சரிக்கிறார். சத்தியத்தைப் பல விதங்களில் பேச முடியும், போதிக்க முடியும், வெளிப் படுத்த முடியும். அதை அன்புடனும், கருணையுடனும் அறிவிக்க முடியும், அதே நேரத்தில் வெறுப்பாகவும், அகங்காரமாகவும், வாக்குவாதம் பண்ணுகிறவிதமாகவும் அறிவிக்க முடியும்.

தேவனுடைய கட்டளையின்படி மோசே இஸ்ரவேலர்களிடம் இவ்விதமாகச் சொன்னார். " *இன்று நான் உங்களுக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந் திருக்கிற போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி அவைகளை உன் கையின் மேல் அடையாளமாகக் கட்டிக் கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாய் இருக்கக்கடவது* " (உபா. 6:6-8).


இதுதான் உபதேசத்தை மனதில் பதிய வைப்பதாகும். இங்கே மோசே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உபதேசிக்க (உபதேசத்தை உட்புகுத்த) கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார். இங்கே மோசே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மூளைச் சலவை செய்ய வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லவில்லை. ஆனால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தேவனை உண்மையாகப் பின்பற்ற வேண்டுமென்று விரும்பினால் பிள்ளைகளுக்குப் போதித்து, பயிற்றுவித்து, வழிநடத்த வேண்டும் என்று வெளிப்படுத்துகிறார்.

சபையானது உபதேசத்தை ஏற்று நடக்கிற காரியத்தில் பரபரப்பாக இருக்க வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். மூப்பர்கள் போதிப்பவர்களாக உபதேசத்தை வலியுறுத்துகிறவர்களாக இருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 3:2). பவுல் தீமோத்தேயுவுக்குச் சொல்லும் போது " *நீ கேட்டவைகளை உனக்கு போதிக்கப்பட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி* " என்று சொல்கிறார் (2 தீமோத்தேயு 2:2). எபிரெயர் 5:12-ல் காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க (உபதேசத்தை உட்புகுத்துகிறவர்களாக) வேண்டிய சிலர், இன்னும் போதிக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் இருந்ததை நாம் காண முடியும்.

சபையின் பிரதான பணி பிரசங்கிப்பதும், போதிப்பதும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதுமே. வேறுவிதமாகச் சொன்னால், சபையின் பணி கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஜனங்களுக்குள் உபதேசமாக உட்புகுத்துவதாகும். இயேசு கிறிஸ்து நம்மிடம் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்ற கட்டளையைக் கொடுத்திருக்கிறார் (மாற்கு 16:15) இம்முழு உலகத்திற்குள்ளும் நாம் சுவிசேஷத்தை உட்புகுத்த வேண்டுமென்று அவர் கட்டளையிட்டிருக்கிறார் என்று சொன்னால் அது பொருத்தமாயிருக்கும்.

## இரட்சிப்பின் படிகள்

1. நற்செய்தியை கேட்க வேண்டும். (ரோமர் 10:17; யோவான் 20:20
2. விசுவாசிக்க வேண்டும் (எபிரெயர் 11:6; ரோமர் 3:28)
3. பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் (அப். 2:38; 17:30)
4. கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். (மத்தேயு 10:32; ரோமர் 10:10)
5. பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும். (அப். 2:38; 22:16)



# இரட்சகரும், ஆண்டவரும்

## SAVIOR AND LORD

Jack W. Carter

இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் காரியங்கள் இவ்வித மாகத்தான் இருந்திருக்கும் என்று நான் யூகிக்கிறேன். திரளான ஜனங்கள் அவர் தங்களுக்கு இரட்ச கராகத்தான் இருக்க வேண்டு மென்று விரும்பினார்கள். ஆனால், ஒரு சிலரே அவர் தங்களுடைய ஆண்டவராக இருக்க அனுமதிப் பார்கள். இயேசுவை நம் ஆண்ட வராக ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிற நம்மில் பலர் கூட நாம் வாழ்கின்ற வாழ்க்கையினால் அது பொய் யென்று நிரூபிக்கிறோம்.

நாம் இயேசுவை ஆண்டவ ராக ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதை தீர்மானிப்பது நாம் அவருடைய வழி நடத்துதலை எப்படிக் கனப்படுத்துகிறோம் என்பதுதான். எபிரெய எழுத்தாளர் தேவன் இந்தக்கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார் என்று சொல்கிறார் (எபிரெயர் 1:2). அடுத்த அதிகாரத்தில் ஆசிரியர் " முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்" என்றும் சொல்கிறார் (எபிரெயர் 2:3). இங்கே அவரிடத்தில் கேட்டவர் களாலே என்பது நிச்சயமாகவே அப்போஸ்தலர்களையும், சீஷர் களையும் தான் குறிக்கும். இதன் பொருள் புதிய ஏற்பாட்டின் வார்த்தை களெல்லாம் உண்மையாகவே தேவனுடைய வார்த்தைகளாயிருக் கிறது. இது நம்மை ஆச்சரியப்படுத் தக் கூடாது. ஏனென்றால், புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் ஏவப் பட்டதென்பதின் பொருள் " தேவன் மூச்சு விட்டார் என்று " நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறோம். எனவே, இயேசுவின் வார்த்தை களைக் கனப்படுத்துவதென்பது புதிய ஏற்பாடு முழுவதையும் கனப் படுத்துவதாகும்.

இயேசுவோடு நமக்கு இருக்கும் உறவில் ஏற்படும் முறிவு. அவருடைய வழிநடத்துதலைப்

பொறுத்தவரை நாம் எதைத் தெரிந்து கொள்ளுகிறோம் என்பதில்தான் ஏற்படுகிறது. இத்தகைய மனநிலை யானது நம் வாழ்க்கைக்கு இயேசு வல்ல, நாம் தான் ஆண்டவர் என்பதை எவ்வித விவாதமுமன்றி நிரூபிக்கிறது. அவருடைய வழி நடத்துதலுக்கு நாம் கீழ்ப்படிய மறுக்கும்போது உண்மையாக நாம் நம்முடைய சித்தத்தின்படி தான் செய்கிறோமே தவிர அவருடைய சித்தத்தின்படியல்ல.

இவை எல்லாவற்றிலும் மிகப் பெரிய மாயை என்னவென்றால் நம் மனம் போனபோக்கு தான். எப்படி யாவது இது நாம் விரும்பினதை நடப்பிக்கும் என்று நம்மை நாமே சம்மதிக்கச் செய்வது தான்.

நாம் இயேசுவின் ஆளுகை யையும் மிஞ்சி, இயேசு நம் ஆண்டவராக இருப்பதாக பாசாங்கு செய்து கொண்டு வாழ்க்கையில் பல காரியங்களைச் சாதித்து விடாலம். நம் வாழ்க்கையை யார் உண்மை யாகவே ஆளுகிறார் என்று இயேசு தீர்மனித்து நமக்குக் காட்டாத வரை நாம் விரும்புகிறதை வாழ்க்கையில் செய்து கொள்ளலாம். நம்முடைய வாழ்க்கையில் இயேசு இரட்சகராக இருக்கிறாரா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை இயேசுவுக்கு மட்டுமே உண்டு. இக்காரியத்தில் நாம் இயேசுவுக்கு மேல் செயல்பட்டுவிட முடியாது. எப்படியெனில், புதிய ஏற்பாட்டில், *உண்மையாகவே அவர் நம்முடைய ஆண்டவராக இல்லாத பட்சத்தில் நம்முடைய இரட்சகராக இருக்க முடியாது என்று தெளிவுபடுத்தி விட்டார்.*

## உன் இருக்கையில் யார் அமர்ந்திருப்பது

திங்கட்கிழமை காலையில், விசுவாசத்தில் பெலவீனமாயிருந்த ஒரு கிறிஸ்தவரை வழியில் சந்தித்தார் பிரசங்கியார். வீதியிலே ஒரு பிரசங்கம் நடக்கப் போகிறதென்பதை அறிந்த அந்தக் கிறிஸ்தவன், தன் தவறை உணர்ந்தவன் போல இவ்விதம் அறிக்கை செய்தான்.


கிறிஸ்தவன் : நேற்றைக்கு நான் உட்காரும் இடம் காலியாக இருந்திருக்கும் என்றான்.

பிரசங்கியார் : இல்லையில்லை, உன் இடம் காலியாக இல்லை என்றார்.

கிறிஸ்தவன் : அப்படியா? யார் என் இருக்கையில் அமர்ந்திருந்தது?

பிரசங்கியார் : சாத்தான் உன் இருக்கையில் இருந்தான். நான் அவனை மறுபடியும் பிடித்து விட்டேன் என்று என்னைப் பார்த்து சொன்னான்.

அந்தக் கிறிஸ்தவன் வெட்கப்பட்டு அடுத்த ஞாயிறு முதல் அவன் இருக்கையில் வந்து அமரத் தொடங்கினான்.



# இயேசு : மாபெரும் தொடர்பாளர்

## Jesus : The Master Communicator

Clarence Decoath.Jr

நாம் வாழும் உலகமானது முரண்பட்ட எண்ணங்கள், எதிர்மறை யான கொள்கைகள், மாறும் கலாச் சாரங்கள், குழப்பமான ஒழுக்க நெறிகள் போன்றவற்றால் நிரப்பப் பட்டிருக்கிறது. மனிதர்களுடைய மனப் போராட்டத்தில் பலவகையான காரணங்கள், செய்திகள் பரப்பப் பட்டிருக்கின்றன.

கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட பரப்புகின்ற வேலையில் ஈடுபட்டி ருக்கிறோம். நாம் அப்படிப்

பரப்பும் செய்தியானது தேவனுடைய மகிமை, கிருபை மற்றும் அன்பு பற்றியதாயிருக்கிறது. தேவன் பேசி யிருக்கிறார். அவர் சொன்னவை களை கேட்கப்பட்டு ஏற்றுக்கொள் ளப்பட வேண்டும்.

தேவனுடைய குமாரானகிய இயேசு கிறிஸ்து, தேவனிடத்திலி ருந்து மாம்சத்தில் வந்த கடைசி தொடர்பாளர் அவர் மாபெரும் தொடர்பாளராயிருந்தார். *அவர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அழைக்கப்பட்டார்* (யோவான் 3:2). அவர் தேவன் எப்படிப்பட்டவர் என்று அறிவித்தார். அவர் மனித இனம் எப்படிப் பரிபூரண ஜீவனை அடைய முடியும் என்றும் போதித்தார் (யோவான் 10:10).

இயேசு முதலில் அழைத்த அப்போஸ்தலர்களும், அழைக்கப் பட்டவர்களின் கூட்டமாகிய சபை யாரும் தொடர்பு கொள்ளும் வேலை களில் தங்களை ஈடுபடுத்தியிருந் தார்கள். இயேசுவை பின்பற்றின வர்கள் தங்கள் வார்த்தையாலும், மாதிரியாலும், வாழ்க்கையாலும் உலகத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். நாம் எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறோம்? நாம் கேட்கிறவர்களாயிருக்கிறோமோ? கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் காரியத்தில் நாம் சிறந்து விளங்கு கிறோமா?.

இப்படிப்பட்ட காரியங்களில் நம் எஜமான் எப்படி திறம்பட செயல் பட்டார் என்பதை நின்று ஆராய்ந்தால் அது நமக்கு உதவியாயிருக்கும் சாதாரண மக்கள் அவருடைய வார்த்தைகளை சந்தோஷமாகக் கேட்டார்கள். ஏன் அப்படி?

**1. ஏனென்றால் அவர் அவர்களில் ஒருவராக அடையாளங்காணப்பட்டார்.**

இயேசு கிறிஸ்து " தேவனு டைய குமாரன் ", அவர் எந்த ஒரு கூட்டத்தாரையும் சார்ந்திருந்து நன்மை செய்யவில்லை. அவர் சதுசேயருமல்ல அல்லது பரிசேயரு மல்ல. அவர் " *எல்லோருக்கும் ஊழியம்* " செய்யும்படி வந்தார்.

**2.ஏனென்றால் அவர் எந்த ஒரு வேறு பாட்டையும் காட்டவில்லை.**

நிறம், இனம், பணம், புகழ் போன்ற காரணங்களால் ஒருவரை உயர்வாக அவர் மதிக்கவில்லை. அவர் ஒவ்வொருவரையும் தேவ சாயலில் படைக்கப்பட்ட ஆத்துமாவா கவும், இரட்சிக்கப்பட தகுதியுள்ள ஒன்றாகவே பார்த்தார். அவரிடம் பட்ச பாதமில்லை. அவர் யூத அதிகாரி யான நிக்கொதேமுவை எப்படி நடத்தினாரோ அப்படியே அந்தக் கானானிய ஸ்திரீயையும் நடத்தினார்.

**3. ஏனென்றால் அவர் எல்லோருக்கும் ஒரு செய்தியை வைத்திருந்தார்.**

அது நம்பிக்கையற்றவர் களுக்கு நம்பிக்கையின் செய்தியாயி ருந்தது. அது அன்பில்லாதவர்களுக் கும், அன்பு செலுத்த முடியாதவர்க ளுக்கான அன்பின் செய்தியாயிருந் தது. அது துயரப்படுகிறவர்களுக்கும், காயப்படுத்தப்பட்டவர்களுக்கும் சமாதான செய்தியாயிருந்தது.

**4. ஏனென்றால் அவருடைய பேச்சில் எளிமை இருந்தது.**

அவருடைய மொழிநடை நேரடியாகவும், நடைமுறைக்கேற்ற தாகவும் இருந்தது. அவருடைய விளக்கங்கள் மற்றும் உவமை களெல்லாம் அன்றாட வாழ்க்கை முறையிலிருந்து எடுக்கப்பட்ட வைகள். அவருடைய எளிமையான வார்த்தைகளில் மிக ஆழமான கருத்துக்கள் புதைந்து கிடந்தன.

**5. ஏனென்றால் அவருடைய வாழ்க் கையும், வார்த்தையும் ஒன்றோடொன்று இசைவாயிருந்தது.**

"*அவர் செய்யவும் உபதேசிக் கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து* " என்று லூக்கா எழுதியிருக் கிறார் (அப்போஸ்தலர் 1:1). சத்துருக் களை சிநேகிக்கும்படி அவர் போதித் தார். அவர் அப்படியே செய்தார்! அவர் நமக்கு மன்னிப்பைப் போதித் தார் - அவர் அப்படியே செய்தார்! வல்லமையான பிரசங்கத்திற்கு மாபெரும் தடையாக நமக்கு இருப்பது மாயமாலம் தான். நாம் இவ்வுலகில் அவருடைய குரல்களாயிருக்கிறோம்! நாம் மற்றவர்களுக்குத் தென்படுகி றோமா? நாம் கேட்கப்படுகிறோமா? நம்மால் செய்தியை மேம்படுத்த முடியுமா? நாம் சிறந்த முறையில் தேவனுடைய வார்த்தைகளை அறிவிக்க இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப்பின்பற்ற உறுதி எடுத்துக்கொள்வோம்.

## ஏன் இப்படி?

**ந**ம் வாழ்க்கையில் பிரச்சனை எழும் போது, நாம் அடிக்கடி கேட்கும் கேள்வி தேவன் அதை ஏன் எனக்கு அனுமதித்தார்? ஆனால், உலகத்திலுள்ள எல்லாத் தீமை களுக்கும் அடிப்படைக் காரணமாகிய உண்மையான குற்றவாளியாகிய சாத்தானை ஏன் பலர் சந்தேகிப்பதில்லை?.



# காயீன் தன் மனைவியை எங்கிருந்து பெற்றான்

## WHERE DID CAIN GET HIS WIFE?

**Keith Sisman**

**கி**றிஸ்தவர்களிடம் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி, " *காயீன் தன் மனைவியை எங்கேயிருந்து பெற்றான்?* " என்பது. இக்கேள்வியானது பழைய ஏற்பாட்டில் முரண்பாடுகள் இருப்பதாக குற்றஞ்சாட்டி வேதாகமத்தையும், கிறிஸ்தவனையும் பரியாசம் செய்வதற்காகவே கேட்கப் படுகிறது. பெரும் பாலும் இக்கேள்வி கேலியாகக் கேட்கப்பட்டாலும், நாம் கொடுக்கும் பதிலானது வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்ட தென்றும், நவீன விஞ்ஞானத்தோடு அது எப்படி ஒத்துப்போகிறதென்றும் காட்டுவதற்கு ஆதரமாக இருக்க முடியும்.

இந்தக் கேள்வி ஏன் மிகவும் முக்கியமானது என்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது: ஏனென்றால், ஆதாமினாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்து (ஆதியாகமம் 3:3-19; ரோமர் 5:10;1 கொரிந்தியர் 15:45), ரோமர் 3:23-ல், எல்லோரும் பாவம் செய்தார்கள் என்று கற்றுக்கொள்கிறோம். ஆதாம் ஏவாளுடைய அத்துமீறுதலினாலே மனுக் குலம் இரட்சிக்கப்படும்படியாக, தமது ஜீவனை பலியாகக் கொடுக்கக் கூடிய இன்னொரு " ஆதாம் " தேவைப்படுகிறது.

(1 கொரிந்தியர் 15:21; 22-45). இந்த வசனங்கள் மூலமாக ஆதாமின் சந்ததியார் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் என்று கற்றுக்கொள்கிறோம்! நாம் ஆதாமின் சந்ததியாய் இல்லாவிட்டால் நாம் இரட்சிக்கப்படமுடியாது!

இப்போது வேதாகமம் எல்லா மனிதர்களும் பாவிகளென்று விவரிக்கிறது. எல்லா மனிதர்களும் ஆதாமின் மனைவியாகிய ஏவாளைத் தவிர முதல் மனிதனாகிய ஆதாமின் சந்ததியர் என்றும் விவரிக்கிறது (ஆதியாகமம் 3:20; அப்போஸ்தலர் 17:26).

எனவே, மேற்சொல்லப்பட்ட வசனங்களினாலே காயீனுடைய மனைவியும் ஆதாம் ஏவாளின் சந்ததி என்பதை நாம் உறுதி செய்யலாம். ஆதாம், ஏவாளுக்கு நாம் அறிந்திருக்கிற குமாரர்களாகிய காயீன் ஆபேல் மற்றும் சேத் அல்லாமல் வேறு அநேக குமாரர்களும், குமாரத்திகளும் இருந்தார்கள் (ஆதியாகமம் 5:4).

காயீனுடைய மனைவி அவனுடைய சகோதரியாக இருந்திருக்காவிட்டால் கூட மிக நெருக்கமான உறவின்முறையாக இருந்திருக்க வேண்டும். காயீன் தன் சகோதரியையோ அல்லது சகோதரியின் மகளையோ விவாகம் பண்ணியிருந்திருந்தாலும் அக்காலக் கட்டத்தில் அது தவறாக இருந்திருக்காது. நெருங்கின உறவினர்களை விவாகம் செய்யக்கூடாது என்கிற மோசேயின் பிரமாணம் அதன் பிறகு சுமார் 2500 ஆண்டுகள் கழித்துத் தான் கொடுக்கப் பட்டது. ஆபிரகாம் தன் பாதி சகோதரியாகிய சாராளை விவாகம் பண்ணி னான். ஆனால், இது மோசேயின் காலத்திற்கு முன்பு நடந்தது. காயீனும் அவனுடைய மனைவியும் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் திருமண சட்டத்தால் மட்டும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார்கள் (ஆதியாகமம் 2:24;19;4-6; 1 கொரிந்தியர் 7:2).

இப்போது அவிசுவாசிகள் கேட்கும் மிகப்பெரிய கேள்வி மரபணு சம்மந்தமான குறைபாடுகளைப் பற்றித்தான், அதாவது, விஞ்ஞானத்தின் உதவியால் வேதாகமம் தவறு என நிருபிக்க முயற்சிக்கிறார்கள். ஆனால், இதைப்பற்றி விஞ்ஞானம் என்ன சொல்கிறது?.

ஆதாமும் ஏவாளும் மிகச்சிறந்த முழுமையான மாதிரிகளாக சிருஷ்டிக்கப்பட்டார்கள் (ஆதியாகமம் 1:31). அவர்களுடைய மரபணு கலவையைப் பார்த்தால், கலப்பினச் சேர்க்கை என்பது ஒரு பிரச்சனையே அல்ல. தற்கால உயிரியல் சாட்சியங்கள் இந்த உண்மைகளை ஆதரிக்கின்றன.

ஒட்டுமொத்த மனித இனமும் ஒரே மாதிரியானதுதான். நாம் எவ்வித பிரச்சனையுமின்றி கலப்பினச் சேர்க்கை செய்யலாம். மிக எளிய முறையில் ஆராய்ந்து பார்த்தால் கூட நம் புவியியல் அமைப்பு, நிறப்பாகுபாடின்றி

நாமெல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறோம் என்பது கண்டறியப் பட்டுள்ளது. 1987ல் அமெரிக்க விஞ்ஞானிகள் பல இனக்கூட்டத்திலுள்ள பெண்களுடைய மரபணுக்களை ஆராய்ந்து பார்த்ததில் அவைகளெல்லாம் கிட்டத்தட்ட ஒரே மாதிரி அடையாளம் காணப்படத்தக்கதாயும் இருந்தபடியால், நாமெல்லோரும் ஒரே பெண்ண ஏவாளிடமிருந்து வந்தோம் என்று முடிவுக்கு வந்தார்கள். ஆனால், அந்த பெண்ணுக்கு காலம் அதிகபட்சமாக இரண்டு லட்சமாக குறிந்திருக்கிறார்கள்.

அதேபோல் எல்லா ஆண்களும் தங்கள் தகப்பன்மார்களிடமிருந்து வழிவழியாக சுதந்தரித்துக் கொள்ளும் Y குரோமோசோம்களை உடையவர் களாக இருக்கின்றனர். 1995-ல் மேற்கொண்ட ஓர் ஆராய்ச்சியில் இனப் பின்னணி பாகுபாடற்ற முறையில் ஆண்கள் எல்லோருமே மரபணுக்களை எடுத்துச் செல்லும் Y குரோம்சோம்களை உடையவர்களாயிருக்கிறார்க ளென்றும், எல்லோரும் ஆதாமிடத்திலிருந்து வந்தவர்களென்றும் கண்டறி யப்பட்டுள்ளது!.

இரசாயன மாற்றங்களின் அடிப்படையிலான மக்கள் தொகை கணக் கெடுப்பின் விஞ்ஞானம் எளிதான கணக்கின் மூலமாக உலக மக்கள் தொகை கடந்த 4500 - 5000 வருடங்களில் தான் உயர்ந்திருக்கிறது என்று முடிவுக்கு வந்துவிடலாம் என்று காட்டியிருக்கிறது. இது ஆதியாகமம் 6-8 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிற உலகளாவிய ஜலப்பிரளய காலக்கட்டமாகத்தான் இருக்கிறது. மக்கள் தொகை வளர்ச்சி அதற்கு முன்பு கணிசமாக இருந்திருந்தால் இப்போதிருக்கின்ற மக்கள் தொகை அடர்த்தி அளவை பல வருடங்களுக்கு முன்பே அடைந்திருக்கும். இந்த கால அளவு மனித இனம் வரலாற்றுப் பூர்வமாக தோன்றியதை தொல்பொருள் ஆராய்ச்சிகளும், நாகரீக சான்றுகளும் வெளிப்படுத்தின திலிருந்து கணக்கிடப்பட்டுள்ளது என்பதை கவனிப்பது சுவாரஸ்யமானது.

ஆம், உண்மையாகவே, ஆதாமும், ஏவாளும் வாழ்ந்தார்கள்! பின்னணி பாகுபாடின்றி ஒட்டுமொத்த மனித இனமும் அவர்களிடத்தி லிருந்து வந்தது தான்; மேலும் காயீன் தன் சகோதரியையோ அல்லது நெருக்கமான உறவினரையோ தான் திருமணம் செய்திருக்கிறான்; ஆம், மனிதன் சமீபத்தில் தோன்றியவன்தான்.

வேதாகமம் நிரூபிக்கப்பட்ட உயிரியல், விஞ்ஞான மற்றும்ம வரலாற்று உண்மைகளோடு முரண்படுவதில்லை. மனித இனம் சிருஷ்டிக் கப்பட்ட விவரங்களை நாம் வேத வசனங்களில் வாசிக்கும்போது அது சிருஷ்டிகருடைய வார்த்தைகளாகவே இருக்கிறபடியால் அதுமாத்திரமே அர்த்தமுள்ளதென்று நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும்.

# தேவனுடைய ஒளி ஏற்றப்படவேண்டும்

## *GOD' S LIGHT MUST BE TURNED ON*

***Hollis Miller***

வேதாகம அறிவு எவ்வளவு முக்கியமானது? அல்லது இதே கேள்வியை வித்தியாசமாக கேட்க வேண்டுமென்றால், மனிதர்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வது எவ்வளவு முக்கிய மானது?

" *என் ஜனங்கள் அறிவில்லா மையினால் சங்காரமாகிறார்கள்*" (ஓசியா 4:6) என்று ஓசியா தீர்க்கதரிசி சொன்னார். ஏசாயா " *என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப் பட்டுப்போகிறார்கள்* " (ஏசாயா 5:13) என்றார். தேவனுடைய சித்தத்தைப் பற்றிய அறிவு மிகவும் முக்கிய மானது. அதனால் தான் இயேசு தாம் கட்டளையிட்ட யாவும் தம்முடைய சீடர்களுக்கு உபதேசிக்கப்பட வேண்டுமென்று விரும்பினார் (மத்தேயு 28:20). எபிரெய எழுத்தாளர் தன்னுடைய நிருபத்தை யாருக்கு எழுதினாரோ அவர்கள் தேவ அறிவில் வளராமல் குழந்தை களாகவே இருந்தபடியால் அவர் களைக் கடுமையாகக் கடிந்து கொண்டார் (எபிரெயர் 5:11-6:2).

தேவனுக்கான சேவை வேதாகம அறிவிலிருந்து ஒருவரு டைய செயல்பாட்டிற்கு கடந்து செல் கிறது. செயல்பாட்டிலிருந்து வேதாகம அறிவிற்கு அல்ல. தேவன் தம்மு டைய சித்தத்தை மனிதர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்கிற உண்மையானது தங்கள் சுய ஞானத் தினாலே தீர்மனங்களை எடுக்கும் மனிதர்கள் மீது அவருடைய தயவு இருக்காது என்பதற்குச் சான்றாயி ருக்கிறது.

ஒருவர் தேவ அறிவை எப்படி பெற்றுக்கொள்கிறார்? பவுல் இக் கேள்வியை முன்னறிந்தாரோ என்னமோ தெரியவில்லை. ஆனா லும், அதற்கான பதிலைத் தருகிறார். "*வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவ னாகவும் எந்த நற்கிரியையுஞ் செய் யத்தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் உபதேசத் துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப் பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ள வைகளாயிருக்கிறது* " (2 தீமோத் தேயு 3:16-17). உலகப்பிரகாரமான அறிவானது ஆராய்ச்சி மூலமாகவும் மனித எண்ணங்கள் மூலமாகவும் பெற்றுக்கொள்ளக்கூடியது. ஆனால், தேவ சித்தத்தைப்பற்றிய அறிவை தேவனுடைய வார்த்தையை ஆராய்வதனால் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

வேதாகமமானது மற்றெந்த புத்தகத்தையும் விட கருத்தோடும், பக்தியோடும் வாசிக்கப்பட வேண்டும். ஏனென்றால், எபிரெய எழுத்தாளர் அறிவித்த விதமாக " *தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது* " (எபிரெயர் 4:12). நம் வாழ்க்கைப் பயணத்தில் இப்படிப்பட்ட உருவக்குத்துதல் நம்மை தேவனிடத்திற்கு வழி நடத்துகிறதாக இருக்கிறது. உண்மையாகவே தேவனுடைய வார்த்தை நம் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது (சங்கீதம் 119:105); ஆனால், நாம் அந்த ஒளியை ஏற்றும் போது தான் நம் பாதையில் அது ஒளி வீசும்.

## விருப்பமும், வாஞ்சையும் இல்லை

பலர் வேத வசனங்கள் தங்கள் மனதில் நிற்பதில்லை, மறந்து போகிறது என்று சொல்வதை நாம் கேட்டிருப்போம். அதற்காக நீங்கள் உங்கள் மூளையை குற்றப்படுத்தாதீர்கள். ஆராய்ச்சியாளர்கள் மனித மூளையில் கோடிக்கணக்கான தகவல்களை சேமிக்க முடியும், மூளைக்கு அந்தத் திறன் இருக்கிறது என்று சொல்கிறார்கள். மூளையின் திறனில் நம்மில் பெரும்பாலானோர் 10–15% மட்டுமே பயன்படுத்துறோம்.

நம்மில் பலர் விளையாட்டுப் போட்டிகளின் புள்ளி விவரங்களை விரல் நுனியில் வைத்திருக்கிறோம், சமையல் குறிப்புகளை, பொருட்களின் விலையை மறக்காமல் மனதில் வைத்திருக்கிறோம். ஆனால், வேத வசனங்களை நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை என்று சொல்கிறோம். இதற்கெல்லாம் கரணம் தேவனுடைய வார்த்தைகளின் மீது விருப்பமும், வாஞ்சையும் இல்லாததுதான்!.

# அதைப் பற்றி எனக்கு தெரிந்ததெல்லாம் அவ்வளவுதான்

## THAT IS ALL I KNOW ABOUT IT

**David R. Pharr.**

நம்முடைய பலத்தினாலே அல்லது திறமையினாலே தேவ னுடைய சிந்தையை நாம் ஒரு போதும் அறிந்து கொள்ள முடியாது என்பதைக் காட்டு வதற்காக ஏசாயா 64:4 வசனத்தை மேற்கோள் காட்டுகிறார். " தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவு மில்லை, காது கேட்கவுமில்லை அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை " என்று (1 கொரிந்தியர் 2:9).

" நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத் தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களை யும் ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன்



*மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசி ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்மந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்* " (1 கொரிந்தியர் 2:10,11,13). இந்த வார்த்தைகள் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடைய மனதிலிருப்பவைகளைச் சொல்லாமல் அறிய முடியாது என்று நினைவுபடுத்துகிறது. அவனுடைய ஆவியால் மட்டுமே அவனுடைய சிந்தையை அறிய முடியும். அதே போல், தேவனுடைய ஆவியால் மட்டுமே தேவனுடைய சிந்தையை ஒரு மனிதனால் அறிந்து கொள்ள முடியும்.

இங்கே அப்போஸ்தலனால் வலியுறுத்தப்படுகிற கருத்து என்னவென்றால், பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறவைகளால் மட்டுமே தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வது நமக்கு சாத்தியம் என்பது தான். அதற்கு ஒத்த வசனப்பகுதியில், முற்காலங்களில் மனிதர்களுக்கு அறிவிக்கப்படாத காரியங்கள் இப்போது அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறுகிறது (எபேசியர் 3:5). நாம் தேவனுக்குரியவைகளைத் தேவ ஆவியினால் ஏவப்பட்ட வசனங்களின் வெளிப்பாட்டினால் கற்றுக்கொள்ள முடியும் (2 தீமோத்தேயு 3:16-17).

மத சம்மந்தமான விவாதங்கள் சில வேளைகளில் யூகக்கேள்விகளுக்கு வழிவகுக்கும். ... நீங்கள் இப்படி நினைக்கிறதில்லையா.. இது சாத்தியமா? போன்றவைகள் யூகத்தின் அடிப்படையிலான கேள்விகள் தான். வேதாகம பதிலை எதிர்பார்க்கும் கேள்விகள் நியாயமானது தான் ஆனால், வெறுமனே அபிப்பிராயத்திற்காக கேட்கப்படும் கேள்விகள் உபயோகமற்றதாயிருக்கிறது. உண்மையில் தேவன் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு மாற்றான ஒன்றை உற்சாகப்படுதும் எந்த ஒரு அபிப்பிராயமும் நமக்குப் பெருத்த தீங்கை விளைவிக்கும் (1தீமோத்தேயு 6:4) தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும் குறித்து எச்சரிக்கிறது. மறுபடியும் பவுல் '*புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்களை விட்டு விலக வேண்டுமென்று*' சொல்கிறார் (2 தீமோத்தேயு 2:23).

தங்களை ஞானிகளென்று காட்டிக்கொள்ள விரும்புவர்கள் மட்டுமே பதிலளிக்க முடியாத் கேள்விகளுக்குப் பதிலளிக்க முற்படுவர். சிலர் கர்த்தர் இப்படிச் சொல்கிறார் என்று சொல்வதை தவிர்ப்பதற்காகப் பல வழிகளை யூகிப்பார்கள். ஆனால், தேவனுடைய வார்த்தைகளை மட்டும் போதிக்கும் ஓர் உண்மையுள்ள

போதகர் வேத வாக்கியங்களைச் சுட்டிக் காட்டுவதில் திருப்தியாகி அதைப்பற்றி எனக்குத் தெரிந்த தெல்லாம் அவ்வளவு தான் என்று சொல்வார்.

உதாரணமாக, விவாகரத்து மற்றும் மறுவிவாகம் பற்றி எண்ணற்ற கேள்விகள் எழும்புகின்றன. நாம் ஒத்துக்கொள்ளும் வகையில் சில வேளைகளில் மிகக் கடினமான சிக்கலான சூழ்நிலைகள் உருவாகின்றன. ஆனால், " அப்படியிருந்தால் ", "அதுபோல் தோன்றுகிறது' போன்றவைகளெல்லாம் சொல்லப்பட்ட பிறகு அங்கே இருக்கும் உண்மை, வேதாகமம் என்ன சொல்கிறதோ அது மட்டுமே எனக்குத் தெரியும் என்பதாயிருக்கிறது. மத்தேயு 19:9-ல் இயேசு பேசின பிரச்சனை என்னவென்றால் ஜனங்கள் அதை ஏற்றுக் கொள்ள விரும்புவதில்லை. இயேசு இந்த வார்த்தைகளைப் பேசினபோது சுற்றிலும் இருந்தவர்கள் அவருடைய வார்த்தைகளை கடினமான ஒன்றாகக் கண்டார்கள். அப்போது இயேசுவின் பதில் என்னவாக இருந்தது? "*வரம் பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக் கொள்ளக்கடவன்* " என்றார் (மத்தேயு 19: 11-18). இயேசு கிறிஸ்துவே, பிதாவானார் என்ன கட்டளையிட்டிருந்தாரோ அதை மட்டுமே பேச அனுமதிக்கப்பட்டிருந்தார் (யோவான் 12:49).

அதுபோல் இரட்சிப்பின் திட்டம் பற்றியும் பல விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமல் மரிக்கும் நேர்மையான ஒரு நபரின் நித்திய வாழ்வு பற்றிக் கேள்விகள் எழுப்பப்படலாம். விவாதங்கள் உணர்வுப் பூர்வமாகவும், தர்க்க ரீதியாகவும் இருக்கலாம். ஆனால், நான் வேதாகமத்தை வாசிக்கும் போது, அவைகளிலுள்ள கட்டளைகள், வாக்குத்தத்தங்கள், எச்சரிக்கைகள் பற்றி மட்டுமே அறிந்து கொள்கிறேன். வேறொன்றையும் நான் பார்ப்பதில்லை.

நாம் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணாமலிருக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம். (1 கொரிந்தியர் 4:6). வேதாகமக் கல்வியைப்பற்றியும், விவேகம் பற்றியும், திறமையைப் பற்றியும் அதிகமாக வலியுறுத்தப்படுகிறது. வேத வசனங்களைப் படிப்பதற்கும், போதிப்பதற்கும் இது உதவியாக இருக்கலாம். ஆனால், ஆவிக்குரிய அறிவானது வேதாகமத்தில் ஆரம்பமாகி வேதாகமத்திலேயே முடிகிறது.

ஒருவருக்கு உலகப் பிரகாரமான அறிவு அதிகமாக இருக்கலாம். அல்லது அதிகமாக இருப்பதாக நினைத்துக் கொள்ளலாம். உலக அறிவை நாம் பல ஆதாரங்களிலிருந்து கற்றுக்கொள்ளலாம். ஆனால், நித்தியம் பற்றிய ஆவிக்குரிய சத்தியத்தை வேதாகமத்திலிருந்து மாத்திரமே நம்மால் கற்றுக் கொள்ள முடியும். காரியத்தின் கடைத்தொகை என்னவென்றால், " இதைத்தான் வேதாகமம் சொல்கிறது. மற்றது பற்றி எனக்குத் தெரிந்ததெல்லாம் அவ்வளவுதான்"! என்பதே.

# தேவனுடைய இழுக்கும் சக்தி

## GOD'S DRAWING POWER

*W. Douglass Harris*

" என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன். " எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே. ஆகையால், " *பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்* " (யோவான் 6:44,45).

பாவியான மனிதனை தேவன் எப்படி தம்மிடத்தில் இழுத்துக் கொள்கிறார்? இதை ஓர் இரகசியமான, எதிர்பார்ப்புக் காட்ட முடியாத, முன்னதைக் காட்டிலும் சிறந்தது என்று உணரக்கூடிய வழி முறையில் செய்கிறாரா? நம் வசனப்பகுதியின்படி, பழைய ஏற்பாடு தீர்க்கதரிசிகள் குறிப்பிட்டுள்ளதுபோல போதனையின் மூலமே நடக்கிறது. அப்படியனால், தேவன் பாவிகளை தம்மிடத்தில் இழுக்கத்தக்க போதனை என்ன? பதில்: இந்த போதனையைத்தான் பரிசுத்த வாக்கியங்கள் " *சுவிசேஷம்* " என்றழைக்கின்றன. இப்போது " *சுவிசேஷம்* " என்கிற வார்த்தையை தனித் தனியாகப் பிரித்து அதன் பொருள் என்ன என்பதையும் தேவன் மனிதர்களை எப்படித் தம்மிடத்தில் இழுத்துக் கொள்கிறார் என்பதையும் கற்றுக் கொள்வோம்.

### நற்செய்தி :

கிட்டத்தட்ட எல்லோருமே அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி, வேறு மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி *சுவிசேஷம்* என்றால் " *நற்செய்தி* " என்பதை அறிந்திருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டில் அது "evangelion" என்னும் கிரேக்க பதத்திலிருந்து மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளது. இது, கிறிஸ்து பற்றியும், அவரால் சாத்தியமாயிருக்கிற இரட்சிப்பு பற்றிய நற்செய்தியாயிருக்கிறது. இந்த மகிமையான சுவிசேஷந்தான் இயேசுவின் பிறப்பின் போது மேய்ப்பர்களுக்கு தேவ தூதர்களால் அறிவிக் கப்பட்டது (லூக்கா 2:8-14). இது, நல்ல ஆலோசனையை விட மேலானது; இது எப்படி ஒரு சாவி, ஒரு பூட்டுக்குப் பொருத்தமாயிருக்கிறதோ அதேபோல் இந்த நற்செய்தி நம் ஆவிக்குரிய தேவைகளெல்லாவற்றிற்கும் பொருத்த மாயிருக்கிறது. இந்த நற்செய்தி ஆபிரகாமுக்கு வாக்குதத்தமாக பிரசங்கிக் கப்பட்டது (கலாத்தியர் 3:8).

### தேவகிருபையில் ஆரம்பமானது :

இது " *கிருபையுள்ள வசனமாக* " அழைக்கப்படுகிறது (அப்போஸ்தலர் 14:3). பவுல், தான் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட கட்டளையானது *தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படியாக* கொடுக்கப்பட்டது என்று உறுதி செய்கிறார் (அப்போஸ் தலர் 20:24). இந்த தேவனுடைய கிருபையானது அவருடைய அன்பின் விளைவாக இருக்கிறபடியால் யோவான் " *தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்* " என்று சொல்கிறார் (யோவான் 3:16). எனவே, இந்த சுவிசேஷம் தேவனுடைய கிருபையை ஆதாரமாகக் கொண்டது (யோவான் 1:17), ஆனால், இது தேவனுடைய கிருபையால் உண்டானபடியால் இரட்சிப்பு நிபந்தனையற்றது என்று முடிவுக்கு வருவது தவறாகும். இது மனிதன் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு உட்பட வேண்டிய நிபந்தனைகளைச் சுட்டிக்காட்டுகிற வசனப்பகுதிகளை அவமாக்குகிறது.

### எளிமையானது, ஆனால், மிக ஆழமானது :

சுவிசேஷமானது விசுவாசிக்கும்படியான எளிய உண்மைகளை உள்ளடக்கியது (1 கொரிந்தியர் 15: 1-8). கீழ்ப்படியும்படி எளிய கட்டளைகளை உள்ளடக்கியது (அப்போஸ்தலர் 2:38; மாற்கு 16:16; மத்தேயு 7:21). புரிந்து கொள்வதற்கு எளிய மகிமையான வாக்குத்தத்தங்களை உள்ளடக்கியது (மாற்கு 16:16; 1 பேதுரு 4:17; 2 தெசலோனிகேயர் 1:6-9).

### இரட்சிக்கத்தக்க வல்லமையுடையது:

பவுல், சுவிசேஷமானது இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக் கிறது என்கிறார். (ரோமர் 1:16). ஒரு விசுவாசி அதற்குக் கீழ்ப்படியும்போது அது அவரை பாவத்தின் கொடுமை, பழக்கவழக்கம் மற்றும் குற்ற உணர்வி லிருந்து இரட்சிக்கிறது. பவுல் எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்கள் *இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக்கேட்டு* விசுவாசிகளானதை அவர் களுக்கு நினைப்பூட்டினார் (எபே. 1:13). இந்த சுவிசேஷம் வல்லமையானது ஏனென்றால், அது தேவனுடைய அன்பையும் தியாகத்தையும் வெளிப் படுத்துகிறது. இதேபோல் சுவிசேஷத்திற்கு விரோதமாக இருதயத்தை கடினப்படுத்தாதபடி பரிசுத்த ஆவியின் புத்திமதியையும் வெளிப்படுத்து கிறது (எபிரெயர் 3:7-8).

### அதன் ஆசீர்வாதங்களிலும், நன்மைகளிலும் நித்தியமானது:

" *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர் இயேசு கிறிஸ்து மரித்தோரி லிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்* " (1 பேதுரு 1:4).

வேறெந்த சுவிசேஷமும் இத்தகைய நன்மைகளைக் கொண்டு வராது (கலாத்தியர் 1:8-9; 2 யோவான்) அந்த சுவிசேஷத்திற்கு தொடர்ச்சியாகக் கீழ்ப்படிவது இவ்வுலகில் மாபெரும் மகிழ்ச்சியைக் கொண்டுவந்து கடைசியாக பரலோகத்திற்கும் நம்மை அழைத்துச் செல்லும் (கொலோசெயர் 1:23).

## அது சர்வ சிருஷ்டிக்கும் அறிவிக்கப்படட்டும்: (மாற்கு 16:15)

சுவிசேஷம் என்பது சுயநலத்துடன் நமக்குள்ளேயே வைத்துக் கொள்ளும்படியான ஒரு பொருளல்ல. சுவிசேஷம் என்பது சுயநலத்துடன் பகிர்ந்து கொள்வதற்காக நமக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்தினால் தான் பவுல் மிக ஆர்வத்துடன் சுவிசேஷத்தை அறிவிக்கிறவராக இருந்தார். ஏனென்றால், அவர் அதை தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட ஒன்றாக கருதினார் (1தீமோத்தேயு 1:11). அதனால் தான் தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட சுவிசேஷத்தைக் காத்துக் கொள்ளுமாறு தீமோத்தேயுவிற்கு கட்டளையிடுகிறார் (1தீமோத்தேயு 6:20).

முடிவுரை : இந்த சுவிசேஷந்தான் தேவனுடைய இழுக்கும் சக்தியாக தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தியாக இருக்கிறது (யோவான் 6:44,45; 12:32). தயவு செய்து ஆழ்ந்த சிந்தனையுடன் “Alexander Cruden” என்பவருடைய மேற்கோளை வாசியுங்கள்.

சுவிசேஷமானது விழுந்து போன மனிதனுக்கு மத்தியஸ்தர் மூலமாக கொடுக்கப்படும் தேவனுடைய கிருபையின் வெளிப்பாடாயிருக்கிறது அல்லது அது விழுந்து போன பாவமான மனிதனை அந்த மோசமான நிலையிலிருந்து மீட்டெடுக்க அவருடைய சொந்தக் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பி அவருடைய மரணத்தினாலே பாவ நிவாரண பலியை ஏற்படுத்தி, அதன் மூலமாக மனிதனுக்குத் தேவ தயவை உண்டாக்கி, விசுவாசித்து மனந்திரும்பி, சுவிசேஷ இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு நித்திய மகிழ்ச்சியை அளிக்கும் ஞானமும் பரிசுத்தமுமான தேவனுடைய கிருபையுள்ள வார்த்தைகளாயிருக்கிறது. ❁

**தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர் கர்த்தர் கிருபையையும், மகிமையையும் அருளுவார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.**

**சேனைகளின் கர்த்தாவே உம்மை நம்பி இருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்கீதம் 84:11,12)**

# அழைக்கப் பட்ட கிறிஸ்தவர்கள்

## *Called Christians*

***Leon Barnes***

" **கி**றிஸ்தவன் " என்னும் பதம் தேவனுடைய வார்த்தையில் மூன்று முறைதான் வருகிறது. பெரும்பாலும் கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள் "சீடர்கள் " அல்லது " சகோதரர்கள் " என்று தான் குறிப்பிடப்பட்டார்கள். ஆயினும், அது எந்தவிதத்திலேயும் அதன் முக்கியத்துவத்தை எடுத்துப் போடாது. அவ்வார்த்தைக்கு இருக்கும் வல்லமையையும், அர்த்தத்தையும் வேறெந்த வேத வாக்கியமும் தரமுடியாது.

" கிறிஸ்தவன் " என்கிற பதம் முதன்முதலாக அப்போஸ்தலர் 11:26-ல் பயன்படுத்தப்பட்டது. பேதுரு அப்போஸ்தலர் 10 ஆம் அதிகாரத்தில் கொர் நேலியுவின் குடும்பத்தாருக்குப் பிரசங்கிக்கும்படியாகக் கர்த்தரால் அழைக் கப்பட்டார். கொர்நேலியு ஒரு புறஜாதி மனிதனாக இருந்தான். பேதுரு கொர் நேலியுவை சந்திப்பதற்கு முன்பு வரை கிறிஸ்துவின் செய்தியானது இம்முழு உலகத்திற்குமானது என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருந்தார். அப்போஸ் தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லும் போது கிறிஸ்துவின் செய்தி உலக முழுவதிற்குமானது என்கிற எண்ணமில்லாமல் தான் இருந்தார். ஆனால், அவர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுத்தான் பேசினார். பேதுரு என்ன எண்ணினாரோ அல்லது விசுவாசித்தாரோ அதோடு அவர் என்ன பிரசங்கித்தாரோ அது இசைவாயிருக்கவில்லை. பேதுரு கொர்நேலியுவினிடத்திற்குப் போய் அவருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க தேவன் அவருக்கு ஒரு தரிசனத் தைக் காட்ட வேண்டியதாயிருந்தது. அதன் விளைவாக, கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 11 ஆம் அதிகாரத்தில் யூதர்களாயி ருந்து கிறிஸ்தவர்களானவர்களிடத்தில் பேதுரு திரும்பி தான் புறஜாதிகளி டத்தில் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதை ஆதரித்துப் பேசுகிறார். அதற்குப் பிறகுதான் சீஷர்கள் அந்தியோகியாவுக்குப் போய் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மற்ற புறஜாதிகளுக்கும் பிரசங்கித்தார்கள். "*கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது; அநேக ஜனங்கள்*

*விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்* " (அப். 11:21). எருசலேம் பட்டணத்து சபையானது பர்னபாவை அந்தியோகியாவரைக்கும் நடந்தவை களைப் பார்வையிடும் படியாக அனுப்பினார்கள்.

அதன்பின்பு பர்னபா சவுலைக் கண்டறிய தர்சுவுக்குப் போய் ஊழியத்தில் உதவி செய்யும்படியாகக் கொண்டு வருகிறார். அவர்கள் ஒரு வருஷ காலமாய் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். " *முதல் முதல் அந்தியோகியாவிலே, சீஷர் களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று* " (அப்போஸ்தலர் 11:26). கிறிஸ்தவன் என்னும் பெயர், சபையானது எல்லா பின்னணியைச் சார்ந்தவர் களுக்கும் திறந்து விடப்பட்ட பிறகுதான் கொடுக்கப்பட்டது என்பதால் நிச்சயமாகவே இது முக்கியத்துவம் வாய்ந்தது. முன்பு கிறிஸ்துவின் செய்தி யையும், கிறிஸ்துவைப் பின்பற்றினவர்களையும் யூதமார்க்கத்தின் கிளை களாக மக்கள் பார்த்தார்கள். இப்போது சுவிசேஷம் முழு உலகத்திற்கும் பரவியது. ஆகவே, அவர்களை மற்ற மதப் பின்னணியிலிருந்து பிரித்துக் காட்ட கிறிஸ்தவன் என்கிற பெயர் கொடுக்கப்பட்டது. அது உலக இரட்சகரா கிய இயேசு கிறிஸ்துவின் பெயரை யார் தரித்திரக்கிறாரோ அவர் கிறிஸ்து வுக்கு எல்லாவிதத்திலும் உண்மையாயிருக்க வேண்டும் என்பதைத்தான் அறிவிக்கிறது. கிறிஸ்தவன் என்கிற பெயர், நாங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள். " நாங்கள் அவரைப் பின்பற்றுபவர்கள் அவருடைய சீஷர்கள் என்பதை உலகிற்குப் பறைசாற்றியது".

கிறிஸ்தவன் என்கிற பெயர் இரண்டாவது முறையாக அகிரிப்பா ராஜாவால் பயன்படுத்தப்பட்டது. சுவிசேஷத்தை அறிவித்ததனால் பவுல் சிறையில் அடைக்கப்பட்டார். அகிரிப்பா ராஜா பவுலின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்கும்படி, விசாரித்து, ரோமாபுரியிலுள்ள ராயனிடத்தில் பவுலை அனுப்பும்படி அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக பவுல் கொண்டு வரப்பட்டார். பவுலுக்கு பேச வாய்ப்புக் கொடுக்கப்பட்டபோது, கிறிஸ்துவின் செய்தியை வல்லமையாக அறிவித்தார். தீர்க்கதரிசிகளை அகிரிப்பா ராஜா விசுவாசிக்கிறாரா? என்று கூட பவுல் கேட்டார். அதற்கு ராஜா " *நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்* " *என்றார். அதற்குப் பவுல்;* " *நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங் குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன்* " என்றார். (அப்போஸ்தலர் 26:28,29).

சிலர் அகிரிப்பா ராஜா " கிறிஸ்தவன் " என்னும் பெயரைக் கிண்டலா கப் பயன்படுத்தினதாகச் சொல்கிறார்கள். ஒருவேளை கிண்டலாகக் கூட இருந்திருக்கலாம். ஆனால், பவுலின் பதிலானது கிறிஸ்தவன் என்னும்

பெயரைத் தான் ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், கட்டுகள் தவிர, மற்றவர்களும் இந்தப் பெயரை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற வாஞ்சை யைக் காட்டுகிறது. கிறிஸ்தவன் என்னும் இம்மகத்தான பெயர் பெரும் பாலும் தவறாகப் பயன்படுத்தப்பட்டு, உண்மையாகவே கிறிஸ்துவை பின் பற்றாதவர்களுக்கும் பயன்படுத்தப்படுகிறதென்பது என்பது உண்மை தான். ஆனால், நாம் பவுலைப் போல அதை சரியான விதத்தில் பயன் படுத்தி, அந்தப் பெயரால் பலர் கர்த்தரிடத்தில் வந்து சேரும்படியான முயற்சி எடுப்போம்.

கிறிஸ்தவன் என்னும் பெயர் மூன்றாவது முறையாக பயன்படுத்தப் பட்டிருக்கும் சம்பவம் 1 பேதுரு 4:16ல் இடம் பெற்றுள்ளது. இங்கே பேதுரு அந்நிய தேசங்களில் சிதறியிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது அவர்கள் கொலைகாரர்களாக, திருடர்களாக, பொல்லாங்கு செய்கிறவர் களாக, அந்நிய காரியங்களில் தலையிடுவர்களாக பாடுபடக்கூடாது என்று எச்சரிக்கிறார். மேலும், " *ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்* " என்று சொல்கிறார். இங்கே பொல்லாங்கு செய்து பாடுபடுபவர்களுக்கும், கிறிஸ்தவர்களாயிருப்பதனால் பாடுபடுபவர்களுக்குமுள்ள வேறுபாட்டைக் கவனியுங்கள். கிறிஸ்தவன் என்னும் பெயரே விவரிக்கத்தக்கதாயும், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களைக் குறிக்கிறதாயும் இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்தொடரும்படி அவர் நமக்கு மாதிரியைப் பின் வைத்துப் போயிருக்கிறார்.

கிறிஸ்தவன் என்னும் வார்த்தை ஒவ்வொரு முறையும் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படும்போது கிறிஸ்துவுக்காக வாழும் தனிநபரை குறிக்கும் விதமாகத்தான் அது பயன்படுதுதப்பட்டிருக்கிறது. ஒரு தேசத்தை யோ அல்லது அமைப்பையோ குறிக்கும் விதத்தில் நாம் இதைப் பயன் படுத்தும் போது அளவுக்கு மீறி மிக விரிவான அல்லது பரந்த நிலையில் இதைப் பயன்படுத்துகிறோம் என்று நான் சந்தேகப்படுகிறேன். ஓர் இல்லத்தைக் குறிக்கும் விதமாக நாம் கிறிஸ்தவன் என்கிற பதத்தைப் பயன்படுத்தும் போது கிறிஸ்துவின் போதனைகளை ஆதாரமாகக் கொண்டு அந்த இல்லம் கட்டப் பட்டிருந்தால் மட்டுமே அதை நாம் கிறிஸ்தவ இல்லம் என்று அழைக்க முடியுமே தவிர அந்த இல்லத்திலுள்ள எல்லோரும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் என்பதை ஆதாரமாகக் கொண்டல்ல.

கிறிஸ்தவன் என்னும் பெயர் தரித்துக் கொள்ள கனத்திற்குரியதாகும். ஆனால், தன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்லுகிற ஒவ்வொருவனையும் அது தாழ்த்த வேண்டும். ஏனென்றால், கிறிஸ்து தாழ்மையின் கோலமாக இப்பூமியில் சஞ்சரித்தார். அவரைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளும் நாமும் அவ்விதமாகவே தாழ்மையாக இருக்க வேண்டும்.

# எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை

## The Whole Duty Of Man

**Don L. Norwood.**

பழைய ஏற்பாட்டு புத்தகமாகிய பிரங்கி புத்தகத்தின் எழுத்தாளரா கிய இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் பிரசங்கி புத்தகத்தை எழுத தேவனால் ஏவப்பட்டு மனிதர்கள் தேவனுக்குப் பயந்து, தேவனுடைய கட்டளைகளைக் கற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படியாத வரை, மாம்சத்தில் வாழும் காலத்தில் செய்யும் கிரியை களெல்லாம் வீணானதாக, மாயையாக இருக் கிறது என்பதைக் காட்ட விரும்பினார். (பிரசங்கி 1:14; 12:13).

அப்படியானால், தேவனுக்குப் பயப் படுவது என்பதன் பொருள் என்ன? பிரசங்கி 12:13 ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, பயம் என்கிற வார்த்தையானது "Yare" என்னும் எபிரெய பதத்திலிருந்து மொழி யாக்கம் செய்யப்பட்டிருக் கிறது. அதன் பொருள், " தேவனுக்கான மரியாதை " என்பதாகும். மரியாதை என்பது பரிசுத்தமானதின் மீது நமக்கிருக்கும் ஆழமான மதிப்பு, அன்பு மற்றும் பய பக்தி. ஆகவே, தேவனுக்குப் பயப்படுவது என்பது, அவர் மீது மிகப்பெரிய மரியாதை வைப்ப தோடு, அவருக்குக் கீழ்ப் படியாமல் போனால் என்ன நடக்கும் என்ற பயம் கலந்த நடுக்கத்தையும் உள்ளடக்கியது.



புதிய ஏற்பாட்டில் பயம் என்பது " Phobeo " என்னும் கிரேக்க பதத்திலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன் பொருள் பயமுறுத்துவது அல்லது திகிலடையச் செய்வது என்பதாகும். இந்த வார்த்தை 1 பேதுரு 2:17; அப். 13:16; லூக்கா 12:45 போன்ற வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இப்பூமியில் மனிதனுடைய வாழ்க்கை பற்றி சாலொமோன் ஞானி என்ன வெளிப்படுத்தியிருக்கிறார் என்று ஆழ்ந்து சிந்தியுங்கள். மனிதன் ஆவிக்குரிய பிரகாரமாக தேவனோடு ஒப்புரவாகி, தேவனோடு ஐக்கியமாக வாழவில்லையென்றால் அவன் இவ்வுலகில் வாழும்வரை படும் பிரயாசங்களும் செய்யும் சாதனைகளும் வீணானதாயிருக்கிறது. இதை சாலொமோன் இவ்விதமாகச் சொன்னார். " *வானத்தின் கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம் பண்ணினேன்; மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்கு தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார். சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது* " (பிரசங்கி 1:13-14).

சாலொமோன் ஞானி இவ்வுலக இன்பத்தால் தன்னை திருப்திப்படுத்த முயற்சித்தார் (பிரசங்கி 2:1-11); பூமிக்குரிய காரியங்களில் அவர் ஞானத்தைப் பிரயோகிக்க முயற்சித்தார் (பிரசங்கி 2:13-17); மனிதன் ஒட்டுமொத்தமாக இப்பூமியில் வாழும் நாட்களில் நேரத்தால் கட்டுப்படுத்தப்படுகிறான் (பிரசங்கி 3:1-15) என்பதையும் ஞானி உற்றுக் கவனித்தார். அவர் ஜனங்களுடைய வாழ்க்கையில் நடக்கும் எல்லாவித அநீதியையும் கண்டார் (அதிகாரம் 4); அவர் தேவனுடைய வழிநடத்துதலோடு சரியாகப் பயன்படுத்தப்படும் ஞானத்தின் மேன்மையையும் கண்டார் (அதிகாரம் 9-10). இருந்தபோதிலும் இவை எல்லாவற்றிலும் காரியத்தின் கடைத்தொகை அப்போதும், இப்போதும், " *தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதென்பது எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமையாயிருக்கிறது* " (பிரசங்கி 12:13).

இந்தக் கிறிஸ்தவ யுகத்தில் அல்லது காலத்தில் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதென்பது புதிய ஏற்பாட்டு போதனைகளுக்குக் கீழ்ப்படிவதாகும். எனவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எழுதும்படி ஏவப்பட்டார். ஆனபடியால், *கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாகியிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை* (ரோமர் 8:1). இதன் பொருள், ஒருவர் விசுவாசித்தல், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் பெறுதல் மூலமாக கிறிஸ்துவோடு உடன்படிக்கை உறவில் பிரவேசிப்பதாகும் (கலாத்தியர் 3:26-27; ரோமர் 10:8-10; அப்போஸ்தலர் 8:35-39).

இதுதான் கிறிஸ்துவுக்குள் இருப்பது என்பதன் பொருளாகும். இப்படிக் கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவர், அதன்பிறகு ஆவியின்படி நடப்பதென்பது வேத வாக்கியங்களைக் குறிப்பாக புதிய ஏற்பாட்டைப் படித்து அதன் உபதேசங்களுக்குக் கீழ்ப்படிவதாகும். இன்று மனித இனம் *தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்வதே ஆவியின்படி நடப்பதாகும். இது எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமையாகும்* (பிரசங்கி 12:13). ❁

# மனந்திரும்புதலின் கனிகள்

## THE FRUITS OF REPENTANCE

**Tom Kelton**

இயேசு கிறிஸ்து, " *மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது* " என்று பிரசங்கித்த போது (மத்தேயு 4:17), அதைக் கேட்டவர்கள் அச்செய்தியைப் புரிந்துகொண்டார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்து வெறுமனே தங்களிடமிருந்து மனமாற்றத்தையோ அல்லது அவர் யார் என்பது பற்றிய புதிய கண்ணோட்டத்தையோ எதிர்பார்க்கவில்லை. அதைவிட அதிகமாக ஏதோ ஒன்றை எதிர்பார்த்துத் தங்களை அழைத்தார் என்பதை அறிந்திருந்தார்கள். மனந்திரும்புதல் என்பது அவர்களுக்குத் தங்கள் விருப்பத்தை முழுமையாக ஒப்புக்கொடுப்பதும், செய்கையிலே மாற்றத்தையும் ஏற்படுத்துவதுமாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. வேறுவிதமாகச் சொன்னால், அது புதுவாழ்க்கை முறையாக இருக்கும்படியாகத்தான் அவர்களிடம் எதிர்பார்க்கப்பட்டது. வெறுமனே வித்தியாசமான அபிப்பிராயங்களல்ல. மேலும், அவர்கள் இயேசு கிறிஸ்து தங்களைப் பாவத்தை விட்டுவிட்டு மனந்திரும்பி, சுயநலத்தை விட்டு விட்டு அவரைப் பின்பற்றும்படி விரும்பி அழைக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

பழைய ஏற்பாடானது மனந்திரும்புதலைப்பற்றிய சத்தியத்தால் நிரப்பட்டிருக்கிறது. எசேக்கியேல் 33:18-19 வசனங்கள் இவ்விதமாகச் சொல்கிறது. *ஒருவர் நீதியை விட்டுத் திரும்பி அநியாயஞ்செய்தால், அவன் அதினால் சாவான். துன்மார்க்கன் தன் அக்கிரமத்தை விட்டுத் திரும்பி நியாயமும் நீதியும் செய்தால் அவன் அவைகளினால் பிழைப்பான். 2நாளாகமம் 7:14 மனந்திரும்புதலுக்கான விளக்க வழிகாட்டியாக இருக்கிறது,* " *என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம்பண்ணி என் முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்* ".

யோவான்ஸ்நானன் மனந்திரும்புதலுக்கு அத்தாட்சியாக நற்கிரியைகளை எதிர்பார்த்தார். மத ரீதியான மாயக்காரர்கள் ஞானஸ்நானத்திற்காக யோவானிடம் வந்த போது, அவர், " *விரியன் பாம்புக்குட்டிகளே! வருங் கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்?* என்று கடுமையாகச் சாடினார் " (மத் 3:7-8).

மனந்திரும்புதலின் கனிகள் என்றால் என்ன? இந்தக் கேள்வியைத் தான் ஆயக்காரர்கள் யோவான் ஸ்நானனிடம் கேட்டார்கள் (லூக்கா. 3:10). அதற்கு அவர் கொடுத்த பதில் " *உங்களுக்குக் கட்டளையிட்டிருக் கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்* " என்பதாயிருந் தது (வசனம் 13). இதே கேள்வியைக் கேட்ட போர்ச்சேவகருக்கு அவர் கொடுத்த பதில் இவ்விதமாய் இருந்தது. " *நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும் இருங்கள்* " என்று (வசனம் 14). வேறு விதமாகச் சொன்னால், ஒருவருடைய வாழ்க்கை முறையில் உண்மையான மாற்றம் ஏற்படவேண்டும். உண்மையாகவே, மனந்திரும்பின ஒருவர் தீமை செய் வதை விட்டு நீதியாக வாழத் தொடங் குவாரக. மனதிலும், மனநிலையிலும் மாற்றம் ஏற்படுத்தும். நற்கிரியை களைத்தான் பவுல் மனந்திரும்பு தலின் அத்தாட்சியாக் கருதினார், இதைத்தான் அகிரிப்பா ராஜாவிடம் விளக்கினார். "*ஆகையால், அகிரிப்பா ராஜாவே, நான் அந்தப் பரம தரிசனத் துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்க வில்லை. முன்பு தமஸ்குவிலும், எருசலேமிலும் யூதேயா தேசமெங்கு முள்ளவர்களிடத்திலும், பின்பு புற ஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந் திரும்பிக் குணப்படவும், மனந்திரும் புதலுக்கேற்ற கிரியைகளைச் செய் யவும் வேண்டுமென்று அறிவித்தேன்*" என்று. (அப்போஸ்தலர் 26:19-20).

உண்மையான மனந்திரும்பு தல் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

## ஏழு வித ஞானஸ்நானங்கள்

1. யோவான் ஸ்நானன் கொடுத்த ஞானஸ்நானம். (மத். 3:1–6)
2. இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம். (மாற்கு 16:16)
3. பாடுகளின் ஞானஸ்நானம். (லூக்கா 12:50)
4. மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம். (1 கொரி. 10:2)
5. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம். (மத்தேயு 3:11)
6. அக்கினி ஞானஸ்நானம். (மத்தேயு 3:11)
7. பேழையிலே நோவா காக்கப்பட்ட ஞானஸ்நானம். (1 பேதுரு 3:21)


ஆனால், " முதல் நூற்றாண்டுக்குப் பின், நடைமுறையில் இருப்பது, **இயேசு கிறிஸ்துவின் ஒரே ஞானஸ்நானம் ". (எபேசியர் 4:4)**

வாழ்வதற்கான உபதேசம்

# உணர்வுகளா அல்லது விசுவாசமா?

## FEELINGS OR FAITH?

**Jimmy Jividen**



உணர்வுகள் தனிப்பட்ட அனுபவமாயிருக்கிறது. நம் தற்பெருமை அதில் புதைந்து கிடக்கிறது. மத சம்பந்தமான அனுபவங்களைப் பொறுத்தவரை அவைகளுக்கு சவால் விடப்படும்போது, அதற்கு இசைவாக நாம் போகிறோம். இருந்த போதிலும், சத்தியத்திற்கு உணர்வுகள் மட்டுமே தகுதியம்சங்களல்ல.

தேவனோடு கிட்டிச் சேரும் அனுபவத்திற்கும் அல்லது தேவனை விட்டு தூரமாகப் போகும் அனுபவத்திற்கும் மேலெழுந்த வாரியாகப் பெரிய வேறுபாடு இருக்காது. கிறிஸ்தவனல்லாத பக்தியுள்ளவன் தான் தேவனோடு நெருங்கிய உறவு கொண்டிருப்பதாக உணரலாம் அல்லது சில வேளைகளில் ஓர் உண்மையுள்ள

கிறிஸ்தவன் நெருக்கமற்ற ஒருவனைப் போல் உணரலாம். வெளிப்புறமான சூழ்நிலைகள், சரீர நலன், மனிதனுடைய மனநிலை போன்றவைகள் உணர்வுகள் மீது பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன; ஆனால், அவைகள் விசுவாசத்திற்கு ஆதாரமாகவோ அல்லது சத்தியத்திற்கான அளவுகோலாகவோ ஏற்க முடியாது. வேதாகமம் சொல்கிறது. " *மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்* " என்று (நீதிமொழிகள் 14: 12).

பக்தியுள்ள எல்லா ஜனங்களும் - கிறிஸ்தவர்களானாலும் சரி அல்லது கிறிஸ்தவர்களல்லாதவர்களானாலும் சரி-பக்திரீதியான உணர்வுகளுக்குள்ளாக கடந்து வருகிறார்கள். மனமாற்ற அனுபவங்கள், பரவசப்படுத்தும் பலவித வார்த்தைகள், வித்தியாசமான முறையில் உணருதல் போன்ற உணர்வுப்பூர்வமான சம்பவங்கள் பெரும்பாலான மதங்களிலும், சில வேளைகளில் மத சார்பற்ற நிலையிலும் காணப்படுகின்றன. அவைகளெல்லாம் மனித அனுபவங்கள் தான்.

இயேசு கிறிஸ்துவின் மார்க்கமானது மாறுகின்ற, முரண்படுகின்ற ஒன்றை அடிப்படையாகக் கொண்டதல்ல. அது தேவனுடைய வார்த்தையினால் உண்டாகும் விசுவாசத்தில் ஊன்றக்கட்டப்பட்ட ஒன்றாயிருக்கிறது. வேதாகமம் ஒரு போதும் மாறாத முரண்படாத முற்றிலும் பட்சபாதமற்ற சத்திய அளவுகோலாயிருக்கிறது. இயேசு கிறிஸ்து *உம்முடைய வசனமே சத்தியம் என்று சொன்னார்* (யோவான் 17:17).

இது சரியாக இருக்கிறது என்று நாம் உணர்வதினாலேயே எந்த ஒரு மத போதனையையோ அல்லது மத பழக்கவழக்கங்களையோ ஆதரிக்க வேண்டாம். ஏனென்றால், அநேகர் முரண்பட்ட போதனைகளையும் நடைமுறைகளையும் சரியானதென்று உணர்கிறார்கள். கட்டுப்படுத்துகின்ற, தனிப்பட்ட உணர்வுகள் மாறும்போது உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட விசுவாசம் செத்துப்போகிறது. ஆனால், தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்ட விசுவாசம் பாதுகாப்பாக இருக்கிது. தேவனுடைய வார்த்தை ஒருபோதும் மாறுவதில்லை. இதைக்குறித்து ஆழ்ந்து யோசியுங்கள்.

ஒன்றும் செய்யாத, விலை ஒன்றும் கொடுக்காத, பாடுகள் படாத மார்க்கம் ஒன்றுக்குமே உதவாது.


வருங்காலத்திற்காகச் சேமிக்கும் மிகச் சிறந்த பொருள் உங்கள் ஆத்துமா தான்.

வாழ்வதற்கான உபதேசம்

# அழியாத சுதந்திரம்

## AN INCORRPTIBLE INHERITANCE

wayne barrier




இயற்கையின் போக்கு மனித இனத்தின் மீது தொடுக்கின்ற அழுத்தத்தின் காரணமாக ஒவ்வொரு நாளும் கோடிக்கணக் கான மதிப்புடைய நிலங்கள் ஒருவ ருடைய கையிலிருந்து மாறி மற்றொருவருடைய கைக்கு வந்த டைகிறது. வருங்கால வாரிசுகள் புதிய செல்வங்களைப் பெற்றுக் கொள்ள பெரும்பாலும் விரும்பு வார்கள். ஆனால், துரிதமாக தங்கள் சுதந்திரம், வரிகள், பண வீக்கம், ஏற்ற இறக்கங்களுடன் கூடிய பங்கு சந்தைகள், சுழற்சி முறையிலான சொத்து மதிப்புகள், அழிவினாலும், காலத்தின் போக்கினாலும் குறைக் கப்படும் சொத்து மதிப்புகள் போன்ற காரணங்களால் பாதுகாப்பாக இல்லை என்பதை உணர்ந்து கொள்கிறார்கள். நிதி ஆலோச கர்கள், கணக்கு மேலாளர்கள், முதலீட்டு சிறப்பு ஆலோசகர்கள், வழக்கறிஞர்கள் போன்றோர்க்கு முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், மக்கள் தங்கள் செல்வங்களைப் பாதுகாக்க இவர் களை நாடி வருகிறார்கள்.

சிலர் கொஞ்ச காலத்திற்கு வெற்றி பெறுகிறார்கள். ஆனால், கடந்து போகின்ற காலம் ஒருவனு டைய செல்வத்தைப் பாதுகாக்க நிச்சயமான வழி இல்லையென்று வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கான மக்கள் பங்கு சந்தைகளின் ஏற்ற இறக்கத் தினால் செல்வங்களை இழந்து கொண்டிருக்கிறார்கள். பலர் தங்கள் வாழ்நாள் சம்பாத்தியத்தை சில மணி நேரங்களில் இழந்துவிடு கிறார்கள். பெரும்பாலும் மக்கள் இப்படி நடப்பதை மாற்ற முடியாமல், தங்கள் பிராயசங்கள் மறைந்து போவதை தடுக்க முடியாமல் உதவி யற்ற நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

எப்போதும் போல் வேதாகமத்தில் இப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து நல்ல ஆலோசனைகள், வழிநடத்துதல்கள் உண்டு. முதலாவது, இது குறித்து (மத்தேயு 6:19-21)ல் இயேசுவின் போதனையை ஆழந்து சிந்தியுங்கள். " *பூமியிலே உங்களுக்குப் பொக்கி ஷங்களைச் சேர்த்து வைக்க*

*வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார் கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடு கிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் ".*

மத்தேயு 6:33-ல் இயேசு கிறிஸ்து சொல்வதைக் கவனியுங்கள். *".....முதலாவது தேவனுடைய ராஜ்யத் தையும் அருடைய நீதியையும் தேடுங்கள் ".* நிலம் மற்றும் வீடுகளில் முதலீடு செய்வது சம்மந்தாக இயேசு சொல்வதைக் கவனியுங்கள். *" என் பிதாவின் விட்டில் அநேக வாசஸ் தலங்கள் உண்டு; அப்படியில்லா திருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக் காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறு படியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் " என்றார்* (யோவான் 14:2-3).

1 பேதுரு 1:3-5 வசனங்களில் பேதுரு இவ்விதமாகச் சொல்லி யுள்ளார் *" நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டா வதாக; அவர், இயேசு கிறிஸ்து மரித் தோரிலிருந்து எழுந்ததினாலே அழியாததும், மாசற்றதும், வாடாதது மாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும் படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப் புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது ".*


இயேசு கிறிஸ்து அச்சுதந் திரத்தை நமக்கு சாத்தியமாக்கி யிருக்கிறார். பேதுரு நமக்காகச் செய்யப்பட்டிருக்கிற முதலீட்டைப் பற்றி 1 பேதுரு 1:18-19 வசனங்களில் விளக்கியிருக்கிறார். *" உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலை யேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக் கிறீர்களே "* என்று.

நம் தேவன் நம் பொக்கிஷங் களைப் பாதுகாக்கிறார். இயேசு கிறிஸ்து அதற்கான கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார். அது மிகச் சிறந்த முதலீடாகும். நாம் தேவன் மீதும், அவருடைய வாக்குத்தத்தத் தின் மீதும் விசுவாசம் வைத்தால் நம் சுதந்திரம் பாதுகாக்கப்படும். வேதாகமம் ஒரு மிகச்சிறந்த முதலீட்டு வழிகாட்டி. ஆனால், தேவனிடத்தில் நாம் விசுவாசமும், நம்பிக்கையும் வைத்தால் தான் அது வழிகாட்டியாக இருக்க முடியும். உலகப் பிரகாரமான முதலீடுகளில், மனிதன் மீது வைக்கும் நம்பிக்கை அடிப்படையான ஒன்றாக இருக் கிறது. நீங்கள் யார் மீது நம்பிக்கை வைக்கிறீர்கள்? உங்கள் பொக்கிஷம் எங்கே? தீர்மானியுங்கள்.

# இந்த கிறிஸ்தவ காலம்

## THIS CHRISTIAN AGE

**John Thiesen**



**நீ**ங்களும் நானும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள். நாம் மிகவும் மகத்தான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கு முன் வாழ்ந்த பரிசுத்தவான்களும், தேவதூதர்களும் அறிய ஆவலாயிருந்தும் காணவும், அறியவும் அனுமதிக்கப்படாமல் நம் காதுகள் அவைகளை கேட்கும் பாக்கியத்தைப்பெற்றன. இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்து, " *உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள் ". அநேக தீர்க்கதரிசிகளும், நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும் காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்* " என்றார் (மத்தேயு 13:16,17).

**முந்தைய காலங்களில் குறைவான அறிவு**

ஒவ்வொரு காலகட்டத்திலும் தேவனைப் பற்றி ஓரளவு காரியங்களை அறிந்தவர்கள் வாழ்ந்து வந்திருந்தாலும், பரலோகம் போவதற்கான உண்மையான வழி கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழும் வரை அது மனித இனத்துக்கு அறிவிக்கப்படவில்லை. கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய ஊழியத்தைப்பற்றியும் முன்னறிவித்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே அவர்கள் வெளிப்படுத்தினவைகளை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை.

கிறிஸ்துவை பற்றிய இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. (எபேசியர் 3:6). ஆதாமிலிருந்து மோசே வரையிலான முற்பிதாக்களின் காலகட்டத்தில் தேவன் ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு போன்ற குடும்பத் தலைவர்களிடத்தில் நேரடியாகப் பேசினார். தேவன் எல்லாரிடத்திலும் பேசவில்லை. ஆனால், தெரிந்து கொள்ளப்பட்டவர்களிடத்தில் தேவதூதர்கள் மூலமாக, சொப்பனங்கள் மற்றும் தரிசனங்கள் மூலமாகப் பேசினார். இக்கால கட்டத்தில் தேவன் தாம் திட்டமிட்டருந்தபடியே இஸ்ரவேல் வம்சத்திலிருந்து இவ்வுலகத்திற்கு இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை அனுப்புவதற்கு இஸ்ரவேல் தேசத்தை ஆயத்தப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட வேலையை நடப்பித்தார்.

இரண்டாம் காலகட்டம், மோசே எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்களை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்திற்கு வழி நடத்தியபோது ஆரம்பமானது. தேவன் இந்த ஜனங்களைத் தம் சொந்த ஜனங்களாக *சுமார் 1500 வருடங்கள்* ஸ்திரப்படுத்தினார். அக்காலகட்டத்தில் அவர்களுக்கு மோசேயின் மூலமாக பிரமாணங்களைக் கொடுத்தார். " *இந்த நியாயப் பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது* " (கலாத்தியர் 3:24). இக்காலகட்டத்தில் தான் மிருக பலிகள் செலுத்தப்பட்டன, தேவாலய வழிபாடுகள் வழக்கத்தில் இருந்தன அதற்காக ஆசாரியர்களும் இருந்தனர். அது ஆயத்த காலமாயிருந்தபடியால் பிற்பாடு கிறிஸ்துவினிடத்தில் வருபவர்களை வழிநடத்த பயன்படுத்தப்பட்டபடியால் அது தற்காலிக ஏற்பாடாகத்தான் இருந்தது. "*விசுவாசம் வந்த பின் நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே* " (கலாத்தியர் 3:25).

**நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம்**

நாம் வாழும் இக்காலம் தான் கடைசி காலமாயிருக்கிறது. இக்காலத்தில் " *இருள் நீங்கி மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது* " (1 யோவான் 2:8). இப்பொழுது தேவன் தனிப்பட்ட குடும்பங்களோடோ அல்லது ஒரு தேசத்தோடோ மட்டும் இடைப்படுவதில்லை. சுவிசேஷம் முன்பு யூதருக்கும், பின்பு கிரேக்கருக்கும், அதாவது, ஒட்டு மொத்த உலகத்திற்கும் சொந்தமாயிருக்கிறது. (ரோமர் 1:16) இந்தச் சுவிசேஷம் சர்வசிஷ்டிக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டுமென்று கிறிஸ்து கட்டளையிட்டிருக்கிறார். ஆயத்த காலம் முடிந்து தேவனுடைய சித்தமும் ஞானமும் இப்போது நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. உங்களுக்கும், எனக்கும் தேவனுடைய இரட்சிப்பான திட்டம் முழுமையாக அறியப்பட்டிருக்கிறபடியால் நமக்கு முந்தைய கால கட்டத்தில் வாழ்ந்தவர்களை விட நாம் பாக்கியவான்கள் தான்.

# ஆக்கினைத் தீர்ப்பு முதல் உயர்த்தப்படுதல் வரை

## FROM CONDEMNATION TO EXALTATION

**Sunny David**

**பா**வம் மனிதனுடைய மிகப்பெரிய பிரச்சனையாக இருந்து வருகிறது. ஆதாம், ஏவாள் காலந்தொட்டு எல்லா மனிதர்களும் பாவம் செய்திருக்கிறார்கள். ஆனால், ஒருவரும் பாவத்தோடு பிறப்பதில்லை, ஆதாமும், ஏவாளும் பாவமில்லாமல் உண்டாக்கப்பட்டதுபோல தான் ஒவ்வொருவரும் பாவமில்லாமல் உண்டாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், *எல்லோரும் பாவம் செய்தார்கள்* என்று ரோமர் 3:23 சொல்கிறது. *அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு பாவம் செய்கிறான்* என்று (யாக். 1:14-15)ல் வாசிக்கிறோம். வேதாகமம், *பாவத்தின் சம்பளம் மரணம்* என்று சொல்கிறது (ரோமர் 6:23) ஏனென்றால், பாவம் மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கிறது. அப்பிரிவு தான் மரணம் என்று அழைக்கப்படுகிறது. அது உண்மையில் மனிதனை தேவனிடமிருந்து ஆவிக்குரிய பிரகாரமாக அந்நியப்படுத்துகிறது.

நன்மை தீமை அறியும் அறிவை அடைந்த எல்லோரும் தேவனுடைய பார்வையில் பாவம் செய்திருக்கிறார்கள். மனிதன் எங்கே இருக்கிறானோ அங்கே பாவம் உண்டு. பாவத்தைக் காண நாம் வெகுதூரம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. பாவம் ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும், மனதிலும் குடி கொண்டிருக்கிறது. " *எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள்; அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்* " என்றுள்ளது. (நீதி. 4:23). இயேசு கிறிஸ்து " *இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும் தூஷணங்களும் புறப்பட்டு வரும்*" என்று போதித்தார் (மத். 15:19). அப்போஸ்தலானகிய யோவான் " *தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்*" என்று எழுதினார் (1 யோவான் 3:15). இயேசு கிறிஸ்து மறுபடியும் "*விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று* " என்று சொன்னார் (மத்தேயு 5: 27-28). நாம் பாவத்தை இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது

சிறு குழந்தைகளைத் தவிர, எது சரி, எது தவறு என்று வித்தியாசப்படுத்தத் தெரியும் எல்லோருமே பாவிகள் என்று நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

எல்லோருமே தீய எண்ணங்களை மனதில் வைத்து வைக்கும் போது தங்கள் இருதயத்தால் அல்லது மனதால் பாவம் செய்கிறார்கள். ஆகவே, தேவனுடைய அளவு கோலைக் கொண்டு பார்க்கும் போது பாவத்தின் காரணமாக நாம் எல்லோ ருமே ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் இருக் கிறோம். பாவம் கொண்டு வரும் ஆக்கினை நரகம். அது நித்திய நித்தியமாக அக்கினியும், கந்தகமும் எரிகின்ற ஓர் இடமாகும்.

பரலோகத்தின் தேவன் பூமியின் மனுமக்கள்மீது அக்கறை கொண்டதில் ஆச்சரியமில்லை. அது இயற்கையானதே. ஏனென்றால், தேவன் மனித இனத்தை *தமது சாயலாகவும் தம்முடைய ரூபத்தின் படியேயும் உண்டாக்கினார்*. (ஆதி. 1:26-27). " *நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்கிறோம்* " (அப் 17:29). மனிதனைப் பாவத்திலிருந்தும் அதன் கோர விளைவுகளிலிருந்தும் இரட்சிக்கவும் மீட்டுக்கொள்ளவும் தேவன் தம்முடைய குமாரனை பரலோகத்திலிருந்து இப்பூமிக்கு அனுப்பினார். தேவனுடைய வல்லமையால் இயேசு கிறிஸ்து மாம்சமாகி மனிதரானார் (யோவான் 1:1-2,14). அவர் தம்முடைய சிலுவை மரணத்தின் மூலமாக *இவ்வுலகத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகினார்* (1 யோவான் 2:2; 4:10).

கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார் என்று சொல்கிறது. சிலுவையில், *தேவன் நாம் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்*. (2 கொரி. 5: 19-21).

தேவன் மிகவும் அற்புதமான காரியத்தைச் செய்திருக்கிறார். அவர் பாவங்கள் முற்றிலுமாக கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பாவிகளை கிறிஸ்துவுக்குள் இருக்கும்படி செய்தார்! "*ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோமர் 8:1). இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின* " (2 கொரி. 5:17).

கிறிஸ்துவுக்குள் ஒருவர் புதிய மனுஷனாகிறார்; சிலுவையில் கிறிஸ்து சிந்திய இரத்தத்தால் பாவங்கள் கழுவப்பட்டு; தேவனுக்காக ஊழியம் செய்வதற்காகவும் வாழ்வதற்காக வும் பரிசுத்தமாக்கப்பட்டு அல்லது பிரித்தெடுக்கப்பட்டு; கிருபாதார பலியாக மரித்த கிறிஸ்துவின் மரணத்தினாலே பாவம் நிறைந்த உலகில் கறைபடாத வாழ்க்கை வாழும்படியாக அந்த நபர் பாதுகாக்கப்படுகிறார். (1 கொரி. 6:11; யூதா 1).

கிறிஸ்துவுக்குள் ஒருவர் மாம்சத்தின்படி நடப்பதில்லை. ஆனால், பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின்படி நடக்கிறார். அதாவது, பரிசுத்த ஆவியானவர் எழுதிக் கொடுத்த வார்த்தைகளை வாசிக்கும் போதும், கேட்கும் போதும், தியானிக்கும்போதும் அதன்படி செய்யும் போதும் ஆவியின்படி நடக்கிறவராயிருக் கிறார் (ரோமர் 8:1; 2 தீமோத்தேயு 3:16; 1 பேதுரு 1:20-21).

கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை என்பதால், முடிந்த வரை துரிதமாக மனிதன் கிறிஸ்து வுக்குள் வர வேண்டும். ஒருவர் அதை எப்படிச் செய்யமுடியும். இதற்கான பதிலுக்காக நாம் வேதாகமத்தைப் பேச அனுமதிக்க வேண்டும். கலாத்தியர் 3:27-ல் " *ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற வர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே* " என்று பார்க்கி றோம்.

இப்பூமியில் எருசலேம் பட்டணத்தில் முதல் நற்செய்திக் கூட்டம் நடந்த போது, பிரசங்கத் தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் பிரசங்கித்தவர்களைப் பார்த்து இவ்விதமாகக் கேட்டார்கள். "*சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று* "? *அங்கே நீங்கள் மனந்திரும்பி* " *ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள் ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்* " என்று சொல்லப்பட்டது (அப்போஸ் தலர் 2:37-38) அதன் பிறகு வார்த்தை யைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். *இரட்சிக்கப்படுகிற வர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.* இப்படித்தான் கிறிஸ்துவின் சபை ஆரம்பமானது (அப்போஸ் தலர் 2:41-47).

பூமியில் வாழும் ஒவ்வொரு வரும் *கிறிஸ்துவுக்குள் இருக்கி றார்கள் அல்லது கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கிறார்கள். கிறிஸ்து வுக்கு வெளியே இருக்கிறவர்கள்* ஆக்கினைத் தீர்ப்பிற்குள் இருக்கி றார்கள். கிறிஸ்துவுக்குள் இருக்கிற வர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர் களாயிருக்கிறார்கள். இந்த உலகத் தில் மட்டும் ஆசீர்வதிக்கப்பட்டவர் களல்ல. இவ்வுலக வாழ்வு முடிந்த பிறகும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களா கவே நித்திய காலமெல்லாம் இருப் பார்கள். (வெளி. 14:13).



# மத பாரம்பரியங்களின் அபாயம்

## THE DANGER OF RELIGIOUS TRADITIONS

*Charles E.cobb*

" *பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் பாரம் பரியத்தை கைக்கொள்ளும்படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த் தமாக்கினது நன்றாயிருக்கிறது* " என்றார் (மாற்கு 7:9).

இயேசுவின் நாட்களில் வாழ்ந்த பெரும்பாலான யூதர்கள் பாரம்பரியவாதியாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் பாரம்பரியத் தினால் தேவ வசனத்தை அவமாக்கி யதாக இயேசு கிறிஸ்து குற்றஞ் சாட்டினார் (மாற்கு 7:13). இன்றைய நாட்களில் மத சம்மந்தமான பாரம் பரியங்கள், ஜனங்கள் தேவ சித்தத் திற்கு உண்மையாகக் கீழ்ப்படிவதற் குத் தடைக்கற்களாகக் காணப்படு கின்றன.

பாரம்பரியம் என்பது நம் முன்னோர்களிடமிருந்து வழி வழியாக நாம் பெற்றுக் கொண்ட சிந்தனை அல்லது செயலின் மாதிரி யாக இருக்கிறது (மத உபதேசங்கள் அல்லது சமுதாய பழக்கவழக் கங்கள் போன்றவைகள்). மனிதன் தேவனுடைய சத்தியத்தை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக பாரம் பரியங்களைக் கடைப்பிடிக்கும்படி தூண்டப்படுகிறான்.

சத்தியம் என்றால் என்ன? நம் இரட்சகர், தேவனிடம் ஜெபிக்கும் போது " *உம்முடைய சத்தியத்தி னாலே அவர்களைப் பரிசுத்தமாக் கும்; உம்முடைய வசனமே சத்தியம்* " என்றார். (யோவான் 17:17) நியாயத் தீர்ப்பின் நாளில் ஒருவர் தேவனுக்கு

முன்பாக நிற்கும்போது (எல்லா மனுஷரும் நிற்க வேண்டும்) சத்தியத்தினாலே அந்த நபர் நியாயந் தீர்க்கப்படுவார் (மத பாரம்பரியங் களினாலே அல்ல).

சத்தியத்திற்குக் கீழ்ப்படியத் தடையாக நிற்கிற எல்லா பாரம்பரியங்களையும் தகர்த்தெறிய மனிதர்கள் தீர்மானிக்கவேண்டும். நாம் *எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்து கொள்ள வேண்டுமென்று அறிந்து கொள்வோம்* (1 தெசலோனிக்கேயர் 5:21). தேவனுடைய வார்த்தையோடு முரண்படுகிற அல்லது தேவனுடைய வார்த்தையை அவமாக்குகிற மத பாரம்பரியங்களைக் கடைப்பிடிப்பது ஒருபோதும் நல்லதல்ல.

பாரம்பரியங்களை மீறிய சில தவறுகளை எத்தனை தலைமுறையினர் நம்பினார்கள், அவைகளைக் கடைபிடித்தார்கள் என்பது ஒரு பொருட்டே அல்ல. அது தேவனுக்கு விரோதமான பாரம்பரியத்தை நல்லதாகவோ அல்லது சரியாகவோ மாற்றுவதில்லை.

தேவன், மனுஷர் சத்தியத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்புகிறார். சத்தியம் மாத்திரமே நம்மை இரட்சிக்கும்! மத பாரம்பரியங்கள் நம்மை ஒருபோதும் இரட்சிக்காது!.

## சங்கீதப் புத்தகத்தின் ஆசிரியர்கள்

சங்கீதம் என்றாலே தாவீதுதான் எழுதினான் என்று நினைப்போம். ஆனால், மொத்தம் 7 ஆசிரியர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதியிருக்கிறார்கள்.

1. தாவீது
2. ஆசாப்
3. கோராகின் புத்திரர்கள்
4. சாலொமோன்
5. மோசே
6. எஸ்ராகியனாகிய ஏமான்
7. எஸ்ராகியனாகிய ஏத்தான்

# மீட்டமைத்தலின் விதை

## The Seed of Restoration

*Kevin Moore*



**ப**ல வருடங்களுக்கு முன்பு, "*ஜீவன்* " என்னும் பத்திரிகையில் ஜப்பான் தலைநகரான டோக்கி யோவுக்கு அருகில் ஒரு பழங்கால படகு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அதற்குள் சுமார் 2000 வருடங்கள் பழமை வாய்ந்த ஒரு தாமரை விதை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் ஒரு கட்டுரை வெளிவந்தது. தாவரவியல் விஞ்ஞானியான Dr. Ichiro Ohga என்பவர் அந்தப் பழங்கால விதை யை மிக ஜாக்கிரதையாக விதைத்து, அதை செடியாக வளர்த்து, கடைசி யாக அச்செடி ஓர் அழகான இளஞ் சிவப்பு தாமரையைக் கொடுக் கும்படி செய்து விட்டார். அப்போது அந்த மலரைப்பார்த்து, " இது ஒரு முழுமையான மலர். ஆனாலும், இன்றைய தாமரைப் பூக்களிலிருந்து எவ்விதத்திலும் வித்தியாசப்பட வில்லை " என்றார்.

தங்கள் தங்கள் ஜாதியின் படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகள் என்பது இயற்கை விதியாகும். இந்த முறையை ஆரம்பத்திலேயே செயல்படுத்தினது தேவனே (ஆதியாகமம் 1:11). இது போலவே நாம் சார்ந்திருக்கத்தக்க ஆவிக்குரிய பிரமாணத்தையும் தேவன் வைத்திருக்கிறார். லூக்கா எட்டாம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து ஓர் உவமையைச் சொன்னார். அதில் மனித இருதயங்களை அடை யாளப்படுத்துகிற நான்கு வகை யான நிலங்களைப் பற்றிப் பேசு கிறார். அங்கே விதைக்கப்பட்ட விதை தேவனுடைய வசனமாயிருக்கிறது (வசனம் 11). ஏற்றுக்கொள்ளப்படும் படியாய் மனித இருதயங்களில் தேவனுடைய வசனம் விதைக்கப் படும்போது என்ன நடக்கிறது? அது

தேவனுடைய பிள்ளைகளை உண்டாக்குகிறது (யாக்கோபு 1:18,21; 1 பேதுரு 1:22,23). இன்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்தவர்களை உண்டாக்கிய அதே ஆவிக்குரிய விதையைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு நமக்கிருக்கிறது. (1பேதுரு 1:23-25). எப்படி அந்த பழங்கால தாமரை விதை ரோஜாச் செடி கூட்டத்தையோ அல்லது மக்காசோளச் செடியையோ உண்டு பண்ணாதோ அதேபோல் இந்தப் பழங்கால ஆவிக்குரிய விதையாகிய தேவனுடைய வார்த்தை இன்று "வேறு வகையான " கிறிஸ்தவர்களை உருவாக்காது. முதல் நூற்றாண்டில் தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட்டு, கீழ்ப்படியப்பட்ட போது அது கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களான கிறிஸ்தவர்களை உருவாக்கியது (அப்போஸ்தலர் 2:37,47; 11:26). அதே தேவனுடைய வார்த்தை இன்று பிரசங்கிக்கப்பட்டு கீழ்ப்படியப்பட்டால் அது எதை உண்டாக்கும்? அன்று எதை உண்டாக்கியதோ அதைத் தான் இன்றும் உண்டாக்கும்!

மீட்டமைத்தல் என்பது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதை உள்ளடக்கியது. அது ஒரு பழைய வாகனமாக இருக்கலாம். ஒரு கடிகாரமாக இருக்கலாம் அல்லது அது புதிய ஏற்பாட்டுச் சபையாக இருக்கலாம். ஒன்றின் அசல் மாதிரி ஜாக்கிரதையாகப் பின்பற்றப்பட்டு அது மறுபடியும் உண்டாக்கப்படும் போது அங்கே மீட்டமைப்பு ஏற்படுகிறது. முதல் நூற்றாண்டில் கீழ்ப்படியப்பட்ட அதே சுவிசேஷத்திற்கு இன்று இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நாம் கீழ்ப்படிந்தால், அந்த முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போல் நாமும் இருப்போமல்லவா?

ஆதித் திருச்சபையால் பின்பற்றப்பட்ட அதே மாதிரியை நாம் பின்பற்றினால் நாம் அதே சபையாக இருக்கமாட்டோமா? சிலர் முன்மொழிய முயற்சிக்கும் சில காரியங்களுக்கு எதிராக முதல் நூற்றாண்டு சபையை இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில் மீட்டமைப்பது சாத்தியமே. கிறிஸ்துவின் சபை மீட்டமைக்கப்படவில்லையென்றால், நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் போது நாம் எதில் சேர்க்கப்படுகிறோம்? நான் புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கிற கிறிஸ்துவின் சபையில் மற்றவர்களோடு சேர்ந்து அங்கத்தினராக இருக்க மட்டுமே விரும்புகிறேன்.

சபை மீட்டமைத்தலை பரிகாசம் செய்யும் சிலர் தேவனுடைய ஜனங்களை உள்ளடக்கிய சபைகளில் யாரும் பூரணமாகவில்லை என்கிற கருத்தை வலியுறுத்துகின்றனர். ஆனால், மீட்டமைத்தலுக்கு பூரணமாயிருத்தல் அவசியந்தானா? புதிய ஏற்பாட்டில் குறையே இல்லாத சபைகள் இருந்தனவா? முதல் நூற்றாண்டில் இருந்த கர்த்தருடைய சபை குறைகளுள்ள அங்கத்தினர்களை உள்ளடக்கியதாகத் தான் இருந்தது. அது இன்றும் அப்படித் தான் இருக்கிறது. அதுபோல கிறிஸ்துவின் சபையை மீட்டமைக்க பூரணமான வேதாகம அறிவும் அவசியமில்லை. ஏனென்றால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சபை குறைவான அறிவுடையவர்களை உள்ளடக்கியதாகத்தான் இருந்தது (2 கொரிந்தியர் 13:9). ஒருவர் கிறிஸ்தவராயிருப்பதற்கு பூரணராயிருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி இருக்கவும் முடியாது (1 யோவான் 1:7,10). சபை மீட்டமைத்தலை மறுப்பவர்கள் இன்று புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களே இல்லை

என்கிற முடிவுக்கு வர முடியுமா? எல்லா கிறிஸ்தவர்களும், எல்லா சபைகளும் தங்கள் தவறு களைத் திருத்திக் கொண்டு பூரணத்தை நோக்கி பயணிக்கப் பாடுபட வேண்டும். சபையென்றால், கிறிஸ்து சபை என்று ஒன்று இல்லை என்று தான் அர்த்தம். தேவனுடைய " விதை விதி " யின் வெளிச்சத்தில் யாராவது இந்த முடிவை ஏற்றுக் கொள்ள முடியுமா? (லூக்கா 8:11,15; 1 பேதுரு 1:23,25).

கர்த்தருடைய சபையை உள்ளடக்கிய புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவம் இன்று உண்மையாகவே சத்தியத்தைத் தேடுகிறவர்களால் மீட்டமைக்கப்பட முடியும். அதாவது, வேதாகமத்தை வாசித்து தேவன் என்ன செய்யும்படியாக விரும்பு கிறார் என்றும், சபை எப்படி இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்றும் கண்டறிவதன் மூலமாக சபையை மீட்டமைக்க முடியும். கிறிஸ்துவின் சபையின் அங்கத் தினர்கள் இதை ஆசீர்வாதமாகவும், சிலாக்கியமாகவும் கருத வேண்டும். " *அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்* " (1 பேதுரு 1:23).

## *Think It Over :* இது குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள்

நீங்கள் வாழ்க்கைப் பயணத்தை நிறைவு செய்யும் போது வேதாகமத்தைப் படிப்பதில் நீங்கள் செலவழித்த ஒரு நிமிடத்தை நினைத்துக் கூட வருத்தப்படமாட்டீர்கள். மற்ற புத்தகங்கள் எல்லாம் ஓரமாக வைக்கப்படும்போது, தேவனுடைய வார்த்தைகளை உள்ளடக்கிய வேதாகமம் நியாயத்தீர்ப்பில் உங்களை எதிர்கொள்ளும்! இந்த வாழ்க்கையில் பரிசுத்த வேதாகமத்தை நீங்கள் ஜாக்கிரதையாகப் பயன்படுத்தும்படியாக நாங்கள் வேண்டி கேட்டுக்கொள்கிறோம்! இது உங்களுக்கான தேவனுடைய செய்தியாகும். அதைக் கண்டு கொள்ளாமல் இருக்கவோ, அதை அசட்டை பண்ணவோ வேண்டாம்.

" இப்பொழுதும், சகோதரரே, நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன் " (அப்போஸ்தலர் 20:32)

# சபையில் இருக்கும் இரண்டு மிகப்பெரிய பிரச்சனைகள்

## Two Greatest Problems in the Church

***Dan Winkler***

கலப்பு உபதேசம்? மாம்ச சிந்தைக்கான முக்கியத்துவங்கள்? உலகத்தோடு ஒத்துப் போதல்? சத்துவமற்ற பிரசங்க மேடைகள்? தலைமைத்துவத்தின் ஒழுங்கற்ற செயல்பாடு? விவாகரத்து? அதிகப்படியான கிருபை? குறைவான கிருபை? சீர்குலைந்த குடும்பங்கள்? அவநம்பிக்கை?.

சரியாகத் தீர்க்கப்பட்டால் - நாம் எதிர்கொள்ளும் எல்லா சவால்களையும் சமாளிக்கத்தக்க எந்த இரண்டு பிரச்சனைகளைப் பற்றி பேசினால் அது நமக்கு உதவியாயிருக்கும்?

ஓர் அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவன் ஒருமுறை ஓர் ஒழுங்கற்ற சகோதரனிடம் இந்த சுவாரஸ்யமான கேள்வியைக் கேட்டார். " சபையில் மிகப்பெரிய பிரச்சனைகள் என்று எதைச் சொல்கிறீர்கள்? " அதற்கு அந்த நண்பர், " எனக்குத் தெரியாது... எனக்கு அதுபற்றியெல்லாம் கவலையில்லை என்றார். அதற்கு அந்த அர்ப்பணிக்கப்பட்ட " கிறிஸ்தவன் நீங்கள் சொல்லுகின்ற எனக்குத் தெரியாது " (அறியாமை) மற்றும் " எனக்குக் கவலையில்லை" (கண்டு கொள்ளாமை) போன்ற இரண்டும் மிகப்பெரிய பிரச்சனைகள் தான், நீங்கள் சொல்வது முற்றிலும் சரியே என்றார்.

### 1. அறியாமை?

நீங்களும் நானும் உண்மையாகவே இயேசுவை நேசித்தால், வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்வோம் (வேத பாட வகுப்பு, ஆராதனை, வாரத்தின் இடைப்பட்ட நாளில் ஜெபக்கூட்டம்) போன்றவைகளில் கலந்து கொண்டு நம்மால் முடிந்தவரை அவரைப்பற்றி கற்றுக் கொள்வோம். *கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளரத்தக்கதாக* அனுதின தியானம் தனிப்பட்ட வேத வாசிப்பு, ஜெபம் போன்றவற்றில் ஈடுபடும் போது நாம் ஆசீர்வதிக்கப்படுவோம் (2 பேதுரு 3:18).

### 2. கண்டு கொள்ளாமை?

அது எப்படி சாத்தியம்? " *உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்பு கூருவாயாக* " (மத்தேயு 22:37). நாம் அவரை முழு மனதோடு நேசிக்கிறோம் என்று சொல்லிவிட்டு, அவருடைய விருப்பங்களாக கண்டு கொள்ளாமலிருப்பது எப்படி சாத்தியமாகும்? "பரிசுத்தமுள்ள" கிறிஸ்தவர்களாக இருப்பதற்கு " முழுமையான " கிறிஸ்தவர்களாக இருப்பது அவசியம். மற்றவர்கள் நம்மைப் பார்த்து நமக்கு வேதாகமம் தெரியும், தேவனைப் பற்றி தெரியும் (அறியாமை இல்லை).... (கண்டு கொள்ளாமை இல்லை) என்று சொல்லும் போது அது அற்புதமாக இருக்குமல்லவா?.

# சபை, கிறிஸ்துவின் அழகான மணவாட்டி

## The church, christ`s, Beautiful Bride!

*Gary C. Hampton*



**பு**திய ஏற்பாட்டில் கர்த்தருடைய சபைக்கும், கர்த்தருக்கும் உள்ள உறவை நாம் புரிந்து கொள் ளும்படி பல உருவகங்கள் பயன்படுத்தப்பட்டிருக் கின்றன. அப்படிப்பட்ட ஒன்று தான் கண்ணைக் கவரும் அழகுடன் உருவக நடையில் (எபேசியர் 5:25,26) வசனங்களில் பவுலால் பயன்படுத்தப்பட்டிருக் கிறது. " புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்கு கிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமை யுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் ". அந்த வசனப் பகுதியை நாம் வாசிக்கும் போது ஓர் அழகான இளம் பெண் வெள்ளை நிற ஆடையை அணிந்து கொண்டு கணவனாகப் போகிறவனிடத்தில் அழகாக நடந்து


வரும் காட்சி நினைவுக்கு வருகிறது. அது எவ்வித தவறுமின்றி ஒவ்வொரு பெண்ணும் அந்நேரத்தில் மிக அழகாக தோற்றமளிக்கிறாள் என்பதைத் தான் காட்டுகிறது. அவள் எந்த மனிதனுடைய கையைப் பிடிக்கப் போகிறாளோ அந்த மனிதன் அவளுக்கு எதிராக வரும் எல்லோரிட மிருந்தும் அவளைப் பாதுகாத்து கனப்படுத்துவான். அந்த மணப் பெண்ணை விமர்சிப்பவர்கள் மணவாளனுடைய கடுங்கோபத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மணவாட்டியாகிய சபையில் அங்கம் வகிப்பவர்களை மற்றவர்கள் கடுமையாக கடிந்து கொள்ளும்போது கிறிஸ்து அவர்களை எப்படிப் பார்ப்பார் என்று நீங்கள் யூகிக்கிறீர்கள்? சபையினுடைய நோக்கங்களைக் குறித்து சிலர் வாக்குவாதம் பண்ணும்போதும், அவர்கள் ஆராதனை முறையில் வித்தியாசத்தை ஏற்படுத்தியிருப்பதால் சிலர் அவர்களுடைய ஆவிக்குரிய தன்மையைக் குறித்து கேள்வி கேட்கும் போதும், இயேசு அதை எப்படிப் பார்ப்பார் என்று நினைக்கிறீர்கள்?

இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களிடம் இவ்விதமாகச் சொன்னார். " *என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்* " (மத்தேயு 18:6). ஆதித் திருச்சபையைத் துன்பப்படுத்திய சவுலிடம் இயேசு இவ்விதமாகச் சொன்னார். " *சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்* " (அப்போஸ்தலர் 9:4). இந்த வசனங்களும், வேறு சில வசனங்களும் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையாரை மிக ஜாக்கிரதையாக பேச வேண்டுமென்று நம்மை எச்சரிக்கின்றன.

**நீதிமொழிகள் புத்தகத்தை எழுதிய ஆசிரியர்கள்**

1. **சாலொமோன் (1:1; 10:1; 25:1)**
2. **ஞானமுள்ளவர்கள் (22:7; 24:22; 24:23, 24)**
3. **ஆகூர் (30:1)**
4. **ராஜாவாகிய லேமுவேல் (31:1)**



என் கர்த்தருடைய சபை தனித்தன்மை வாய்ந்தது. அதன் தனித்தன்மை தான் அதை விசேஷித்த ஒன்றாக்கியிருக்கிறது. இந்த தனித்தன்மை தான் அதை மற்ற எல்லாவற்றிலிருந்தும் பிரித்துக் காட்டுகிறது. இந்த தனித்தன்மை உங்கள் வேதாகமத்திலும் என் வேதாகமத்திலும் ஆராயப்பட்டு, விளக்கப்பட்டிருக்கிறது.

# சபையின் தனித்தன்மை

## The Uniqueness Of the Church

*Ray Hawk*

### இது இயேசுவுடையது

முதலாவது, இந்த சபையை ஸ்தாபித்தவர் இயேசு. " *இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்* " என்று இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் சொன்னார் (மத்தேயு 16:18). அதைக் கட்டினவரும், பிரதான மூலைக்கல்லும் இயேசு கிறிஸ்துவே (எபேசியர் 2:20). அவரே சபைக்குத் தலையாயிருக்கிறார் (கொலோசெயர் 1:18,24). சபை அவருடைய சரீரம் என்றழைக்கப்படுகிறது (1 கொரிந்தியர் 12:27). இதில் அங்கம் வகிக்கும் அங்கத்தினர்கள் வேதாகம உபதேசத்தின்படி சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தபடியால் தேவனால் இதில் சேர்க்கப்பட்டவர்கள், (அப்போஸ்தலர் 2:37,47). இச்சபையில் இருப்பவர்கள் கிறிஸ்துவுக்கு மணமுடிக்கப்பட்டிருக்கிறார்கள் (ரோமர் 7:4). சபையைச் சேர்ந்த எல்லோரையும் அவர் தம்முடைய இரத்தத்தினாலே வாங்கியிருக்கிறார் (அப்போஸ்தலர் 20:28).

### இது நமக்கு அடைக்கல ஸ்தலமாகும்

இரண்டாவது, இந்த சபையில் இருக்கிறவர்கள் தேவ கோபாக்கினைக்கு தப்பித்திருக்கிறார்கள் (ரோமர் 5:9,11). அவர்களுடைய கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன, அவர்கள் ஆவியின்படி நடக்கிறபடியால் அவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோமர் 8:1,4). அவர்கள் அவரோடு கூட உன்னதங்களில் வீற்றிருக்கிறார்கள் (எபேசியர் 2:6). அவர்கள் அருமையான ஈவை பகிர்ந்து கொள்கிறார்கள். (ரோமர் 6:23). எல்லா ஆவிக்குரிய

ஆசீர்வாதங்களும் அவர்களுடையது (எபேசியர் 1:3). *அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப் பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான் களாக்கப்பட்டிருக்கிறார்கள்* (1 கொரிந்தியர் 6:11). அவர்கள் அவ ரோடு கூட ராஜாக்களும், ஆசாரியர் களுமாயிருக்கிறார்கள் (வெளி. 1:6; 1 பேதுரு 2:5,9)

**அவருடைய குடும்பம் எங்கேயோ அங்கேதான் சபை இருக்கிறது**

மூன்றாவது, அதில் அங்கம் வகிப்பவர்கள் தேவனுடைய வீடாக அழைக்கப்படுகிறார்கள் (1 தீமோத் தேயு 3:15). கிறிஸ்தவர்கள் அவரு டைய குடும்பமாக இருக்கிறார்கள் (எபிரெயர் 3:6). தேவன் சபை அங்கத் தினர்களை *தம்முடைய பிள்ளைக ளென்று குறிப்பிடுகிறார்* (கலாத்தியர் 3:26,29). அதன் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் *சகோதர சகோ தரிகளாகி* விடுகிறார்கள் (ரோமர் 12:1). தேவன் அவர்களுடைய பிதா வாக இருக்கிறார் (ரோமர் 1:7). அவர் தம்முடைய பிள்ளைகளைத் தேற்று கிறார் (2 கொரிந்தியர் 1:3,6). அவர் அவர்களை விசாரிக்கிறவராயிருக் கிறார் (1பேதுரு 5:7). அவர் அவர்களை நேசிக்கிறார் (1 யோவான் 4:9-11, 16,19).

**அவர் அதை அடையாளம் கண்டு கொள்கிறார்**

நான்காவது, இந்த சபைதான் பிரச்சனையால் பீடிக்கப்பட்டிருந்த *கொரிந்து பட்டணத்து தேவனுடைய சபை* (1 கொரிந்தியர் 1:2). இந்த சபை தான் வெண் வஸ்திரந்தரித்த சில பேரையுடைய சர்தையிலிருந்த செத்த சபையாகும் (வெளி. 3:1-4). இந்த சபைதான் கொஞ்ச பெலன் இருந் தும் வசனத்தைக் கைகொண்டபடி யினால் உற்சாகப்படுத்தப்பட்ட பிலதெப்பியா சபையாக இருந்தது (வெளி. 3:7,8). *இந்த சபைதான் தேவ னுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற சபை யென்று பாராட்டப்பட்ட தெச லோனிக்கேய பட்டணத்து சபை யாகும்* (1 தெசலோனிக்கேயர் 1:1). *இந்த சபை தான் குறைவாயிருக்கிற வைகளை ஒழுங்குபடுத்தும் படிக் கும், பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், அங்கே இருக் கிறவர்களுடைய வாயை அடக்கும் படிக்கும் மூப்பர்கள் அவசியப்பட்ட கிரேத்தா தீவிலிருந்த சபையாகும்* (தீத்து 1:5,11). சபையானது தவறுகிற அங்கத்தினர்களை உடையதாகவும், இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அவரைப் பின்பற்றும்படி திரும்ப திரும்ப நினைப்பூட்டப்பட வேண்டிய ஒன்றாகவும் தான் இருந்தது.

**அவர் அதை சிட்சிக்கிறார்**

ஐந்தாவது, தேவன் தம்மு டைய பிள்ளைகளிடத்தில் அன்பு கூரு கிறபடியால், அவர்களைச் சிட்சிக் கிறார் (எபி. 12:5,9). அவரை விட்டுப் பின்வாங்கிப் போகிறவர்கள் அவர் களுடைய ஆவி இரட்சிக்கப்படும் படியாக, மாம்சத்தின் அழிவுக்காக சாத்தானிடத்தில் ஒப்புக் கொடுக்கப் படுகிறார்கள் (எபிரெயர் 10: 25-29). பிதாவினிடத்திலிருந்தும், குமார னிடத்திலிருந்தும் அதிகமாக பெற்றுக்கொண்டவர்கள் தேவனை யும், குமாரனையும் விட்டு விட்டு சேற்றில் புரளுவதற்கு திரும்பும் போது அந்த நாள் மிகவும் துக்க கரமான நாளாக மாறி விடுகிறது (2 பேதுரு 2:20,22). மனந்திரும்புத லுடன் தேவனிடத்திற்கு மறுபடியும் திரும்புகிறவர்கள் மறுபடியும் இந்தத் தனித்துவம் வாய்ந்த சபையில் காணப்படும் தனித்தன்மை வாய்ந்த அன்பு, ஆறுதல், ஐக்கியம் மற்றும் ஜீவன் போன்றவற்றை அனுபவிப் பார்கள்.

# சபை முக்கியமானது

## The Church is Important

*P.C. Philomonraja*

பிரியமானவர்களே! உங்கள் அனைவருக்கும் பரிசுத்த மீட்பராகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள்!

அன்பானவர்களே! தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மிடையே, சபையின் முக்கியத்துவம் பற்றி வித்தியாசமான கருத்துக்கள் மற்றும் எண்ணங்கள் உள்ளன. நம்மில் சிலருக்கு ஞாயிற்றுக்கிழமை எப்பொழுது வரும் என்று, சபைக் கூடுகைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் உள்ளவர்களாக இருக்கிறோம். இன்னும் சிலர் ஏன் ஞாயிற்றுக்கிழமை வந்தது, இன்னைக்கு சபைக் கூடுகைக்கு வேற போக வேண்டுமே என சலிப்புள்ளவர்களாக இருக்கிறோம். லீவு ஒரு நாளைக்குத் தான் அன்று கூட எங்களை சுதந்திரமாக விடக்கூடாதா? என முறுமுறுக்கிறவர்களாக இருக்கிறோம்.

சபையின் முக்கியத்துவம் பற்றி நமக்குள் வித்தியாசப்பட்ட சிந்தனைகள் இருந்தாலும், நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிற்கு சபை என்பது மிகவும் முக்கியமானது. ஆனால், அந்த முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதில், நாம் சாத்தானால் வஞ்சிக்கப்படும் அபாயம் இருக்கிறது. அந்த அபாயம் ஆராதனைக்கு வருகை குறைதல், ஜனங்கள் ஐக்கியத்தையும், மகிழ்ச்சியையும் வேறிடத்தில் நாடுதல் போன்றவைகளால் வெளிப்படையாக தெரிகிறது. நம்மில் அநேகருக்கு கிறிஸ்து தேவை; ஆனால், அவருடைய சபை தேவையேயில்லை என நினைக்கிறோம்.

மதப்பிரிவுகள், கர்த்தருடைய சபையின் முக்கியத்துவத்தை தாக்கித் தகர்க்கிறது. சபைக்குள் ஒருவரையொருவர் கண்டுக்கொள்ளாமை, வேதாகம அறிவு இல்லாமை, முறிந்த ஐக்கியம் போன்றவைகள் சபையின் முக்கியத் துவத்திற்கு எதிரான பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. இந்த இதழில் நாம், சபையின் முக்கியத்துவம் பற்றி படிப்போம். சபை எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் வேதாகமத்தின் உதவியுடன் அறிய, நம் மனதை ஆயத்தப் படுத்துவோம்.

### I. கிறிஸ்து தம் சுய இரத்தத்தினாலே சபையை வாங்கினார்

அப்போஸ்தலர் 20:28 ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்ப தற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.

உங்கள் இரத்தம் உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது? அது உங்கள் வீட்டை விட மதிப்பானதா? அது உங்கள் வங்கி கணக்கை விட அதிக மதிப்புள்ளதா? அது உங்கள் வேலையை விட மதிப்பானதா? அப்படியானால், கிறிஸ்துவின் இரத்தம் அவருக்கு எவ்வளவு மதிப்புள்ளதாயிருக்கும்? அதற்கு நீங்கள் பதிலளிக்கும் போது, சபை எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்களே

அறிந்துகொள்வீர்கள். ஏனென்றால், கிறிஸ்து சபைக்காக இரத்தம் சிந்தினார். நீங்கள் சபைக்காக உங்கள் இரத்தத்தைக் கொடுக்க வேண்டியிருந்தால், சபை எவ்வளவு முக்கியமானது என்பதற்கு அதுவே சிறந்த நிரூபணமாயிருக்கும்.

## II. சரீரமாகிய சபைக்கு கிறிஸ்து இரட்சகராயிருக்கிறார்

எபேசியர் 5:23 கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவேர சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

நீங்கள், நித்தியத்திற்கும் கிறிஸ்து உங்கள் இரட்சகராயிருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா? (எபிரெயர் 13:20). அப்படியானால், நீங்கள் மரண பரியந்தம் உண்மையுள்ள அங்கத்தினராக இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது (பிலிப்பு 2:12). சபை, நமக்கும் நமது எதிர்காலத்திற்கும் நித்தியத்திற்கும் முக்கியமானதாகும் (2பேதுரு 1:10).

## III. சரீரமான சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார்:-

எபேசியர் 1:23 - எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

கிறிஸ்து, சபையின் நிறைவாகயிருக்கிறபடியால் நாம் பரிபூரணத்தால் நிறையப்பட வேண்டும் என்றால், அருவடைய சபையில் இருக்க வேண்டும். (எபேசியர் 3:14-19; பிலிப்பு 1:9-11; மத்தேயு 5:48). கிறிஸ்து மனித இனத்திற்கு எவைகளை எல்லாம் செய்ய விரும்புகிறாரோ, அவைகளை சபை மூலமாகவே செய்யத் திட்டமிட்டிருக்கிறார். இது, தனிப்பட்ட முறையில் நமக்கு சபையை முக்கியமாக்குகிறது.

## IV. சபையை அடையாளப்படுத்தும் வேதாகம உருவக நடைகள் :

நாம் சபையின் முக்கியத்துவத்தைக் காண மற்றுமொரு வழி, சபையை அடையாளப்படுத்தும் வேதாகம உருவக நடையைக் கவனிக்க வேண்டும். "*சரீரமாகிய சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார்* " (கொலோசெயர் 1:18). அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

சரீரம் தலையிலிருந்து பிரிந்து சென்றால், அது எவ்வளவு பயங்கரமான காட்சியாயிருக்கும். உங்கள் தலைக்கு உங்கள் சரீரம் முக்கியமானதா? ஆம்! முக்கியமானதென்றால், அந்த அளவுக்கு சபை கிறிஸ்துவிற்கும் முக்கியமானது.

சபை முக்கியமற்றது என்று சொல்வது, சரீரத்திலிருந்து கிறிஸ்துவின் இரத்தத்தை பிரித்தெடுப்பது போன்றதாகும். இரத்தம் இல்லாத சரீரத்தை (பிணம்), நாம் பார்க்க சகிக்காது. நாம் சபையின் முக்கியத்துவத்தைக் குறைப்பது என்பது, அவருடைய இரத்தத்தை அவருடைய சரீரத்திலிருந்து நீக்குவதாகும்.

சபை முக்கியமற்றதென்றால், கிறிஸ்து " *ராஜ்ஜியம்* " அற்ற ராஜாவாக இருப்பார். சபை ராஜா அற்ற ராஜ்ஜியமாக இருக்கும். கிறிஸ்து ஆடுகளில்லா (மந்தை) மேய்ப்பவராகவும், கொடியில்லாத " திராட்சை செடியாகவும் " இருப்பார். நாம் நமது சிந்தனையில் வேதாகமத்து மெய் சபையின் முக்கியத்துவத்தை உயர்த்துவோம்.

# நற்செய்திப்பணியில் பிரசங்கியாரின் பங்கை மறுமதிப்பீடு செய்தல்

## Re-Evaluating the preacher's Role in Evangelism

*Clayton Pepper*

**குறிப்பு : இக்கருத்துக்கள்** எல்லாம் அமெரிக்காவிலுள்ள கர்த்தருடைய சபையின் பிரதான கண்ணோட்டத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆனால், உலகெங்கிலுமுள்ள கிறிஸ்துவின் சபையார் எல்லோருக்கும் ஆலோசனை சொல்லும் ஞான வார்த்தைகளாகவும், எச்சரிப்பின் வார்த்தைகளாகவும் இருக்க முடியும். நம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற கட்டளைக்கு நாம் உண்மையாக இருக்க வேண்டுமென்றால் பிரசங்கிப்பதற்கும், ஊழியத்திற்கும் புதிய ஏற்பாட்டு மாதிரியை நாம் பின்பற்றுவது அவசியமாகிறது.

காலஞ்சென்ற Barsell Barrett என்பவர் தன் மரணத்திற்கு முந்தைய பேச்சில் இவ்விதமாகச் சொன்னார். " சபையானது அமெரிக்காவில் மீட்டமைக்கும் முயற்சியில் கடந்த 200 வருடங்களாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். தூய புதிய ஏற்பாட்டு சுவிசேஷத்தைக் கிட்டத்தட்ட 200 ஆண்டுகளாக பிரசங்கித்ததன் தாக்கம் என்ன? சொல்லப் போனால் நாம் இன்னும் தொடங்கவே இல்லை.

*வடக்கு மத்திய அமெரிக்காவிலுள்ள சபைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது. சொல்லப்போனால் சபைகளே இல்லை என்று சொல்லும் தேசங்களிலுள்ள சபைகளின் எண்ணிக்கையை விட இது குறைவானது... சபை அங்கத்தினர்களல்லாமல் வெளியிலிருந்து கிறிஸ்துவினிடத்தில் ஒவ்வொரு வருடமும் அழைத்து வரப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் மூப்பர்கள் அவர்களை நேரடியாக எதிர்கொள்வதற்கே வெட்கமாக இருக்கும். வெளியிலிருப்பவர்களைக் கர்த்தரிடத்தில் அழைத்து வரும் காரியத்தில் எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறோம் என்று ஒவ்வொரு பிராந்திய சபையும் ஜாக்கிரதையாக சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.* அப்போதிருந்து இன்று வரை ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அது கொஞ்சம் தான்.


பிரசங்கியாரின் வேலை அடிக்கடி மூப்பர்களின் பணியில் தலையிடுகிறதாக இருக்கிறதா? மூப்பர்கள் *மந்தையை மேய்க்கும்படியாக* கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் (1பேதுரு 5:2). அவர்கள் மந்தையை கண்காணித்து

மேய்க்க வேண்டும் (அப்போஸ்தலர் 20:28). மூப்பர்கள் சபை அங்கத்தினர் களின் ஆத்துமாக்களை விழித்திருந்து காண்காணிக்க வேண்டும். மேலும், அவர்கள் அப்பணியை எப்படி செய்திருக்கிறார்கள் என்று கணக்கொப்பு விக்க வேண்டும் (எபிரெயர்13:17).

இன்று பிரசங்கியாரின் பங்கை மிக ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். அதாவது, பிரசங்கியாரின் பங்கை புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற ஊழிய முயற்சிகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் (எபேசியர் 4:1112; 2 தீமோத்தேயு 2:2). பிரசங்கியாரின் பணி ஊழியம் மற்றும் மற்றவர்களைப் பயிற்றுவிக்கும் பணியிலிருந்து விலகி இவ்விரண்டையும் விட குறைவான பணிக்கு தள்ளப்பட்டுவிட்டதாக எண்ணற்ற எழுத்தாளர்களும், பேச்சாளர்களும் தங்கள் கவலைகளை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

---

முக்கியமான வசனங்களைப் பற்றிய துரிதமான வியாக்கியானம் (மத்தேயு 6:33)



James O. Baird என்பவர் இவ்விதமாக எழுதினார் : " *பிரசங்கியாரின் பங்குக்கு இவ்விதமாக விளக்கம் கொடுக்கிறார். சபையாக அழைக்கப்படுகிற கிறிஸ்தவர்கள் கூட்டத்திற்கு அவர் போதிக்கவும், பிரசங்கிக்கவும் செய்கிறார்; மூப்பர்களின் வழிநடத்துதலின் கீழ் சபைக் காரியங்களின் முதன்மை நிர்வாகியாக இருக்கிறார்; மந்தையை மேய்த்து வியாதிப்பட்டவர்களைப் போய் சந்தித்து, இருதயத்தில் சோர்ந்து போனவர்களை உற்சாகப் படுத்துகிறார்* ".

பிரசங்கியாரைப் பற்றிய இவ்விதமான பார்வை இடைப்பட்ட காலங்களில் தான் உண்டானது! ஒரு பிரசங்கியாரை ஒரு பாஸ்டராகப் பார்க்கும் பார்வை ப்ராடஸ்டண்ட் சபைகளில் பல நூற்றாண்டுகளாக பாரம்பரியமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

Harding வேதாகமப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைவராகயிருந்த காலஞ்சென்ற George Benon சொல்லும் போது : " *பிரசங்கியார்களுக்கும், போதகர்களுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இயற்கையாகவே நம் வழக்கமான பயிற்சி வகுப்புகளில் போதகர்களை ஈடுபடுத்துவோம். எப்படி பிரசங்கியார்கள் பிரசங்கியார்களை உருவாக்க விருப்பம் காட்டுகிறார்களோ அதே போல் போதகர்கள் போதகர்களை உருவாக்குகிறார்கள். அதன் விளைவாக, வேதாகமப் பள்ளியில் போதிக்கவோ அல்லது பிராந்திய சபையில் மந்தையை மேய்க்கவோ விரும்பும் மிகச் சிறந்த போதகர்களை நாம் உருவாக்குகிறோம். ஜனங்கள் எப்படி இருக்கும்படியாக போதிக்கப்படுகிறார்களோ அப்படியே இருக்கிறார்கள். நம் வேதாகமப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், மந்தை மேய்க்கும் பணியைச் செய்ய விரும்பும் அதிகமான பிரசங்கியார்களை உருவாக்குகிறோம். ஆனால், மிகக் குறைவான சுவிசேஷகர்களையே உருவாக்குகிறோம்.*

எண்ணற்ற பிரசங்கியார்கள் என்னிடம் பொது கூட்டங்கள் தவிர மற்ற நேரங்களில் இழந்து போனவர்களிடம் எப்படிப் போதிக்க வேண்டுமென்று ஒருபோதும் பயிற்றுவிக்கப் படவில்லையென்று சொல்கிறார்கள். என்னுடைய நண்பரான பிரசங்கியார் ஒருவர், " நன்கு அறியப்பட்ட ஒரு வேதாகமப் பள்ளியில் தான் படிக்கும் போது கிறிஸ்தவ கல்வியில் உறுதியான விசுவாசமுடையவராயிருந்தபடியால் ஒவ்வொரு நாளும் தியான வகுப்புகளில் கலந்து கொண்டு வேதாகமத்தை ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை படித்த போதிலும், தனியாள் ஊழியம் எப்படியாகச் செய்ய வேண்டுமென்று போதிக்கப் பட்ட ஒரு நாளை கூட தான் நினைவுக்கு கொண்டு வர முடியவில்லை " என்று சொன்னார்.

Tom Douglas என்பவர் வெளிநாட்டு ஊழியத்திற்கென்று பிரேசில் நாட்டிற்கு அனுப்பப்பட்ட போது, உறுதியான அஸ்திபாரத்திற்காக "சுவிசேஷர்களைப் பயிற்றுவித்தல் என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதினார். அதில் அவர் குறிப்பிட்டது என்னவென்றால், சமீபத்தில் பிரேசில் நாட்டு சபைத் தலைவர்களுக்கான மாநாடு நடந்தது. அதில் ஓர் இளம் கல்லூரி மாணவன் எழுந்து " ஆத்தும ஆதாயம் செய்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் மேடை பிரசங்கியார்களுக்கு மட்டும்

முக்கியத்துவம் கொடுக்கப்படுவதென்ன? அதை யாரும் உணர்ந்து கொள்ளாதபடியால், உலகத்தின் எல்லா பகுதிகளிலுமுள்ள கர்த்தருடைய ராஜ்யத்தில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை அந்த வாலிபன் அநேகமாக சுட்டிக் காட்டியிருக்கலாம். நாம் இளைஞர்களை ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாக உற்சாகப்படுத்தாமல் பொதுக்கூட்ட பிரசங்கியார்களாக உற்சாகப் படுத்தியிருக்கிறோமா?

இந்தப் பிரச்சனை பிரேசில் நாட்டிற்கானது என்று நாம் நினைக்காதபடி ஓர் அமெரிக்க சுவிசேஷகனுடைய உண்மைச் சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். ஒரு கிறிஸ்தவ கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்த பிறகு, டெக்சாஸ் பட்டணத்தில் பிரசங்க பணியைத் தொடங்கினார். அவருடைய வகுப்பறை மற்றும் பிரசங்க மேடையின் உபகரணங்களெல்லாம் ஆயத்த நிலையில் இருந்தது. அப்பட்டணத்து பிராந்திய சபை அவரையும், அவருடைய திறமைகளையும் வெகுவாக நேசித்தது. அவர் ஒரு மிகச்சிறந்த மேடைப் பிரசங்கியாக இருந்தார். ஆயினும், ஆயத்த வேலையில் சில வாரங்கள் கழிந்த பிறகு, சுவிசேஷகன் என்பவன் ஆத்தும ஆதாயம் செய்பவனாக இருக்கவேண்டுமென்பதை கண்டு கொண்டார். ஏற்கனவே, தெரிந்திருக்க வேண்டிய ஒன்று கண்டுபிடிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தது சற்று விநோதமாக இருக்கிறது. அவருடைய பணியைக் குறித்து பிராந்திய சபை மகிழ்ச்சியாக இருந்தது. அவர் பிரசங்கியாராக இருக்கும்படி உற்சாகப்படுத்தப்பட்டார். அவருடைய பணியானது சபையில் பிரசங்கிப்பது மற்றும் போதிப்பது, மருத்துவமனைக்குப் போய் நோயாளிகளைச் சந்திப்பது போன்றவைகளோடு நின்றுவிட்டது. கிறிஸ்தவர்களல்லாத வர்களுக்குத் தனிப்பட்ட முறையில் போதனை, சபையில் இதற்கென தனித்திறன் பெற்றவர்களால் செய்யப்பட்டது. இன்றும் அந்த பிரசங்கி மிகச்சிறந்த மேடைப் பிரசங்கியாகத் தான் இருக்கிறார். ஆயினும், அவர் தன்னுடைய அறிவு எல்லையை விரித்துக் கொண்டார். அதாவது, மிக வல்லமையாக மனிதர்களைப் பிடிப்பதற்குக் கற்றுக் கொண்டிருக்கிறார். அவர் தன்னுடைய பிரயாசத்திற்காக களம் ஆயத்தமாயிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார்.

ஒருவருடைய வேலையை மற்றவர்கள் மூலமாக செய்ய வைப்பதன் அவசியம் நம் வேலைகளில் வெளிப்படையாக்கப்பட்டிருக்கிறது. அந்த சுவிசேஷகன் உறவுகளை கட்ட ஆரம்பித்து மற்றவர்களுக்குப் போதிக்க ஆரம்பிக்கும்போது அவன் தன்னுடைய எல்லைகளை உடனே உணர்ந்து கொண்டார். ஒரு நாளுக்கு சில குறிப்பிட்ட மணி நேரங்கள் தான் உண்டு. பெரும்பாலும் ஒரு சபை, எண்ணிக்கையில் 50 அல்லது 75யை அடையும் போது அது போதுமென்று மெத்தனமாக இருந்து விடுகிறது. சிலர் புதிதாக ஞானஸ்நானம் பெறுகிறார்கள். சிலர் விழுந்து போகிறார்கள். பிராந்திய சபையின் வரலாற்றில் இதுதான் முக்கியமான நேரம். சபையானது இப்போது எல்லா அங்கத்தினர்களின் தேவையை உணர்ந்து கொள்ள வேண்டும், குறிப்பாக தேவனுடைய வார்த்தைகளைப் போதிக்கும் போதகர்களின் தேவையை உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால், ஒரு முழு நேர சுவிசேஷகரை பணியில் அமர்த்தி


ஊழியம் செய்யப்படுவதில் திருப்தி பட்டுக் கொள்ளலாம்.

பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது, " அநேக சாட்சி களுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி " என்று சொன்னார் (2 தீமோத்தேயு 2:2). இங்கே கருத்து என்னவென்றால், கேட்ட செய்தியை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க மனிதர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு முதலில் போதிக்க வேண்டும்.

இங்கே நாம் கற்றுக் கொள் வதற்கு ஒரு பாடம் இருக்கிறது. நம் வலியுறுத்தலில் மாற்றம் ஏற்பட்டால் நமக்கு எத்தனை பிரசங்கிமார்கள் தேவைப்படுகிறார்களோ அத்தனை பேரை வைத்துக் கொள்ளலாம். ஆத்தும ஆதாயம் செய்பவர்களால் நிரப்பப்பட்ட பல பிராந்திய சபை களும் இருக்கலாம். உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் செய்தியை எடுத்துச் செல்லக்கூடிய உண்மை யுள்ள மனுஷர்கள் நமக்குத் தேவை. இப்பணியிலிருந்து மேடைப் பிரசங் கியார்கள் உச்ச நிலையை அடை வார்கள். கூடுதலான ஆசீர்வாதம் என்னவென்றால், மிகச் சிறந்த ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக அவர்கள் காணப்படுவார்கள்.

இதைப் பிரசங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டாக நினைத்து வாசிக்க வேண்டாம். நல்ல பொது மேடைப் பிரசங்கியாராக இருப்பது தவறு என்று முடிவுக்கு வருகிறவர்கள் வேதாகமத்தில் பொது இடங்களில் தைரியமாக பேசினவர்களின் உதார ணங்களைப் பார்க்க வேண்டும். இங்கே பிரச்சனை என்னவென்றால், மேடைப்பிரசங்கியார்கள் நமக்கு கிடைக்கும் விதத்திலும், அவர்களு டைய பணியில் ஆத்தும ஆதாயம் இல்லாமலிருப்பதிலும் தான் இருக் கிறது. அப்போஸ்தலர்கள் கூட பொதுவான இடத்தில் வைத்து வெளிப்படையாகப் பிரசங்கிக்க அனுப்பப்படுவதற்கு முன்பாக கற்றுக் கொள்வதிலும் தனிப்பட்ட நபர் களுக்குப் போதிப்பதிலும் நேரத்தை செலவழித்தார்கள். ஆயினும், அதிக எண்ணிக்கையிலான உண்மை யுள்ள மனுஷர்கள். அதிக எண்ணிக் கையிலான தனிப்பட்ட நபர்களிடம் போதிக்கும்போது அதிக எண்ணிக் கையிலான ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறோம்.

நான் சபை வளர்ச்சி என்னும் பத்திரிக்கைக்காக என் பிரசங்கி நண் பரிடம் பிரசங்கியாரின் வாராந்திர செயல்பாடுகளை வெளிப்புறமான கவனம் மற்றும் உட்புறமான கவனம் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்து கட்டுரையொன்று எழுதும் படியாக சொன்னேன். ஆனால், அவர் அதை முயற்சிக்கவே பயப் பட்டார். காரணம் பிரசங்கியாரின் செயல்பாடுகள் ஊழியப் பொறுப்பு களை விட மேய்ப்பர்களுடைய கடமைகளை அதிகமாக உள்ளடக் கியதாக இருந்தன. அப்பிரசங்கியார் முனைவர் பட்டத்திற்கு முயற்சித்த போது பிரசங்கியாரின் பங்கு பற்றி அதிகமாக ஆராய்ச்சி செய்ததாக அவர் என்னிடம் தெரிவித்தார். இன்று சபை பிரசங்கியார்களை பயன் படுத்தும் விதத்தைப் பற்றி வேத வசனங்களில் எந்த பங்கும் விவரிக் கப்படவில்லை என்றும் கூறினார். ❁



# நாம் போவோம்...

## *Let Us Go.....*

***Bobby Wheat***

*" கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன் " (சங்கீதம் 122:1).*

சங்கீதக்காரன் வெளிப்படுத்திய இந்த வார்த்தைகளை வாசிப்பது என்னை எப்போதுமே மெய் சிலிர்க்க வைக்கும். இஸ்ரவேலர்களுக்கு, கர்த்தருடைய ஆலய ஸ்தலமான எருசலேம் பட்டணத்துக்கு புனிதப் பயணம் போவது ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது. *" எருசலேம் பட்டணத்திலிருந்து தூரமாகயிருந்த கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்கு அங்கே போவார்கள் " (சங்கீதம் 122:4).* தேவனை அவருடைய

விசேஷித்த ஸ்தலத்தில் ஆராதிப்பது இஸ்ரவேலர்களுக்கு ஒரு பெரிய சிலாக்கியமாக, மகிழ்ச்சியைத் தரும் ஓர் அனுபவமாக இருந்தது.

இப்போது, தேவன் சபைக் கட்டிடங்களில் வாசம் செய்வதில்லை என்று உங்களுக்குச் சுட்டிகாட்டத் தேவை யில்லை; தேவனை ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடக்கி வைக்க முடியாது என்பது உண்மையாயிருக் கிறது. உண்மையாகவே, கர்த்தரு டைய நாமத்தைத் துதிப்பதற்காக இப்படி ஒரு பயணத்தை மேற் கொள்வது ஒரு சிலாக்கியம் தான். இன்று நாம் தேவனை ஆராதிக்கும் படி எருசலேமுக்கு போக வேண்டிய தில்லையென்றாலும் கூட பலருக் குக் கர்த்தருடைய நாள் மற்றும் பரிசுத்தவான்களோடு சபையாகக் கூடுவது போன்ற நாட்கள் மகிழ்ச்சி யைத் தராமலிருப்பது கவலை அளிக் கிறது. நீங்கள் அதை ஞாயிற்றுக் கிழமைகளில் தேவனை ஆராதிக் கும்படி கூடிவரும் ஜனங்களின் வாடிப்போன முகங்களில் காண முடியும் (அவர்கள் சனிக்கிழமை இரவுகளில் தாமதமாக தூங்கிய படியால்) ஞாயிற்றுக்கிழமை காலை யில் தேவனை ஆராதிக்கும் போது தூக்கம் வழிந்த முகத்துடன் காணப் படுகிறார்கள். ஆராதனைச் சூழல் எதுவுமே அவர்களுக்கு ஒத்துக் கொள்வதில்லை. சபைக் கட்டிடத் தின் தட்பவெட்ப நிலையிலிருந்து வேத பாட வகுப்பு ஆசிரியர் வரை, பாடலை வழிநடத்துபவரிடமிருந்து பிரசங்கம் வரை அவர்களுக்கு எதுவுமே பிடிப்பதில்லை. கர்த்தரு டைய ஆலயத்திற்குப் போவோம் என்று சொல்லும் போது அவர் களுக்கு மகிழ்ச்சி இருப்பதில்லை.

நாம் தேவனை ஆராதிக்கும் படியான சிலாக்கியத்தைப் பெற்றி ருக்கிறபடியால் மகிழ்ச்சியை நாம் திரும்பவும் பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டும். தேவனு டைய ஜனங்களோடு சேர்ந்து தேவனு டைய நாமத்தைத் துதிப்பதற்கு நாம் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம் என்னும் விழிப்புணர்வை நம்மிடத் திலும், நம் பிள்ளைகளிடத்திலும் நாம் வளர்க்க வேண்டும். நாம் அடிக்கடி கூடிவருவதால் அந்த மகிழ்ச்சி குறைந்து விடுவதில்லை. தேவன் நமக்காக எவ்வளவு செய்திருக் கிறார் என்பதை மறந்துவிடும் நம் மனப்பான்மையும், மனநிலையும் தான், தேவனை ஆராதிக்கும்படி நாம் சபை கூடி வரும்போது நமக் கிருக்க வேண்டிய மகிழ்ச்சியை நம்மிடமிருந்து எடுத்துப்போடுகிறது.

நாம் என்ன செய்ய வேண் டும்? தேவன் தம்முடைய குமாரனா கிய இயேசுவின் தியாகத்தின் மூலமாக நம்மை இரட்சித்தார் என்ப தைத் தினமும் நினைத்துப் பார்க்க வேண்டும். தேவனுடைய வார்த்தை யில் நம்மை நாம் தொடர்ந்து பழக் கப்படுத்திக்கொண்டு, அவைகள் போதிக்கப்படவும், விரிவாக விளக் கப்படவும் நாம் ஏங்கத்தக்க நம்மை நாம் உருவாக்கிக் கொள்ள வேண் டும். முன் யோசனையுடனும், ஜாக்கி ரதையான திட்டமிடுதலுடனும் நமக் குள்ளும், நம் பிள்ளைகளுக்குள்ளும் தேவனை ஆராதிப்பது பற்றி ஓர் ஆர்வத்தையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்த வேண்டும். ஆராதனை யைக் குறித்து சனிக்கிழமையே வீட்டி லுள்ளவர்களிடத்தில் பேசுங்கள்; அதில் கலந்து கொள்வதற்குத் திட்ட மிடுங்கள்; அதைப் பற்றிய எதிர் பார்ப்புடன் படுக்கைக்குச் செல்லுங் கள்; காலையில் சீக்கிரமாக எழுந்து அதற்கான ஆயத்த வேலையில் இறங்குங்கள்; " *கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம்* வாருங் கள் என்று சொல்பவர்களோடு நாம் உண்மையாகவே மகிழ்ச்சியாக இருக்கத்தக்கதாக, ஆராதனையில் முழுமனதோடு கலந்து கொள்ளத் தக்கதாக நம் மனதிலிருந்து உலகக் காரியங்கள் எல்லாவற்றையும் எடுத்துப் போட வேண்டும். ❁

**உ**ண்மையாக ஆராதிப்பவராக இருப்பதற்கு, நல்ல ஆராதனை முறையை ஏற்படுத்துவதை விட அதிகமாக முயற்சி தேவைப்படுகிறது. உண்மையாகவே, உண்மையான ஆராதனை தேவ தரிசனத்துடன் ஆரம்பமாகிறது. பவுல் " அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள ரூபங்களுக்கு " ஒப்பாக மாற்றிய புறஜாதிகளைப் பற்றி பேசுகிறார். இயேசு சமாரிய ஸ்திரீயிடம் அவள் அறியாத ஒன்றை அவளுடைய ஜனங்கள் தொழுது கொள்வதாகக் கூறினார் (யோவான் 4:24). பவுல் அத்தனேப் பட்டணத்தாரிடம் அவர்கள் அறியாமையில் தேவனை ஆராதிப்பதாகச் சொன்னார். நாம் அணுகத்தேடும் தேவனைப் பற்றி அறிந்து கொள்ளாமல் அவருக்கு நாம் உண்மையான ஆராதனையை ஏறெடுக்க முடியாது.

நாம் ஆராதிக்கும் தேவன் பயத்திற்குரியர். மோசே எரிகிற முட்செடியில் தேவனை எதிர்கொண்ட போது அவரோடு பேச பயந்தார். சீனாய் பர்வதத்தில் இடி முழக்கங்கள், மின்னல்கள், எக்காளச் சத்தம், மலைப்புகை போன்றவற்றிற்கு மத்தியில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் பேசின போது பயந்தார்கள்.



# தேவ தரிசனம்

## A Vision of God

*Dan R. Owen*

ஜலப்பிரளயத்தைக் கொண்டு வந்த, ஆயிரகணக்கான இஸ்ரவேலர்களை வனாந்தரத்தில் பயத்திற்குரியவர். கர்த்தருடைய தசனாகிய தாவீது, "உமது கோபத்தின் வல்லமையை யும், உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்து கொள்ளுகிறவன் யார்? என்று கேட்கிறார் (சங்கீதம் 90:11). நம் தேவனை மரியாதை கலந்த பயத்தோடு அணுக வேண்டும்.

நாம் ஆராதிக்கும் தேவன் பரிசுத்தமானவர், அவர் முற்றிலும் வேறுபட்டவர், முற்றிலும் தனித்துவம் வாய்ந்தவர். அவருடைய தன்மையும், சித்தமும் எல்லாவற்றிலிருந்தும் வேறுபட்டது. அவருடைய பரிசுத்தத் திற்கு மரியாதை செலுத்துவதென்பது தேவனுடைய கட்டளைகளுக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுப் பதாகும். தேவனுடைய பிரசன்னம் இருக்கும் போது, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கிறோம். பரலோகத் தின் சேராபீன்களும், கேருபீன்களும் தொடர்ந்து இடை விடாமல் சேனை களின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தத் தைப் பற்றிய விழிப்புணர்வு நம் பாவம் மற்றும் இயலாமை பற்றிய முழுமையான விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. நம் தேவன் பரிசுத் தராயிருக்கிறபடியால் முழுமையான தாழ்மையுடனும், அவருடைய பரிசுத்த சித்தத்திற்குக் கீழ்ப்படிவ தோடும் நெருங்க வேண்டும்.

நம் தேவன் தம்முடைய மகிமையில் பயங்கரமானவர் எசேக் கியேல், தானியேல், மோசே போன் றோரின் தரிசனங்கள் வார்த்தையால் விவரிக்க முடியாத அளவுக்கு அழகான வைகள். அவர்கள் கண்டவைகள் ஒளிவீசுகிறதாக மின்னுகிறதாக, பிரகாசமானதாக, அதன் எல்லா நிலையிலும் வல்லமையானதாக இருந்தது. கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பியபோது, ஆசாரி யர்களால் உள்ளே போக முடிய வில்லை. அந்த தீர்க்கதரிசிகள் கண்ட தரிசனத்தின் அழகை விட தேவனு டைய தனிமையின் அழகு எல்லா வற்றையும் மிஞ்சியிருந்தது. மோசே மேகத்தில் நின்று கொண்டு தேவன் தம்முடைய தன்மையைப் பற்றி பேசக் கேட்டார். மோசே அங்கே தேவனை ஆராதிக்கும்படியாக உந்தப்பட்டார். நம்முடைய பயங்கரமான தேவனு டைய மிக மகிமையான காரியம் என்னவென்றால், அவருடைய நீதி, இரக்கம், நியாயம், தன்மை போன்ற வைகளாக இருக்கிறது.

நம் தேவன் அன்பாயிருக்கிறார். சிலுவையில் அக்கினி அல்லது வானவில் அல்லது எந்த ஒரு பிரகாச மும் இல்லையென்றாலும் அங்கே இருக்கும் இயேசுவின் சிலுவைக் காட்சி மாபெரும் தேவ தரிசன மாகும். இந்த தேவன்தான் நம்மை நேசித்து, தன்னலமற்ற முறையில் நம்மையே தியாகமாகத் தந்து, எல்லையில்லா கிருபைகளுடன் நம்மை நிரப்புகிறார். இந்த தேவன் நம்மை காருண்யத்தினாலே மூடி, தம்மிடம் இழுத்துக் கொள்கிறார். வார்த்தையாகிய இயேசு மாம்சமாகி கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமை யைக் கண்டோம்.

நாம் உண்மையாக ஆராதிப்ப வர்களாக இருக்க வேண்டுமா? அவருக்குரிய பயத்துடன் நாம் தேவனை அணுகுவோம். அவரு டைய பரிசுத்தத்திற்கு முன்பாக நம்மை நாம் தாழ்த்துவோம். அவரு டைய மகிமையான அழகின் அற்புதத் தைத் துதிப்போம். நாம் கர்த்தரு டைய பந்தியில் பங்கு பெறுவதற்காக கூடிவரும் போது அவருடைய எல்லை யற்ற அன்பிற்காக இருதயத்தை ஊற்றி அவருக்க நன்றி செலுத்து வோம். தேவன் தம்முடைய ஜனங்கள் உண்மையான ஆராதனை செய் பவர்களாக இருக்க உதவி செய்வாராக.

# எனக்கா? புற்றுநோயா?

## Me? Cancer?

*Sylvia Camp*

" திருமதி. கேம்ப் அவர்களே நான் பேசுகிறது உங்களுக்குக் கேட்கிறதா? " மருத்துவமனைப் படுக்கையிலிருந்த ஓர் உருவத்திடமிருந்து மெல்லிய குரலில் "ஆம்" என்று பதில் வந்தது.

நாங்கள் பெருங்குடல் சோதனையை முடித்து விட்டோம். நாங்கள் புற்றுநோயை கண்டறிந்திருக்கிறோம். நீங்கள் மருத்துவமனைக்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக வீட்டுக்குப் போக வேண்டுமா? என்று ஜீரணக் கோளாறு நிபுணர் கேட்டார். " இல்லை, தங்குவதற்கு ஆயத்தமாக வரும்படி யாகவே எனக்குச் சொல்லப்பட்டது ".

" நான் மிகவும் வருத்தப்படுகிறேன், ஆனால், நாங்கள் உங்களை நன்றாகப் பார்த்துக் கொள்வோம்".

உடனே வெளியில் நின்று கொண்டிருந்த என் குடும்பத்தோடு மறுபடியும் இணைந்து கொண்டேன். " நீ மருத்துவமனைக்குப் போய்க் கொண்டிருக்கிறாய் என்பது உனக்குத் தெரியுமா " என்று என் கணவர் கேட்டார். " அவர்கள் உன்னிடம் புற்றுநோயை கண்டுபிடித்திருக்கிறார்கள்". ஆச்சரியத்துடன், எதிர்மறையாக என் தலையை அசைத்தேன். மருத்துவர் உங்களிடம் சொன்னதாகச் சொன்னார் என்று என் குழந்தைகளில் ஒருவர் சொன்னார், எனக்கு மிகவும் குழப்பமாக இருந்தது.


" நான் மருத்துவர்களிடமும், செவிலியர்களிடமும் அந்த அறையிலிருந்த அழகான காகிதத்தைப் பற்றி பேசினேன். ஆனால், புற்று நோயைப் பற்றியோ அல்லது மருத்துவமனையில் பிரவேசிப்பதைப் பற்றியோ எனக்கு எதுவும் ஞாபகமில்லை ". மயக்கமருந்து எப்படி நினைவையும், எண்ணங்களின் ஒருங்கமைவுத் தன்மையையும் பாதிக்கிறது.

அதன்பிறகு, பல சம்பவங்கள் மிக வேகமாக நடந்தேறின, எனக்கு முன்பாகத் தோன்றிய காரியங்களைக் குறித்து சிந்திக்கக்கூட எனக்கு நேரம் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும் எனக்குப் புற்றுநோய் வந்தது என்பது பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அதன் அறிகுறிகள் மறுக்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்தியது.

என் ஊழியக்கார கணவரும், நானும் பல வருடங்களாகப் புற்று நோய் உள்ளவர்களிடம் நேரத்தைச் செலவு செய்திருக்கிறோம். அதனால்

அது வேகமாக பரவக்கூடிய நோய் என்றும், குணமாவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு என்பதையும் நாங்கள் ஆரம்பத்திலேயே உணர்ந்து கொண்டோம். கடந்த காலங்களில், எனக்குப் புற்றுநோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் என் பதில் எப்படியாக இருக்குமென்று எண்ணிப் பார்த்ததுண்டு. நான் கதறிக் கொண்டு மருத்துவமனை கதவுகளின் வழியாக கொண்டு செல்லப்படுவேனா, " எனக்குப் போக பிடிக்கவில்லை அல்லது அதை அமைதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா "?

இரத்தம் கொடுப்பது போன்ற ஆயத்த வேலைகளெல்லாம் அந்த இரவே பரபரப்பாக நடந்தது, அறுவை சிகிச்சை அறைக்கு அடுத்த நாள் காலையில் நேரமாகவே போய் விட்டேன். அறுவை சிகிச்சை நிபுணர் சிகிச்சைக்கு முன்பு கட்டுப் படுத்தி விடலாம் என நினைத்தார். இருந்த போதிலும் அறுவை சிகிச்சை நிபுணரும், புற்றுநோய் நிபுணரும்



புற்றுநோய் செல்களை அழிக்கும் (Chemo therapy) சிகிச்சையை ஒரு மாதத்தில் தொடங்க திட்டமிட்டிருந்தார்கள். உடலை நன்கு ஆராய்ந்தார். அதில் ஓரளவுக்கு அதை சிகிச்சை எடுப்பதினால் மட்டும் புற்று நோயிலிருந்து குணமடைந்து விட முடியாது. அது உடலில் உள்ள நல்ல செல்களையும், கெட்ட செல்களையும் அழித்து விடுகிறது. ஆயினும், இந்த சிகிச்சை முறை புற்றுநோய் செல்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்தி அது உடலில் பரவாதபடி தடுக்கிறது.

இரவின் இருளான வேளைகளில் தூக்கமின்மையால் அவதிப்பட்ட போது பலவிதமான எண்ணங்கள் என்னை வாட்டி வதைத்தன. என் பத்தாவது பிறந்த நாள் கழித்து அடுத்த மாதமே, நான் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தேன். என் வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் தான் கழிந்தது. என் மரண நேரம் நெருங்கிவிட்டதா? நான் ஆயத்தமாவதற்கு எல்லாவற்றையும் செய்துவிட்டேனா? நான் புற்றுநோயை ஒரு போதும் தெரிந்தெடுத்திருக்கமாட்டேன். ஆனால், நான் எதை தெரிந்தெடுப்பேன்? என் வியாதியைக் குறித்தே சிந்திப்பதில் என் நேரத்தை செலவு செய்ய கூடாது என்று முடிவெடுத்தேன். ஏனென்றால், சில காரியங்கள் நம் கைகளில் இல்லை.

எனக்கு தேவன் செய்த ஏராளமான ஆசீர்வாதங்களை எண்ணிப் பார்த்தேன். மருத்துவ உலகம் முன்பை விட இப்போது புற்றுநோய் நோயாளி களுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறது. புற்றுநோய் நிபுணர் நல்ல மனநிலையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். உண்மையில், நல்ல மனப்பான்மை செய்யும் நன்மைக்கு இணையாக எனக்கு தெரிந்த மருந்துகளில் எதுவும் பயன் தருவதில்லை என்று சொன்னார்.

என் வியாதி எப்போது வெளியே தெரிய ஆரம்பித்ததோ அப்போதிலிருந்தே என்னை விசாரிப்பதற்கு அழைப்புகள் வரத் தொடங்கின. அவர் களுடைய அக்கறையும், அன்பும் உண்மையாகவே எங்கள் வாழ்வில் ஆசீர்வாதமாயிருந்தது. ரஷ்யாவிலிருந்து பேக்ஸ் மூலமாக எனக்கு ஒரு செய்தி வந்தது. அதில் அங்கிருந்த ஓர் இளம் சபை எங்களுக்காக தினமும் ஜெபித்ததாக அறிந்தோம்.

மேலும், எங்கள் கொள்ளு பேத்திகளில் ஒருவரிடமிருந்து அக்கறை சம்மந்தமாக ஓர் அழகான உதாரணம் கிடைக்கப் பெற்றோம். காரில் அவள் தகப்பனோடு பயணித்துக் கொண்டிருந்த போது அப்பா பாட்டிக்காக நான் ஜெபிக்கட்டுமா? என்று கேட்டாள்.


" சரி, எலிசபெத் நிச்சயமாக அப்படி செய்யலாம் " என்றார் அப்பா.

அவள் மஞ்சள் நிறமுடி கொண்ட தலையை தாழ்த்தி, தன் கைகளை இறுக்கப் பிடித்துக் கொண்டு " தேவனே, என் பாட்டியை சுகமாக்கும் " என்று ஜெபித்தாள்.

# வாழ்க்கையின் பதற்றங்கள்: சாபமா அல்லது ஆசீர்வாதமா?

## Life's tenions : Curse or blessing?

*Jerry L. Davidson*



**நா**ம் பதற்றமான உலகத்தில் வாழ்கிறோம். நாம் எங்கும் பதற்றங்களைப் பற்றி வாசிக்கிறோம். அவைகளை நம் வாழ்வில் உணரவும் செய்கிறோம். பதற்றம் அரசாங்கத்தில், வியாபாரத்தில், பள்ளிகளில், வீடுகளில் காணப்படுகின்றன. நாம் தனிப்பட்ட முறையில் பொதுவாக அவைகளை நம் வாழ்க்கையில் தவிர்க்க விரும்பினாலும், பதற்றம் அல்லது படபடப்பு நல்லதாகவும் இருக்கலாம் அல்லது மோசமானதாகவும் இருக்கலாம் என்பது உணரப்பட வேண்டும். பதற்றம் கட்டுப்படுத்தப்படுமென்றால், அது நமக்கு நன்மையாக

முடியும். எப்படியெனில் கர்த்தருடைய வேலைக்குத் தேவையான உத்வேகத்தையும், அவசர உணர்வையும் அது தருகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் " *இவை முதலானவைகளையல்லாமல், எல்லா சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள் தோறும் நெருக்குகிறது* " *என்று எழுதினபோது அவருக்குள் இவ்விதமான படபடப்பு இருந்ததை நாம் அறிந்துகொள்ள முடியும்* (2 கொரிந்தியர். 11:28). பவுல் ஜனங்களின் துக்கங்களையும், கவலைகளையும் தன் இருதயத்தில் வைத்து சுமந்தார். பவுல் ஜனங்களின் அந்த அனுதின கவலைகளை சபையின் சார்பாக சுமக்க விரும்பியிருக்கவில்லையென்றால் அவருடைய பணிகளில் பல, கண்டு கொள்ளாமை மனப்பான்மையால் இழந்து போயிருக்கும். அதே விதமாக, அர்ப்பணிப்பும், ஆழமான அக்கறை கொண்ட கிறிஸ்தவர்களாகிய நாமும் ஆத்தும ஆதாயம் குறித்தும், கிறிஸ்துவின் நிமித்தம் செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்தும் கவலைப்பட வேண்டும்.

மறுமுனையில், கிறிஸ்தவர்களைப் பலவீனப்படுத்தி அழிக்கும் சில பதற்றங்களும் இருக்கின்றன. இது மாம்சத்திற்கும், ஆவிக்கும் இடையேயான போராட்டத்தில் தீர்க்கப்படாத காரியங்களால் ஏற்படுகிறது. இங்கே கவலையானது விசுவாசத்திற்கு முன்பாக வைக்கப்பட்டு, சகோதரர்கள் ஒற்றுமையாக இணைந்து வேலை செய்யத் தவறி, *ஒருவரையொருவர் கடித்துப் பட்சிக்கிற சூழ்நிலை ஏற்படுகிறது* (கலாத்தியர் 5:15). தேவனுக்கும், சாத்தானுக்கும் ஒரே நேரத்தில் ஊழியம் செய்ய முடியாது என்பதை கிறிஸ்தவர்கள் உணர்ந்து, தங்களுக்கு யார் எஜமான் என்பதை தீர்மானிக்க வேண்டும் (மத்தேயு 6:24).

நாம் தேவனோடு சரியான உறவை வைத்துக் கொண்டால் நமக்குள்ளிருக்கும் பதற்றங்களும், சகோதரர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் காணப்படும் பதற்றங்களும், பெரிய அளவில் நீக்கப்படும்.

நம்மால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாத பிரச்சனைகள் இருக்குமானால், நாம் ஜெபத்தின் மூலமாக அதைத் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும். " அவர் நம்மை விசாரிக்கிறவரானபடியால், நம் கவலைகளையெல்லாம் அவர் மீது வைத்து விட வேண்டும் " (1பேதுரு 5:7). William Barclay என்பவர் இவ்விதமாக இது குறித்து வர்ணித்துள்ளார். " தேவன் நம்மை விசாரிக்கிறவராயிருக்கிறபடியால் வாழ்க்கையானது நம்மை நொறுக்கும் படியாக அல்ல, நம்மை உருவாக்கும்படியாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். மேலும், அந்த நிச்சயத்தோடு தேவன் தம்மிடத்தில் அன்பாயிருக்கிறவர்களுக்குச் சகலவற்றையும்

நன்மையாக நடத்தித் தருவதால், நமக்கு ஏற்படும் எல்லா அனுபவத்தையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியும். உலகப் பொருள்கள் பற்றிய கவலைகள் நம்மை பாரப்படுத்த நாம் அனுமதிக்கக்கூடாது. ஏனென்றால், நாம் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடும்போது இவைகளெல்லாம் நமக்கு கூடக் கொடுக்கப்படுமென்று வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 6:33). இப்படிப்பட்ட காரியங்களைத் தேவனிடத்திற்குத் திருப்பி விடுவது நமது முடிவெடுக்கும் திறனையோ, கடின உழைப்பையோ, நல்ல நிர்வாகத்தையோ ஒருபோதும் தடை செய்வதில்லை. சிலருக்குப் பதற்றம், கவலை போன்றவைகள் ஓர் அழிக்கும் சக்தியாக " மாம்சத்தில் ஒரு முள்ளாக " இருக்கும். ஆனால், " மற்றவர்களுக்குப் பதற்றங்களும், கவலைகளும் மதிப்புமிக்க சாதனையைச் செய்ய தூண்டும் ஓர் உந்து சக்தியாக இருக்கும் ". பதற்றமானது நமக்கு எதிரானதாக இருக்கிறதா அல்லது நமக்கு ஆதரவானதாக இருக்கிறதா என்பது பரலோகத்தின் தேவன் மீது நமக்கிருக்கும் அர்ப்பணிப்பையும், அடிப்படை விசுவாசத்தையும் பொருத்தே அமையும்.

" கிறிஸ்தவ வாழும் கலை " என்னும் தலைப்பிலான ஒரு புத்தகத்தில் கீழ்க்காணும் ஐந்து ஆலோசனைகளைத் தருகிறார் :


1. செய்து முடிக்கக்கூடிய வேலைக்கு தகுந்தாற்போல், உங்கள் நாள், மற்றும் வாரத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

2. ஒரே நேரத்தில் ஒரு வேலையைச் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். பதற்றமான மனிதன் செயல்பாடுகளைச் சிதறவிடும்படி ஏவப்படுகிறான். மேலும், அவன் ஒரு காரியத்தைச் செய்யும் போது வேறு ஏதோ ஒன்று செய்வதைப் பற்றி கவலைப்படுகிறான்.

3. எப்போதும் சீரியஸாக இருக்காதீர்கள். நகைச்சுவை உணர்வில் பழகிக் கொள்ளுங்கள். தேவன் மனிதனுக்கு அழவும், சிரிக்கவும் சக்தியைக் கொடுத்திருக்கிறர்.

4. ஓய்வெடுக்கும் கலையைக் கற்றுக் கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் ஓய்வெடுக்கும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்.

5. தேவ சமூகத்தில் வாழக் கற்றுக் கொள்ளுங்கள். நம்மால் முடிந்தவரை சிறந்த வாழ்க்கையை வாழ்ந்து, மீதியை தேவனுடைய கரங்களில் விட்டு விட வேண்டும்.



# சமாதானம் பண்ணுகிறவர்கள்

Peace - Makers

***Demar Elam***

ஏசாயா தன்னுடைய தீர்க்க தரிசன உரையில் இவ்விதமாகச் சொன்னார். " நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியப் பிதா, சமாதானப் பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும், அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசாயா 9:6,7). இங்கே கிறிஸ்துவை விவரிக்கும்படி பயன்படுத்திய வார்த்தைகளைக் கவனியுங்கள். " அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்தியப் பிதா, சமாதான பிரபு " என்பனவைகளாகும்.

இயேசு சமாதானப் பிரபுவாயிருக்கிறார்! தேவதூதன் குழந்தை இயேசுவின் பிறப்பை " உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக " என்று சொல்லி அறிவித்தான் (லூக்கா 2:14). தேவன் மாம்சத்தில் தோன்றுவதைப் பற்றிய அறிவிப்பு மனிதன் மீதான சமாதானம் மற்றும் பிரியத்துக்கான அறிவிப்பாக இருந்தது.

கிறிஸ்தவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும், சமாதானத்தைச் சீர்குலைக்கிறவர்களாக அல்ல. மலைப் பிரசங்கத்தில் நம் அருமை ஆண்டவர் " *சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் என்றார்கள்* " (மத்தேயு 5:9). வாக்குவாதம் பண்ணுகிற, முதுகுக்குப் பின்னால் பேசுகிற, சண்டையிடுகிற, பிரச்சனைகளை உண்டாக்குகிற மக்கள் பரலோகத்தை இழந்து போவார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் எல்லோரிடத்திலும், எல்லாவற்றிலும் நல்லதையே பார்க்கிறார்கள். கலகம் நிறைந்த இவ்வுலகிற்குச் சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவை. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கிய வான்கள், அவர்கள் ஒருபோதும் வேலையில்லாமல் இருக்கமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.

இயேசு கிறிஸ்து நமக்கு சண்டை, சச்சரவு, பொறாமை, பகை உணர்வு போன்றவற்றை நமக்கு மாதிரியாக விட்டுச் செல்லாமல் சாந்தம், தாழ்மை, நீடிய பொறுமை, தயை போன்றவற்றை மாதிரியாக வைத்துப் போயிருக்கிறார். ஒரு கிறிஸ்தவன் தன் நேரத்தையெல்லாம் மற்றவர்களிடம் இருக்கும் நிறைகளைப் பார்ப்பதற்குப் பதிலாக குறைகளையே பார்த்துக் கொண்டிருந்தால் அது எவ்வளவு துக்கமாயிருக்கும்? சபையின் அங்கத்தி னர்கள் சமாதானக் கொள்கையை நடைமுறைப்படுத்தினால் அது எவ்வளவு சிறப்பாக இருக்கும்.

*சமாதானமில்லாதிருந்தும், சமாதானம், சமாதானம் என்று சொல்லும் படியாக நிச்சயமாக நான் ஆலோசனை சொல்லவில்லை* (எரேமியா 6:14). நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டுமென்று தான் நான் சொல்கிறேன். " *சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்* " என்று நாம் வாசிக்கிறோம் (எபேசியர் 4:3). சமாதானம் என்பது விலையேறப்பெற்ற பொருளாயிருக்கிற படியால் ராஜ்ய முன்னேற்றத்திற்கு அல்லது வளர்ச்சிக்கு அது அவசியமான தாயிருக்கிறது. நாம் ஒரே மனதாயிருக்க வேண்டும். நாம் ஒரே குரலில் பேசி, சக கிறிஸ்தவர்களுக்கு அன்பில் சிறந்த முன் மாதிரியாக இருக்கும் போது, தேவனுடைய குடும்பத்திற்கு ஒற்றுமையும், சந்தோஷமும் ஏற்பட நாம் உதவி செய்கிறோம்.

சமாதானமானது ஆவியின் கனிகளில் ஒன்றாக பட்டியலிடப்பட்டிருக் கிறது (கலாத்தியர் 5:22). பவுல் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை என்று சொல்கிறார் (கலாத்தியர் 5:23). இந்தக் கனியை நீங்கள் பெற்றிருக்கிறீர்களா? நீங்கள் சமாதானம் பண்ணுகிறவர் களாக இருக்கிறீர்களா அல்லது சமாதானத்தைச் சீர்குலைக்கிறவர்களாக இருக்கிறீர்களா?.

# தந்திரமான சோதனைக்காரன்

## The Subtle Tempter

***Frances Parr***



அமெரிக்க விமானப்படை ஆய்வுக் குழுவினர் பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ள வடக்கு லூசான் காடுகளில் வேலை செய்து கொண்டிருந் தார்கள். அவ்விடத்தில் மிருக வேட்டைக்காரர்களால் அவர்களுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருந்த படியால் அக்குழுவிலிருந்த ஒருவர் முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியாக முன்ன தாகவே அனுப்பப்பட்டார். அந்த நபருடைய தோளிலி ருந்த பிடிப்பானில் ஒரு துப்பாக்கி கொடுக்கப்பட்டி ருக்கிறது.

முன்பாக அனுப்பட்டவரை பின்தொடர்ந்து போனவர்களுக்கு முன் சென்றவருடைய முனகல் சத்தம் கேட்டது மிகவும் குழப்பமாக இருந்தது. கடைசியாக துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது. மோசமானது ஏதோ நடந்து விட்டது என்று பயந்து சகவீரருக்கு உதவி செய்ய அவர்கள் விரைந் தோடி னார்கள். அவர்கள் போன வழிதடத்தில் கண்ட காட்சியை அவர்கள் யாரும் எதிர்பார்க்கவில்லை.

அங்கே, முன்பாக அனுப்பப்பட்ட நபர் பலநூறு கிலோ எடையுள்ள மிகப் பெரிய மலைப் பாம்போடு போராடிக் கொண்டிருந்தார். அந்த மனிதன் மரத்தின் கீழே கடந்து போனபோது, பாம்பு அவன் மேல் விழுந்து, அவனை முழுக்கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளும்படி தன் ராட்சத வாய்க்குள் அவன் இடது தோளை பிடித்து வைத்துக் கொண்டது. அதன்பின்பு உடனே அவனை சுற்றிக் கொண்டு பிழிந்தெடுத்தது.

அதிர்ஷ்டவசமாக அந்த மனிதன் தன் தோளிலிருந்த துப்பாக்கியை எடுக்க முடிந்தது. அவர் அதை எடுத்து மலைப்பாம்பின் தலையில் சுட்டார். அந்த பாம்பு சாகும்போது கூட அந்த மனிதனை மிக இறுக்கமாக சுற்றிக் கொண்டது. அந்த ஆய்வாளர்கள் அந்த பாம்பை தொட அருவருப்பாக உணர்ந்தபோதிலும், தங்கள் பயத்தை ஓரமாக வைத்துவிட்டு, தங்கள் நண்பனுடைய உடலில் பின்னிப் பிணைக்கப்பட்டிருந்த பாம்பை எடுத்து வெளியே போட்டார்கள் அது சுலபமாயிருக்கவில்லை. அந்த செத்த பாம்பை இழுத்து வெளியே போடுவதற்குள் அவர்கள் எல்லோருமே களைப்படைந்து விட்டார்கள்.

ஆதியாகமம் 3:1,6 வசனங்கள் இளமையான பூமியில் சாத்தான் முதன் முதலாகத் தோன்றியது பற்றிக் கூறுகிறது. அவன் சர்ப்பத்தின் ரூபத்தில் தான் தோன்றினான். ஒருவேளை ஏவாள் தெரியாத்தனமாக அந்த நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் அருகே நின்றிருக்கலாம். சர்ப்பமானது ஏவாளின் கவனத்தை ஈர்த்த பிறகு தான் அந்த விருட்சம் எவ்வளவு அழகானதென்றும், அதன் கனி எவ்வளவு அழகானதென்றும் உணர்ந்தாள். சாத்தான் ஏவாளுக்கு முன்பாக தோன்றிய சில மணி நேரத்திற்குள்ளேயே அவன் ஏவாளை சோதித்து விட்டான், ஏவாளும் பாவம் செய்துவிட்டாள்.

உலகம் உண்டாக்கப்பட்டதிலிருந்து இந்நாள் வரை சாத்தான் தன் தந்திரத்தை இன்னும் மாற்றவில்லை. அவன் நம் பலவீனமான நேரங்களைக் கண்டுபிடித்து, தந்திரமாக நம்மை சிக்கவைத்து நம்மை பாவம் செய்ய வைக்கிறான். பெரும்பாலும் எல்லாம் முடிந்து, நம் செயல்களை நாம் சிந்தித்துப் பார்க்கும் வரை நாம் பாவம் செய்வதே நமக்கு தெரியாமல் போய் விடுகிறது.

அந்த ஆய்வுக்குழு மிருக வேட்டைக்காரர்களைத்தான் எதிர்பார்த்தது, மலைப்பாம்பை அல்ல. ஒருவேளை முன்பாக அனுப்பப்பட்ட நபர் தலையைத் தூக்கி மரத்தை அண்ணாந்து பார்க்கவில்லை இருந்த போதிலும் அங்கே ஆபத்து காத்திருந்தது. அங்கே கூட்டாளிகள் இல்லாமல் இருந்திருந்தால் இன்னும் நிலைமை அபாயகரமாக இருந்திருக்கும்.

சர்ப்பத்திடம் மாட்டிக் கொண்டவனை சக வீரர்கள் யாரும் அவன் அஜாக்கிரதையாக இருந்ததற்காகவோ, சர்ப்பம் மேலே விழுவதற்கு அனுமதித்ததற்காகவோ அவனைக் கடிந்து கொள்ளவில்லை. ஆனால், அப்பிரச்சினையில் உடனடியாக அவனக்கு உதவ முன் வந்தார்கள். நாமும் எவ்விதத் தாமதமின்றி பாவப் பிரச்சனையில் சிக்கி தவிக்கும் சகோதர, சகோதரிகளுக்கு உதவ முன்வர வேண்டும்.

பவுல் கலாத்தியர் 6:1,2 வசனங்களில் " *ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர் பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்* " என்று சொல்கிறார். ஆய்வுக் குழுவில் இருந்த நபர் மலைப்பாம்புடன் ஏற்பட்ட போராட்டத்தில் அவருடைய தோள் மிக மோசமாக காயப்படுத்தப்பட்டது அவருடைய இடது காதருகே ஏற்பட்ட வெடிச் சத்தம் பல வாரங்களுக்கு அவரைச் செவிடாக்கியது. அந்த அனுபவம் அவரை அடுத்த முறை காட்டுக்குச் செல்லும்போது கண்களை ஏறெடுத்துப் பார்க்க வேண்டும் என்னும் நினைவை விட்டுச் சென்றது.

அக்கிரமங்களிலிருந்து மீட்கப்பட்ட கிறிஸ்தவர்கள் ஒருவர் எப்படி எளிதாக, வேகமாக விழுந்து போக முடியும் என்னும் நினைவால் விட்டு செல்லப்படுகிறார்கள். சாத்தான் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் மும்முரமாக பின்பற்றுகிறான், யாருமே அவனுடைய கண்ணிக்குள் விழுந்து விட முடியும் என்பதை எல்லோரும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்போம், விசேஷமாக கடினமான சோதனையான நேரங்களில் நாம் ஒருவருக்கொருவர் ஆதரவாயிருந்து, நம்மெல்லாருக்காகவும் மரித்தவருடைய சித்தத்தை நிறைவேற்றுவோம்.



# மறைந்திருந்து தாக்கும் திருடன்

## A Robber in Ambush

***Bobby Dockely***

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் செல்லும் வழியில் கள்வர்கள் மறைந்திருந்து அவனைத் தாக்கிய சம்பவத்தைச் சொல்லியிருக்கிறார். அந்த மனுஷனிடமிருந்து உடைமைகளை உரிந்து கொண்டு திருடர்கள் குற்றுயிராக அவனை விட்டுச் சென்றார்கள் (லூக்கா 10:30).

தேவன் காயீனிடம் பாவம் மறைந்திருந்து தாக்கக் காத்திருக்கிறதென்றும், தங்கள் இருதயங்களைக் காத்துக் கொள்ளாதவர்களை அது கொள்ளையிடும் என்றும் எச்சரித்தார். " *நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை*

*ஆண்டு கொள்ளுவாய் " என்றார் (ஆதி. 4:7).*

**எவ்விதத்தில் பாவம் ஒரு திருடனாகிறது.**

கீழ்க்காணும் காரியங்களைக் கருத்தில் கொள்ளுங்கள்

**பாவம் நம் பண்பிலிருந்து நம்மைத் திருடுகிறது.**

பாவம் ஒழுக்க நெறிகளை அழித்துப்போடுகிறது. அது நற்பண்புகளின் சிகரத்தைக் கூட துன்மார்க்கமான காரியங்களில் ஈடுபட வைக்கிறது. ஒரு பழஞ்சொல் இவ்விதமாகச் சொல்கிறது. " செல்வத்தை நாம் இழக்கும்போது நாம் எதையும் இழக்கவில்லை; ஆரோக்யத்தை நாம் இழக்கும்போது ஏதோ ஒன்றை இழக்கிறோம். ஆனால், குணத்தை இழக்கும்போது நாம் எல்லாவற்றையும் இழந்துபோகிறோம் " என்று.

**பாவம் நம் முடிவெடுக்கும் திறனைத் தருகிறது.**

பாவம் பெரும்பாலும் தீமையிலிருந்து நன்மையைப் பகுத்தறியும் திறனை எடுத்துப் போடுகிறது. எபிரெயர் 3:13-ல் *பாவத்தின் வஞ்சனையைக் குறித்து நாம் எச்சரிக்கப் பட்டிருக்கிறோம்.* பாவம் வஞ்சிக்கிற ஒன்றாக இருந்து நம்மை ஒழுக்க ரீதியிலான காரியங்களில் முடிவெடுக்கவிடாமல் தடுத்து இறுதியில் நம்மை குருடாக்குகிறது.

**பாவம் நம் சுயமரியாதையைத் திருடுகிறது.**

பாவம் செய்துவிட்டு நன்றாக உணர்வது என்பது முடியாத காரியம். ஏசாயா *துன்மார்க்கர் அமர்ந்திருக்கக் கூடாமல் கொந்தளிக்கும் கடலைப் போல் இருக்கிறார்கள்* என்று சொல்கிறார் (ஏசாயா 57:20). பாவம் வெட்கத்தையும், அவமானத்தையும், சுயமரியாதை இழப்பையும் தான் ஏற்படுத்துகிறது.

**பாவம் நம் ஆவிக்குரிய வாழ்வைத் திருடுகிறது.**


யாக்கோபு 1:15-ல் " *பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும் " என்று நாம் வாசிக்கிறோம். " பவுல் பாவத்தின் சம்பளம் மரணம் " என்று எச்சரித்தார். (ரோமர் 6:23) எசேக்கியேல் பழைய ஏற்பாட்டு தேவ ஜனங்களை " பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் "* என்று எச்சரித்தார் (எசேக்கியல் 18:20).

**பாவம் நம் நித்திய பலன்களைத் திருடுகிறது.**

வேதத்திலுள்ள தெளிவான வசனப்பகுதிகளுள் ஒன்று 2 தெசலோனிக்கேயர் 1:8,9-ல் காணப்படுகிறது. அங்கே பவுல் பாவம் செய்து கிறிஸ்துவுக்கு எதிராக நின்றவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படுவார் என்று எச்சரிக்கிறார்.

பாவமானது ஒருவரை மறைந்திருந்து தாக்கி கொள்ளையிடுகிறது. இந்த அழகான பூமியிலிருந்து பாவம் எத்தனை ஆத்துமாக்களை கொள்ளை கொண்டு போயிருக்கிறது. பாவம், நாம் நினைத்துப் பார்ப்பதற்கு அதிகமாகவே நம்முடையவைகளைக் கொள்ளைகொண்டு போகிறது. ஆகையால், " *நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்* ". (1 யோவான் 2:1)

# வெளிச்சம் தருகிறது; உப்பு தூண்டுகிறது



***Light Provides; Salt Provokes***

***Danny Cline***

> *" நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் .... நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்... "*

**வெ**ளிச்சம் பதிலுக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. உப்பு பதிலளிக்கும்படி தூண்டுகிறது.

வெளிச்சத்தினால் மனிதர்களால் காணமுடிகிறது. வெளிச்சமானது செயல் செய்யப்படும்படியாகத் தூண்டுவதில்லை; மாறாக, செயல்படும் படியான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

ஆனால், உப்பு அழைக்கின்ற ஒன்றாக அதாவது செயலைச் செய்ய தூண்டுகிற ஒன்றாக இருக்கிறது. உப்பு ருசிபார்ப்பவருடைய வாயிலிருந்து உமிழ்நீரை வரவழைக்கிறது. அது செல்வாக்குள்ள அல்லது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக இருக்கிறது.

கிறிஸ்துவின் சீஷன் தேவ ஞானத்தை மக்களுக்கு ஊட்டுபவனாகவும், மெருகேற்றுகிறவனாகவும் இருக்கிறான். அவன் ஜனங்கள் தேவனைக் காண வெளிச்சத்தைக் கொடுக்கிறவனாயிருக்கிறான், அவனுடைய உப்புத்தன்மை தேவனுக்கடுத்த செயல்களைச் செய்யத் தூண்டுவது அவசியமாயிருக்கிறது. பிறருக்கு வெளிச்சம் காட்டுகிற ஒன்றாக இருக்கிறது. உப்பு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக இருக்கிறது.

ஒட்டுமொத்தமாக, வெளிச்சம் மற்றும் உப்பு சேர்ந்த கலவை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய, செயலைச் செய்யத் தூண்டும் தேவ ஞானத்தால் நிரப்பப்பட்ட சூழ்நிலையை உண்டாக்குகிறது.

வேறுவிதமாகச் சொன்னால் : நான் என்ன செய்ய வேண்டும் என்பதை காண்பதோடல்லாமல், அதைச் செய்யத் தூண்டவும்படுகிறேன்!

தயவு செய்து வெளிச்சத்தை ஏற்றி, உப்பையும் தருவீர்களா?

# நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ அப்படி ஆக்கிக் கொள்ளுங்கள்

## *Make of it what you will*

***Ancil Jenkin***

நம் உலகத்தை புரட்சிகரமாக்கிய சில சம்பவங்கள் உண்டு. அச்சு இயந்திரத்தில் அச்சடிக்கப்பட்ட முதல் புத்தகத்தைப்போல் எதுவும் இவ்வுலகில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. சுமார் 1450-ல் Johann Gutenberg என்பவர் முதன் முதலில் அச்சிடப்பட்ட புத்தகமாகிய வேதாகமத்தை உண்டாக்கினார். முதன் முதலாக தேவனுடைய வார்த்தைகளை உள்ளடக்கிய வேதாகமம் அதிக எண்ணிக்கையில் நியாயமான விலையில் கிடைத்தது. புராடஸ்டன்ட் மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவாக வேதாகமம் அப்போது கிடைத்தது. அதன் தாக்கம் இன்றும் உணரப்படுகிறது.

Gutenberg வேறொன்றையும் முதன்முதலாக உண்டாக்கினார் என்பது ஒரு சிலருக்குத் தான் தெரியும். முதல் வேதாகமம் அச்சிடப்பட்ட அதே அச்சகத்தில் தான் அவர் சீட்டுக்கட்டையும் அச்சிட்டார். சீட்டுக்கட்டில் பெரிய அளவில் தீமையில்லாவிட்டாலும் கூட, அது பலருக்கு துக்கத்தையும், வறுமை யையும், வேதனையையும் கொண்டு வந்திருக்கிறது.

பல காரியங்களில் நாம் எதை விரும்புகிறோமோ அதை செய்ய முடியும் என்பதற்கு இந்த பரவசமூட்டும் உதாரணம் சான்றாயிருக்கிறது. தேவன் நம்முடைய தீங்கிற்காக எதையும் நமக்கு தரவில்லை. மாறாக, நாம் அவருடைய ஈவுகளை எடுத்து சுயநலத்திற்காக பயன்படுத்திவிட்டோம். இந்த மாறுபாடு பொதுவாக மனிதனை வெகுவாக காயப்படுத்திவிட்டது. தேவன் நமக்கு கோதுமையைக் கொடுத்தார். நாம் அதை மாவாக அரைத்து அப்பம் உண்டாக்க பயன்படுத்துகிறோம். ஒருவர் அதே கோதுமையை எடுத்து அதை புளிக்க வைத்து, காய்ச்சி வடித்து, பல நாட்கள் வைத்திருந்து விஸ்கியாக மாற்ற முடியும். நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களை எப்படி விரும்புகி றோமோ அப்படி ஆக்க முடியும்.

வாழ்க்கையில் சில சூழ்நிலைகள் உண்டு. அதில் நம் பாடுகளுக்காக ஒட்டுமொத்தமாக நாம் பிறர் மீது பழிபோட முடியும். ஆதாம் தன் பாவத்திற்கு ஏவாள் மீது பழியை சுமத்தினான். பழிபோடும் பழக்கம் இன்றும் தொடர்கிறது. மற்றவர்கள் மீது பழி போடுவதற்கு பதிலாக,

தேவனுடைய ஈவுகளை ஆராய்ந்து அவைகளை முடிந்தவரை அவருக்காக ஏன் பயன்படுத்த தீர்மானிக்கக்கூடாது? நம் ஈவுகளை பயன்படுத்த வலியுறுத்தி பேதுரு இவ்விதமாக எழுதினார். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றி லேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர் களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்ப தாக. ஆமென் (1பேதுரு 4:11). தேவனுடைய வரங்களை நாம் விரும்புகிறபடி பயன்படுத்தலாம். ஆனால், அப்படிச் செய்வதில் நாம் வாழ்க்கையை கட்டு கிறோம். நித்தியத்திற்காக கட்டுகிறோம். நாம் எல்லோருமே கட்டுகிறவர் களாக இருக்கிறோம். ஆனால், எதைக் கட்டுகிறோம்?

## இயேசுவுக்கு செவி கொடுப்போம்

**இரட்சிப்பின் காரியங்களில்**

**– இயேசுவுக்கு செவி கொடுப்போம்**

**உபதேச காரியங்களில்**

**– இயேசுவுக்கு செவி கொடுப்போம்**

**ஐக்கிய காரியங்களில்**

**– இயேசுவுக்கு செவி கொடுப்போம்**

**அதிகாரம் சம்பந்தமான காரியங்களில்**

**– இயேசுவுக்கு செவி கொடுப்போம்**

**ஆராதனை காரியங்களில்**

**– இயேசுவுக்கு செவி கொடுப்போம்**

**சபை பற்றிய காரியங்களில்**

**– இயேசுவுக்கு செவி கொடுப்போம்**

**நித்தியம் பற்றிய காரியங்களில்**

**– இயேசுவுக்கு செவி கொடுப்போம்**

# ஆசீர்வாதங்கள் திரும்பி வருகின்றன

## Blessings Come Back

*Betty Tucker*



முன்பொரு காலத்தில் தேவன் அளித்த வாக்குத்தத்தத்தைக் கவனியுங்கள். " *இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்* " (உபாகமம். 28:12).

நீதிமொழிகள் 10:6-ல் மறுபடியும் நாம் " *நீதிமானுடைய சிரசின் மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்; நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும்* " என்று பார்க்கிறோம்.

### ஆசீர்வதிக்கப்பட்ட சிலர்

**எஸ்தர்** தான் அழைக்கப்படாவிட்டாலும், தன்னுடைய ஜனங்களைக் காப்பாற்றும்படியாக ராஜாவை அணுகினாள். அவள் மற்றவர்களுடைய நலனுக்காகத் தன் கிரீடத்தையும், பதவியையும் துறக்கத் துணிந்தாள். அதன் விளைவாக துன்மார்க்கமான ஆமானை அவளால் வெளிப்படுத்த முடிந்தது. மேலும், யூதர்கள் ஆமானின் பழிவாங்கும் திட்டத்திலிருந்து தப்ப முடிந்தது. ஏனென்றால், எஸ்தர் நான் செத்தாலும் சாகிறேன் என்ற மனநிலையில் இருந்தபடியால் (எஸ்தர் 4:16) அவளால் அந்த ராஜ சிங்காசனத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது. மொர்தெகாய் ராஜாவுக்கு அடுத்த இடத்தில் வைக்கப்பட்டான் (எஸ்தர்10:3). மேலும் முழு யூத தேசமும் ஆசீர்வதிக்கப்பட்டது.

**ராகாப்** எரிகோ பட்டணத்தை வேவுபார்க்கும்படியாக அனுப்பப்பட்ட இரண்டு மனுஷரை மறைத்து வைத்தாள். (யோசுவா 2:6,15). எரிகோ

பட்டணம் விழுந்தபோது ராகாப்பும் அவளுடைய குடும்பமும் மாத்திரம் இரட்சிக்கப்பட்டது (யோசுவா 6:25). ராகாப் விசுவாச வீரர்களின் பட்டியலில் கூட இடம் பிடித்துவிட்டாள் (எபிரெயர் 11:31).

**யோபு** மனிதபாடுகளுக்கான மிகச்சிறந்த உதாரணம். யோபு புத்தகம். மனிதபாடுகளின் பிரச்ச னையை இந்நூல் பதிவு செய்திருக் கிறது. ஆரம்பத்தில் யோபு சம்பிரம மாய் வாழ்ந்ததாகக் காண்கிறோம். அவருக்கு ஏராளமான ஆஸ்திகள், ஆடு மாடுகள், ஏழு குமாரர் மற்றும் மூன்று குமாரத்திகள் இருந்தனர். யோபு புத்தகத்தின் முதல் வசனம் யோபு " உத்தமனும், சன்மார்க் கனும், தேவனுக்குப் பயந்து, பொல் லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந் தான் " என்று சொல்கிறது. ஆனால், ஓ! இந்த நீதிமான் எத்தனை ஆபத்துக்களை எதிர்கொண்டார்!.

கண் சிமிட்டும் நேரத்தில், அவர் எல்லாவற்றையும் இழந்து விட்டார். கடைசியாக அவர் சாம்பலில் உட்கார்ந்து ஓர் ஓட்டை எடுத்து தன் தலையில் இருந்த பருக்களைச் சுரண்டிக் கொண்டிருந்தார் (2:8). இருந்தபோதிலும் இவைகள் எல்லா வற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ் செய்யவில்லை என்று வாசிக் கும்போது பரவசமடைகிறோம் (2: 10). யோபு தேவனுக்கு உண்மையாயி ருந்து தன் உத்தமத்தைக் காத்துக் கொண்டபடியால், " யோபுவுக்கு, முன் இருந்த எல்லாவற்றைப் பார்க் கிலும் இரண்டத்தனையாய் தேவன் கொடுத்தார் " (42:10).

## கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த வாக்குத்தத்தங்கள்

வேதாகம விசுவாசத்தைக் காத்துக் கொள்பவர்களுக்குத் தேவன் கொடுக்கும் ஆசீர்வாதங்கள் விசேஷித்த வாக்குத்தத்தங்களாக நிரப்பப்பட்டிருக்கிறது. அவற்றுள் சிலவற்றை நாம் கவனிப்போம்.

**ரோமர் 8:28** - " *தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறார்* ".

**லூக்கா 6:38** - " *கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக் கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்* ".

**மல்கியா 3:10** - " *அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்* ".

**1 கொரிந்தியர். 10:13** - " *தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங் கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்* ".

**1 பேதுரு 3:12** - " *கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்க மாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவன மாயிருக்கிறது* ".

# பொறாமை மற்றும் எரிச்சல்

## ENVY AND JEALOUSY

***Bill Nicks***

**வே**தாகமத்தில் " பொறாமை" என்பது மாம்சத்தின் கிரியையாக விவரிக்கப்பட்டுள்ளது (கலாத்தியர் 5:21). நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளர வேண்டுமென்றால் பொறாமை ஒழிக்கப்பட வேண்டும் (1 பேதுரு 2:1,2). பொறாமை தேவனுடைய பிரமாணத்தை மீறுவதாயிருக்கிறது (கலாத்தியர் 5:26) அது ஒரு பயங்கரமான பாவமாயிருக்கிறது (நீதிமொழிகள் 27:4), பொறாமையோ எலும்புருக்கி என்று (நீதிமொழிகள் 14:30) சொல்கிறது.

ஆனால், பொறாமை என்றால் என்ன? மற்றவர்களுடைய உயர்வையோ அல்லது மகிழ்ச்சியையோ பார்த்து உணரப்படும் வலியும் அவர்கள் மேல் உண்டாகும் கெட்ட எண்ணம் தான் பொறாமை. இது சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள் என்கிற கட்டளைக்கு எதிரானதாகும் (ரோமர் 12:15). பொறாமையுள்ள மனிதன் மற்றவர்களுடைய வெற்றியிலோ, உயர்விலோ சந்தோஷப்படுவதில்லை. அதற்கு மாறாக, மற்றவர்களுக்கு எதிராக துன்மார்க்கமான திட்டங்களைத் தீட்டி அவர்களுடைய பெயரை ஏதாவது வழியில் கெடுக்க முயற்சிப்பான்.

எரிச்சல் உணர்வும், பொறாமையும் ஒன்றுதான். ஆனால், நாம் பயன்படுத்துகிறபடி அவ்வளவு மோசமானதல்ல. எரிச்சல் உணர்வுக்கு நல்ல பொருளும் உண்டு. நம் தேவன் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார் (யாத்திராகமம் 20:5) அதன் பொருள் நாம் விக்கிரகங்களை வணங்குவதை தேவன் விரும்புவதில்லை என்பதாகும். இந்தப் பொருளில் ஒரு கணவன் தன் மனைவி தனக்கு உண்மையாயிருக்க வேண்டும் என எதிர்பார்த்து எரிச்சல் அடையலாம்.

எரிச்சல் உணர்வு அதன் இன்னொரு பொருளில், மற்றவர்களுடைய வெற்றியில் நமக்கு ஏற்படும் ஏமாற்றம், கவலை, கசப்பு போன்றவைகளைக் குறிக்கிறது. இது நம்மைவிட மேலானவர்களை நம்மை அறியாமலேயே மனதளவில் புகழ்வதாகும். ஏனென்றால், நம்மைவிட கீழானவர்கள் மேல் நாம் பொறாமை கொள்வதில்லையே. ஷேக்ஸ்பியர் "பொறாமை என்பது, தான் எதினால் போஷிக்கப்படுகிறதோ அதையே

பரிகாசம் செய்யும் ராட்சத ஜந்தாயி ருக்கிறது " என்று சொன்னார்.

அடிக்கடி வீட்டின் சமாதான மும், சபையின் சமாதானமும் பொறாமை மற்றும் எரிச்சல் உணர் வால் சீர்குலைக்கப்படுகிறது. இப்படிப் பட்ட சீர்குலைவை மேற்கொள்ள தாழ்மையும், சாந்தமும் அவசியப்படு கிறது. " நான் " என்னும் மனநிலை யை மறந்த நிலைதான் அன்பு. அதே நேரத்தில் பொறாமை மற்றும் எரிச்சல் உணர்வு போன்றவைகள் "நான்" என்பதன் உணர்ச்சிவசப் பட்ட நிலைதான். பொறாமை மற்றும் எரிச்சல் உணர்வுக்காக தீர்வு அல்லது மருந்து நம் இருதயத்தை அன்பால் நிரப்புவதும், நம்முடைய ஆசீர்வாதங் களை எண்ணிப் பார்ப்பதுமாகும். பிதாவின் கிரியைகளைச் செய்வதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட இயேசு கிறிஸ்துவின் மாதிரி யைப் பின்பற்றுங்கள் (யோவான் 9:4) நண்பர்களை, உறவினர்களை, உங்களோடு பணிபுரிபவர்களை விசேஷமாக எல்லா சகோதரர் களையும் பாராட்டக் கற்றுக் கொள் ளுங்கள்.

## நான் கொடுக்கட்டும்

எவ்வளவு காலம் வாழப்போகிறேன் என எனக்குத் தெரியாது.
ஆயினும், நான் வாழும் போது, கர்த்தாவே நான் கொடுக்கட்டும்
ஆறுதல் தேவைப்படுவோருக்கு கொஞ்சமாகிலும் ஆறுதல் கொடுக்கட்டும்.
புன்சிரிப்பினாலோ, அன்பான வார்த்தையாலோ செய்கையாலோ கொடுக்கட்டும்.

என்னால் முடிந்த எல்லாவற்றையும் நான் செய்யட்டும்.
சக மனிதனின் பாரத்தைக் குறைக்கும்படியாய்
இல்லை என்று சொல்லாமல் என் பங்கைச் செய்யட்டும்
சோர்ந்து களைத்துப்போன இதயத்தைத் " தூக்கி " நிறுத்தும் படியாய்

பிறருடைய மகிழ்ச்சியைத் திரும்பக் கொண்டு வரும்படியாய்
அப்பொழுது என் வாழ்க்கை வீணானதாய் இருக்காது
எவ்வளவு காலம் வாழ்கிறேன் என்பது குறித்து கவலைப்படமாட்டேன்
என்னால் கொடுக்க முடிந்தால்! முடிந்தால்!! முடிந்தால்!!!

# தேவனால் பிறந்தவர்கள்

## Born of God

*Bro. B. Arjunan*

உலகத்தில் பிறந்த எல்லோருமே தேவனால் பிறந்தவர்கள். ஏனெனில், ஆதாமுடைய பிள்ளைகளாகத்தானே இருக்கிறோம் என்று நீங்கள் நினைக்கக்கூடும். ஆம், நாம் எல்லோருமே ஆதாமின் பிள்ளைகள் தான் அதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. ஆனால், ஆதாம் தேவனுடைய கட்டளையை மீறி சாத்தானுக்கு செவி கொடுத்தபடியால் பாவம் அவனை ஆண்டு கொண்டது. அவன் ஒரு பாவியாக மாற்றப்பட்டான். ஆகையால், தேவன் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். பாவம் தேவனுக்கும், மனுஷனுக்கும் பிரிவை ஏற்படுத்தியது. அவனை மீண்டும் தேவனோடு இணைக்கும்படியாக பாவத்தைப் போக்கும் பலியாக இயேசு இப்பூமிக்கு வந்து பாவத்தை சிலுவையில் சுமந்து தீர்த்தார். இதை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவன் பாவத்திலிருந்து மீட்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாக மாற்றப்படுகிறான். அப்படி மாற்றப்பட்ட ஒருவன் மீண்டும் பாவம் செய்யாமல் தன்னைக் காத்துக்கொள்ளுகிறான். ஆகையால், " *தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம். தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான். பொல்லாங்கன் அவனைத் தொடான்* " (1 யோவான் 5:18).

இந்த வசனத்தில் தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்ய மாட்டான் என முதலாவது படிக்கிறோம். அப்படி பாவஞ் செய்யாமல் உலக முழுவதும் தேவனால் பிறந்தவர்களாக இருந்தால் இந்த உலகம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். தேவனால் பிறந்தவன் எப்படி பாவஞ் செய்யாமல், பாவத்திற்கு விலகியிருக்கிறான். " ஏனெனில், அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்த படியினால் பாவஞ் செய்யமாட்டான் " (யோவான் 3:9). அவருடைய வித்து என்பது தேவனுடைய வசனம் அவனுக்குள் இருக்கிறது. அந்த வசனம் பரிசுத்தமானது. அது தேவன் அருளியது. அதைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் பரிசுத்தமாக்கப்படுகிறார்கள். அது அவர்களைக் காக்கிறது. சரியான படி நடக்க அந்த வசனம் ஒவ்வொரு நாளும் அவர்களை வழி நடத்துகிறது. ஆகையால், தேவனால் பிறந்தவர்கள் பாவஞ் செய்யார்கள். ஒருவேளை நீங்கள் கேட்கலாம் எத்தனையோ கிறிஸ்தவர்கள் மீண்டும் பாவத்தினால் வஞ்சிக்கப்பட்டவர்கள். அவர்கள் கர்த்தரையும், அவருடைய வசனத்தையும் புறம்பாக்கிப் போட்டவர்கள். அப்படிப்பட்டவர்கள் மூலம் ஜீவனுள்ள

தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது. ஆனால், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அல்லது அவருடைய வசனத்தினால் தங்களைக் காத்துக்கொண்டு பாவத்திற்கு விலகினவர்கள் ஒருபோதும் பாவம் செய்ய மாட்டார்கள்.

இஸ்ரவேல் மக்களை வழிநடத்திக் கொண்டு வந்த மோசே என்ற தேவனுடைய மனுஷனை அறிவீர்கள். அவனை பார்வோனுடைய குமாரத்தி குழந்தையாயிருந்தபோது எடுத்து வளர்த்தாள். அவனோ வளர்ந்து எகிப்தின் சகல வித்தைகளிலும் வல்லவனாக இருந்தான். இராஜ அரமனையில் வளர்க்கப்பட்டான். அவனுக்கு ஏதாவது குறைபாடுகள் இருந்திருக்குமா? ஒன்றும் இருந்திருக்க வாய்ப்பில்லை. அவனைக்குறித்து வேதம் சொல்லு கிறது; " *விசுவாசத்தினாலே மோசே பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங் களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டு, இனிவரும் பலன் மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்து வினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்* (எபிரெயர் 11:24,26). யாராவது இவ்வளவு பெரிய இராஜ வாழ்க்கையை விட்டு விட்டு துன்பத்தை அநுபவிக்கும்படி தெரிந்து கொள்ளுவார்களா?. ஆனால், மோசேயோ தேவனுடைய மனுஷனாக, அவன் தேவனால் பிரித் தெடுக்கப்பட்டபடியால் எகிப்திலுள்ள பொக்கிஷங்களுக்கு அவன் மயங்க வில்லை. பாடுகளை அநுபவித்து பாவத்திலிருந்து நம்மை மீட்கும்படியாக வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் அந்நாட்களிலே வரக்கூடிய அந்தப் பாடுகளை ஏற்று தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிக்கும்படி அதை அதிக பாக்கியமாகக் கருதினான். ஏனெனில், அவன் தேவனால் பிறந்தவன். ஆகையாலே பாவத்தை வெறுத்துத் தள்ளினான். இச்செய்தியை கேட்டுக் கொண்டிருக்கிற நீங்கள் தேவனால் பிறந்தவர்களாயிருப்பீர்களானால் பாவம் செய்யமாட்டீர்கள் என வேதம் உங்களைக் குறித்து நற்சாட்சி கொடுக்கிறது. இந்த வேதாகமத்தின் சாட்சியை உங்களுடைய வாழ்க்கையில் காத்துக் கொண்டு தேவனுடைய பிள்ளைகளாக தொடர்ந்து வாழுங்கள்.

இரண்டாவது, தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான் என வாசிக்கிறோம். ஏனெனில், அவருடைய வித்து அவனுக்குள் இருக்கிற படியால் அவன் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுகிறான். " அவர் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களும் தங்களைக் காத்துக்கொள்ளு கிறார்கள். ஏனெனில், அவர்கள் தேவனால் பிறந்தவர்கள். ஆகையால், தங்களைக் காத்துக் கொள்ளுகிறார்கள். யோசேப்பு என்ற மனிதன் தன்னு டைய சகோதரர்களால் 20 வெள்ளிக்காசுக்கு இஸ்மவேலரிடத்தில் விற்கப் பட்டான். அவன் எகிப்திலே மீண்டும் பார்வோனுடைய பிரதானியும் தலை யாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனுக்கும் விற்கப் பட்டான். இரண்டு முறை மனிதர்களிடத்தில் ஒரு ஆடுமாடுகளை விற்பதைப் போல அந்நாட்களில் அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பின் மனநிலைமை

எப்படியிருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். கர்த்தர் அவனோடே இருந்தார். ஏனெனில், அவன் தேவனுக்குப் பயப்படுகிறவனாகவும், தேவனு டைய மனுஷனாகவும் இருந்தான். அவனுடைய எஜமான் கர்த்தர் அவனோ டிருக்கிறார் என்பதை அறிந்து அவனைத் தன் ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புக்கொடுத்தான். இத்தனை ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்ட யோசேப்புக்கு பிசாசு பாவ வலையை விரித்தான். போர்த்திபாரின் மனைவி அவன் மீது ஆசை கொண்டாள். இதை அறிந்த யோசேப்பு; " *இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத் தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்* " (ஆதி. 39:9). கர்த்தர் இவனோடியிருந்தபடியால் இவ்விதமான கேள்வியைக் கேட்டான். தேவனால் பிறந்தவன் பாவம் செய்யமாட்டான். ஏனெனில், அவன் தன்னை காத்துக் கொள்ளுகிறான். கர்த்தர் எவ்விதமாக இருக்கிறாரோ அவ்விதமாகவே தானும் இருக்கும்படியாகப் பாவத்திற்கு விலகி தன்னைக் காத்துக் கொண்டான். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் உங்க ளைப் பாதுகாத்துக் கொள்ளுகிறீர்களா? தேவன் நம்மைப் பாவத்தோடு படைக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவரைப் போலவே நம்மை சிருஷ்டித்தார். ஆகையால், பாவம் உங்களை அணுகாதபடி பாதுகாத்துக் கொள்ளுங்கள். யோசேப்பு தன்னைக் காத்துக்கொண்டபடியால் அவன் எகிப்திலே உயர்த்தப்பட்டான்.

மூன்றாவது, இப்படிக் காத்துக்கொள்ளுகிறவர்களைப் பொல் லாங்கன் தொடான் என காண்கிறோம். பிசாசு பெலவீனமுள்ளவர்களை அவர்களுடைய பெலவீனத்தை வைத்து தந்திரமாக ஆட்கொள்ளுகிறான். அவனுடைய மூன்று விதமான ஆயுதங்கள் மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய இவைகளை விதைத்து வைத்திருக் கிறான். இதில் அநேகர் விழுந்து மோசம் போகிறார்கள். இவைகளை ஒருவன் ஜெயிக்கும்போது அவன் தேவனுடைய பிள்ளையாக நிலைத்திருக்கிறான். அப்போஸ்தலன் யோவான் எழுதும்போது; " *பிதாக்களே, ஆதிமுதலிருக்கிற வரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும்* என எழுதியிருக்கிறார். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவ வாலிபர்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் என எழுதியிருக்கிறார். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவ வாலிபர்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினால் இன்று வரை கிறிஸ்தவம் உலகமெங்கிலும் பலன் கொடுத்துக் கொண்டி ருக்கிறது. நீங்களும் தேவனுடைய பிள்ளையாக இருப்பதால் பொல்லாங் கனை ஜெயிக்க முடியும். நாம், பொல்லாங்கனை ஜெயித்த ஆண்டவர் இயேசுவின் சீஷர்களாக இருக்கிறோம். " *ஆகையால், தேவனுக்குக் கீழ்ப் படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்* (யாக்கோபு 4:7). அநேகர் பிசாசுக்குப்

பயப்படுகிறார்கள். பிசாசு ஒன்றும் பெலவான் அல்ல. அவன் பொல்லாங்கன், களைகளை மனிதரில் விதைக்கக்கூடியவன். பிரிவினைகளையும், பிரச்சனைகளையும் கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் ஏற்படுத்துகிறவன். அவனால் நலமான காரியங்களைச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட பிசாசுக்கு நீங்கள் எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். நீங்கள் அவனுக்கு எதிர்த்து நிற்கக் கூடிய முழுபெலத்தைக் கர்த்தர் உங்களுக்கு கொடுப்பார்.

**தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்குமா?**

வானமும் பூமியும் தேவனால் உண்டானது. உலகமும் அதின் ஆசை இச்சையும் பிசாசினால் உண்டானது. ஆனபடியால், இவைகள் ஒரு நாளில் அழிந்து போகும். " *தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்* (1 யோவான் 5:4). நீங்கள் தேவனால் பிறந்தவர்களாயிருப்பீர்களானால் இந்த உலகத்தையும், இந்த உலகத்தில் இருக்கும் ஆசை இச்சைகளையும் ஜெயிக்க முடியும். இதற்கு உதவியாக இருப்பது உங்களுடைய விசுவாசம். விசுவாசம் என்பதை உங்களில் துவக்குகிறவரும், முடிக்கிறவரும் இயேசுவே. அவர் உங்களில் துவக்கிய விசுவாசம் உங்களில் கடைசிவரை நிலைத்திருக்குமானால் நீங்கள் இந்த உலகத்தை ஜெயிக்க முடியும். நீங்கள் தேவனால் பிறந்தவர்களா? அப்படியில்லையென்றால் இன்றே உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## கொஞ்சம் சிரிக்கலாம்
### (நீதி. 17:22)

ஒரு மனிதன் ஒரு பாட்டிலைக் கண்டெடுத்து, அதைத் துடைத்தபோது ஒரு பூதம் கிளம்பியது. அப்பூதம், அவனிடம், " நான் கொடுக்கத்தக்கதாக நீ என்னிடத்தில் ஏதாகிலும் கேள் " என்றது.

மனிதன் : நான் ஆகாயத்தில் பறக்க பயப்படுகிறேன். ஆகவே, சிங்கப்பூருக்கு பாலம் உண்டாக்கித் தர முடியுமா?

பூதம் : அது கடினம், வேறு ஆசை ஏதாகிலும் உண்டா?

மனிதன் : பெண்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உன்னால் விளக்க முடியுமா?

பூதம் : சிங்கப்பூருக்கு இரண்டு வழிப் பாலம் வேண்டுமா? நான்கு வழிப் பாலம் வேண்டுமா?

# பரிசுத்த வேதாகமம்

**பரிசுத்த வேதாகமம்** தேவ சிந்தையையும், மனிதனின் நிலையையும், இரட்சிப்பின் வழியையும், பாவிகளின் அழிவையும், விசுவாசிகளின் மகிழ்ச்சியையும் கொண்டுள்ளது.

- **வேதாகமத்தின்** உபதேசங்கள் பரிசுத்தமானது. இதன் சரித்திரங்கள் உண்மையானது. இதன் முடிவுகள் மாறாதது.
- நீ ஞானமாயிருக்கும்படி இதை வாசி. பாதுகாப்பாக இருக்கும்படி இதை விசுவாசி. பரிசுத்தமாயிருக்கும்படி இதைக் கைக்கொள்.
- **வேதாகமம்** உன்னை வழிநடத்துவதற்கான ஒளியையும், உன்னை ஆதரிப்பதற்கான ஆகாரத்தையும், உன்னை மகிழ்விப்பதற்கான ஆறுதலையும் இது கொண்டுள்ளது.
- **வேதாகமம்,** பரலோக பயணியின் வழிகாட்டியாகவும், ஆவிக்குரிய போராளியின் பட்டயமாகவும், கிறிஸ்தவனின் வான்ஊர்தியாகவும் உள்ளது.
- **வேதாகமத்தில்,** பரலோகம் திறந்திருக்கிறது. நரகத்தின் வாசல் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இயேசு போதிக்கப்பட்டிருக்கிறார். நம்முடைய நலன் இதில் திட்டமிடப்பட்டிருக்கிறது மற்றும் தேவனின் மகிமை முடிவாயிருக்கிறது.
- **வேதாகமம்,** நம்முடைய நினைவுகளை நிரப்ப வேண்டும். இருதயத்தை ஆளுகை செய்ய வேண்டும் மற்றும் நம்முடைய பாதங்களை வழிநடத்த வேண்டும்.
- **வேதாகமத்தை** அமைதியோடும், அடிக்கடியும், ஜெபத்தோடும் வாசி.
- வேதாகமம் செல்வத்தின் அரங்கமாகவும், ஆத்துமாவின் சுகமாகவும், ஆனந்தத்தின் ஆறாகவும் உள்ளது.
- **வேதாகமம்,** இவ்வாழ்வில் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நியாயத் தீர்ப்பின் நாளில் இது திறக்கப்படும். நித்திய காலத்திற்கும் நிலைநிறுத்தப்படும்.
- **வேதாகமம்** அதிக பொறுப்பை உள்ளடக்கியிருக்கிறது. உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கான நித்திய பலனை வாக்குத்தத்தம் செய்கிறது. பரிசுத்த கட்டளையை மீறுகிற யாவரையும் கண்டிக்கிறது.

### கிறிஸ்தவ இல்லம்

# என் பொக்கிஷம்

## My Treasure

***Betty Burton Choate***



அவள் இன்றிரவு என்னிடம் நானும் அப்பாவும்
மட்டுமிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? என்றாள்
பொருள்களை வாங்குவதற்கு பிள்ளைகளில்லாதபடியால்
நாம் எவ்வளவு ஐசுவரியமாக இருப்போம்!

என் இனிய மகளில்லாத சுட்டிப் பையனின்
முத்தமில்லாத நிலையை நான் எண்ணிப் பார்த்தேன்.
இவ்வுலகமும், பணமும் எவ்வளவு வெறுமையாக இருக்கும்;
இவைகளுக்காகப் பாடுபடுவது எவ்வளவு பயனற்றது.

நான் பொக்கிஷமாக வைத்திருக்கும் தங்கத்தை ஒருபோதும் செலவழிக்க முடியாது,
ஆனால், அதை என் இருதயத்தில் சேர்த்து வைக்கிறேன்
அங்கே அது பளபளப்பாக மின்னி அலங்கரிக்கின்றன
ஆனால், அதில் நான் அங்கம் வகிக்க முடியாதே.

நாம் பகிர்ந்து கொள்ளும் எல்லா அழகும், மகிழ்ச்சியின் எல்லா தருணங்களும்
நாம் வாசிக்கும் எல்லா கவிதைகளும், புத்தகங்களும்
நாம் போகின்ற எல்லா இடங்களும், காண்கின்ற யாவும்
தேவையில் உள்ளவர்களின் இதயத்துக்கு ஆறுதலாயிருக்குமோ;

தனிமையான உலகத்தில் நாமிருந்தால் பெரிய வீடோ
அல்லது அளவிட முடியாத ஐசுவரியமோ இருந்து என்ன பயன்
அதைச் சம்பாதிக்க நாம் போராடுவதால் என்ன பயன்
நாம் மகிழ்ச்சியாக இருந்தாலும், துக்கமாக இருந்தாலும்
கவலைப்படுவதற்கு இங்கே யாருமில்லையே!

பெரிய அளவில் மேன்மையாகவும்
பெரிய அளவில் தாழ்மையாகவும்
அன்பென்னும் சூரிய ஒளியில் குளிர்காய
என் பிள்ளைகளுக்காகவும் அவர்கள் எனக்கு முக்கியமாக இருப்பதாலும்
தேவனை அதிகமாக நான் ஸ்தோத்தரிக்கிறேன்

அவர்கள் உண்மையாகவே
பரலோகத்திலிருந்து வந்த பொக்கிஷங்கள் தான்!

## விசுவாசத்தை அடைவதற்கான காரணம்

Coleridge என்பவர் இவ்விதமாக எழுதினார். என் நோக்கமும், தணியாத ஆசையும் என்னவென்றால், இளவயதினரை கிறிஸ்தவத்தின் திட்டத்தைக் காட்டி அவர்களைப் பரிகாசக்காரர்களின் சோதனைகளிலிருந்து பாதுகாப்பதாகும். கிறிஸ்தவத் திட்டத்தை மனிதப் பகுத்தறிவினால் கண்டுபிடிக்க முடியாது. ஆனாலும், அது மனித பகுத்தறிவுக்குத் தூரமானதுமல்ல.

ஒருவனும் தன்னைத் தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கறாரென்றும், ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது. (1 கொரி. 3:15-20).

# திருமணம் பற்றிய கருத்து

## Choice : A Concept of Marriage

*Tunde Akodus*

**தி**ருமணத்தில் தெரிந்து கொள்ளுதல் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனென்றால், அது சரியான முறையில் போதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால், கர்த்தருடைய சபையில் தலைதூக்கியிருக்கும் திருமணம் சம்மந்தமான பிரச்சனைகளையும், விவாகரத்துகளையும் முற்றிலும் ஒழிக்காவிட்டாலும், ஓரளவாவது குறைக்க முடியும். பலர் திருமணம் செய்து சில மாதங்களுக்குப் பிறகு தாங்கள் தவறாக தெரிந்து கொண்டதாக அல்லது தெரிந்து கொள்ளுதலில் தவறு செய்துவிட்டதாக உணர்கிறார்கள். இது திருமணத்தின் மாபெரும் நிலையை அலட்சியப்படுத்தி, திருமணக் கூட்டாளியை தெரிந்தெடுப்பதில் தேவனுடைய சித்தத்தை கண்டுகொள்ளாமல் இருப்பதின் விளைவாகும்.

தேவன் தம்முடைய சித்தத்திற்குள் தெரிந்து கொள்ளுதலுக்கான அவசியம் இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார் (ஆதியாகமம் 24:3,4; 1 கொரிந்தியர் 9:5). கிறிஸ்து நாம் ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பு அதற்காகத் திட்டமிட்டு செல்லுஞ்செலவை கணக்குப் பார்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார் (லூக்கா 14:28). திருமணம் ஒரு கிறிஸ்தவனுக்கு மிகவும் முக்கியமானது. எப்படியெனில், அது அவனை வாழச் செய்யும் அல்லது தாழச் செய்யும். ஆகவே, வாழ்க்கைத் துணையைத் *தெரிந்தெடுப்பது* மிகவும் முக்கியமானது.

பொருளாதார நிபுணர்கள் மனிதன் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய இருக்கின்ற குறைவான வளங்களைக் கொண்டு, மனித வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் முறை தான் "தெரிந்து கொள்ளுதல்" என்று விளக்கம் கொடுக்கிறார்கள். ஆகவே, மனிதன் தன் வரிசைப்படுத்தி தனக்கு அதிகமாகத் தேவைப்படுவது எது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறான்.

இதே கொள்கையை கிறிஸ்தவர்கள் வாழ்க்கைத் துணையைத் தெரிந்து கொள்ளும் காரியத்தில் பொருத்திப் பார்ப்பதை இரண்டு விதமாக பிரித்து விடலாம். *முதலாவது*, ஒரு கிறிஸ்தவன் வாழ்க்கை துணையை தெரிந்து கொள்வதில் தேவனுடைய சித்தம் என்ன என்பதை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்து, கர்த்தருடைய சபையில் துணையைத் தெரிந்து கொள்ள வேண்டும். சிறு வயது நண்பர்கள், குடும்ப நண்பர்கள், உடன் வேலை செய்கிறவர்கள் போன்றவர்களோடு நெருங்கிய

உறவு வைத்து அவர்களை வாழ்க்கை துணையாக ஏற்றுக்கொள்ளும் எண்ணத்தை அடியோடு விட்டுவிட வேண்டும்.

இந்தக் கட்டத்தில் கர்த்தருக்குள் மாத்திரம் வாழ்க்கைத் துணையைத் தெரிந்து கொள்வதன் மாபெரும் ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள் (உபாகமம் 7:3,4; 1 கொரிந்தியர் 7:39; 2 கொரிந்தியர் 6:15,16). அதில் நிச்சயமாகவே பொதுவான விசுவாசம், இலக்கு, நம்பிக்கை மற்றும் ஐக்கியம் போன்றவைகள் இருக்கும். திருமண நோக்கத்துடன் ஒரு அவிசுவாசிக்கு போதிப்பது ஓர் அபாயகரமான செயலாகும். இதை முடிந்த வரை உற்சாகப்படுத்தக் கூடாது. பிரசங்கிப்பதின் பிரதான நோக்கம் ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காகத்தான் இருக்க வேண்டும். துணையை பெற்றுக் கொள்வதற்காக இருக்கக் கூடாது.

**இரண்டாவது,** சபையில் திருமணமாகாத எல்லா சகோதர சகோதரிகளும் உண்மையுள்ளவர்களாக அல்லது திருமணத்திற்கு உகந்தவர்களாக கருதப்பட முடியாது. ஆகவே, ஒரு கிறிஸ்தவன் திருமணத்தின் போது தெரிந்து கொள்ளுதலின் பிரச்சனையை எதிர்கொள்கிறான். அந்த சகோதரனோ அல்லது சகோதரியோ உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்களா? கீழ்ப்படிதல் அவர்களுடைய உயிர்மூச்சாக இருக்கிறதா? அவர்கள் மாய்மாலம் செய்கிறார்களா? திருமணத்திற்கு துணையைத் தேடும் ஓர் ஆணுக்கோ, பெண்ணுக்கோ இப்படிப்பட்ட கேள்விகள் மனதில் எழுவது இயற்கையே.

சிலர் தங்கள் துணை வெளிப்படையாகப் பேசுகிறவராக, தைரியமாகப் பேசுகிறவராக இருக்க வேண்டுமென்று விரும்புவார்கள், சிலர் தங்கள் துணை அமைதியானவராகவும், தாராளமானவராகவும், பொறுப்பானவராகவும், சுறுசுறுப்பானவராகவும் இருக்க வேண்டுமென்று விரும்புவார்கள். இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகள் ஒருவரை நீண்டகாலம் காக்க வைத்துவிடும்.

சில கிறிஸ்தவர்கள் வருங்கால துணையாக இருக்க வாய்ப்புள்ளவர்களின் ஆவிக்குரிய தன்மைகள் குறித்து கருத்தில் கொள்வதே இல்லை. அந்த நபருக்கு நல்ல வேலை, கார், வீடு போன்றவைகள் இருந்து அவர் பெயரளவில் கிறிஸ்தவராக இருந்தால் போதுமானது என்று நினைக்கிறார்கள். சிலருக்கு தங்கள் வாழ்க்கை துணை அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அழகாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். அதை முக்கியமானதாக கருதுகிறார்கள் (நீதிமொழிகள் 31:30). இது நிச்சயமாக நல்லதுதான். ஆனால், திருமண துணையைத் தெரிந்து கொள்ளும் காரியத்தில் அது நமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கக் கூடாது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலிருந்தோ, கிராமத்திலிருந்தோ அல்லது மாநிலத்திலிருந்தோ துணையைத் தெரிந்து கொள்ளும் மனப்பான்மை நமக்குள் இருக்கக்கூடாது (கலாத்தியர் 3:26,29).

திருமணத் துணையைத் தெரிந்து கொள்வதில் தேவனுடைய உதவியை நாடுவது தான் மிகவும் முக்கியமான காரியம். நாம் கேட்க வேண்டுமென்று அவர் சொல்லியிருக்கிறார். நம் ஆவிக்குரிய வாழ்வை வளப்படுத்தி நாம் பரலோகம் போக உதவி செய்யும் ஒரு துணைக்காக

நாம் ஜெபித்தால் நாம் தேவனிடத்தி லிருந்து அந்த உதவியை பெறுவோம் என்று நான் நம்புகிறேன் (மத்தேயு 7:7; 6:33; 1 யோவான் 5:14). நாம் அப்பத்தைக் கேட்டால் தேவன் நமக்கு கல்லைத் தரமாட்டார் என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக் கிறார். ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவரோ, கிறிஸ்தவனோ நம் மனதில் இருந்தால் கூட, நாம் இடைவிடாத ஜெபத்துட னும், உபவாசத்துடனும், தேவனிடத் திற்குப் போய், அவர் பதில் தரும்படி நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

அனுபவ அடிப்படையில் பார்க்கும் போது நாம் எந்தத் துணைக்காக ஜெபித்துக் கொண்டி ருக்கிறோமோ, எந்த துணையைத் தெரிந்து கொள்ள எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோமோ, எந்த துணையிடம் நாம் திருமணப் பேச்சைத் தொடங்கலாம் என்று இருக்கிறோமோ அல்லது எந்த துணை தானாக முன்வருவார்க ளென்று எதிர்பார்க்கிறோமோ அந்த துணை வேறு ஏதாவது கிறிஸ்த வருக்கு நிச்சயம் ஆகியிருக்கலாம் அல்லது வேறு ஏதாவது கிறிஸ்த வரோடு விவாகத்தில் இணைந்திருக் கலாம். இது ஆரம்பத்தில் நமக்கு சோர்வையும், வேதனையையும் உண்டாக்கும். ஆனால், அப்படிப் பட்ட நபர் ஒருவருக்கு தேவனால் அங்கீகரிக்கப்பட்ட துணை அல்ல என்பதை துரிதமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தேவனோடு கோபப்பட்டு, ஜெபத்தின் வல்லமையில் சோர் வடைந்து போவதற்கு பதிலாக அந்த புதுமண தம்பதிகளோடு சேர்ந்து சந்தோஷப்படுங்கள், புதுச்சூழலுக்கு உங்களைப் பழக்கிக் கொள்ளுங் கள், தொடர்ந்து ஜெபித்துக் கொண்டு, பொறுமையாயிருங்கள். ஏற்ற காலத்தில் தேவன் உங்களுக் காக வைத்திருக்கும் ஏற்ற துணை யை நீங்கள் காண்பீர்கள்.

தேவனுடைய ஆசீர்வாதங்கள் ஒருபோதும் கூட்டப்பட்ட வேதனை களோடு வருவதில்லை. யோனா நினிவே பட்டணத்தின் மீது தேவன் பரிதாபப்பட்டதைக் குறித்து கோப மடைந்தார். ஆனால், நினிவே பட்டணத்தார் தேவனிடத்தில் திரும்பியதால் தான் தேவன் அப்படணத்தின் மீது இரக்கம் பாராட்ட காரணமாக அமைந்தது என்பதை யோனா ஒரு போதும் உணரவில்லை. அதே விதமாக, நீங்கள் உத்தேசித்திருந்த துணை எந்த கிறிஸ்தவருக்கு நிச்சயம் ஆகியிருந்தாரோ அல்லது எந்த கிறிஸ்தவரோடு விவாகத்தில் இணைந்தாரோ அந்த கிறிஸ்தவர் விசுவாசத்திலும், ஜெபத்திலும் உங்களைவிட அதிகமாக தேவனி டத்தில் நெருக்கமாக இருந்திருப் பார். நீங்கள் அதிகமாக தேவனி டத்தில் ஜெபியுங்கள். அவருக்கு அதிகமாகக் கீழ்ப்படியுங்கள் (மத்தேயு 7:1).

எல்லாவற்றையும் விட, நீங்கள் துணையைத் தெரிந்து கொண்ட பிறகு, அத்துணையை அணுகும் காரியத்தில் தேவனுடைய ஞானத்தையும், மூப்பர்களின் ஆலோசனைகளையும் பயன்படுத் திக் கொள்ளுங்கள். பிசாசு எவனை விழுங்கலாமோ என்று சுற்றித் திரிவதால் விழித்திருங்கள். அல்லது நீங்கள் விரும்பிய துணை கைகூடி வரும் போது, இச்சையடக்கத்தோடு இருந்து உண்மையுள்ளவர்களின் ஜெபங்களுக்குப் பதிலளிக்கும் தேவனுக்கு நன்றியுள்ளவர்களா யிருங்கள். ஏனென்றால், அவரு டைய இரக்கங்கள் தான் என்றென் றைக்கும் நிலைத்து நிற்கும். ❁

# உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு

## Prepare To Meet Thy God

*E. Claude Gardner*

" *ஆகையால், இஸ்ரவேலே, இந்தப் பிரகாரமாக உனக்குச் செய்வேன்; இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப் போகிறபடியினால் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு* " (ஆமோஸ் 4:12).

இவ்வசனப்பகுதி அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இது பெரும்பாலும் மரணம் மற்றும் நியாயத்தீர்ப்புக்கு எப்போதும், எல்லோரும் ஆயத்தமாயிருக்க வேண்டும் என்று உற்சாகப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆயினும், இந்த ஆமோஸ் புத்தகம், குறிப்பாக (4:12) வருங்காலத்திற்காக ஆயத்தப்பட வேண்டுமென்று குறிப்பிடவில்லை. அப்படியென்றால், இந்த வசனம் எதைக் குறிக்கிறது? இதற்கான பதிலுக்கு, முதலில் ஆமோஸ் தீர்க்கதரிசி பற்றியும் அவருடைய ஊழியம் பற்றியும் அலசி ஆராய வேண்டும்.

### மந்தை மேய்க்கிறவனாகிய ஆமோஸ்

மந்தையை மேய்த்துக் கொண்டிருந்த ஆமோசை யெகோவா தேவன் அழைத்து இஸ்ரவேலை எச்சரிக்கும்படி அனுப்பினார். யூதா தேசத்தில் வாழ்ந்து கொண்டிருந்த அவரை தேவன் இஸ்ரவேலின் விக்கிரக ஆராதனைக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைக்கும்படி, குறிப்பாக பெத்தேலின் பலிபீடத்திற்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைக்கும்படி அனுப்பினார். தேவன் இரு நூற்றாண்டுகளுக்கு மேலாக தம்முடைய நீடிய பொறுமையினால் இஸ்ரவேலை உண்மையான மார்க்கத்திற்குத் திரும்பும்படி கேட்டுக்கொண்டார். அதன் கடைசிகட்ட முயற்சியாக மற்றுமொரு எச்சரிக்கை விடுக்கும்படி ஆமோசை அனுப்பினார். இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது சுமார் கி.மு. 750ல். ஆனால், கி.மு. 721-ல் தேவன் அசீரியர்கள் பத்துக் கோத்திரங்களை உள்ளடக்கிய இஸ்ரவேலை சிறைபிடித்துப் போகும்படி அனுமதித்தார்.

ஆமோஸ் பெத்தேலுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைத்தபோது பெத்தேலில் ஆசாரியனாயிருந்த அமத்சியா ராஜாவாகிய யெரோபெயாமுக்கு அதை அறிவித்தான். ராஜா ஆமோஸின் செய்தியை கவனிப்பதற்குப் பதிலாக அவரை யூதா தேசத்துக்குப் போய் தீர்க்கதரிசனம் சொல்லு என்று வற்புறுத்தினான்... " *தரிசனம் பார்க்கிறவனே, போ; நீ யூதா தேசத்துக்கு ஓடிப்போ, அங்கே அப்பம் தின்று, அங்கே*

*தீர்க்கதரிசனம் சொல்லு; பெத்தேலில் இனித் தீர்க்கதரிசனம் சொல்லாதே; அது ராஜாவின் பரிசுத்த ஸ்தலமும் ராஜ்யத்தின் அரமனையுமாயிருக் கிறது* " (ஆமோஸ் 7:12,13).

அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, ஆமோஸ் தான் தேவனு டைய வாய் என்று சொன்னார். " *"மந்தையின் பின்னாலே போகிற போது என்னைக் கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ர வேலுக்கு விரோதமாகத் தீர்க்க தரிசனம் சொல்லு* " என்றுரைத்தார் என்றான் (7:15). அப்போது தீர்க்க தரிசி மறுபடியும் சிறைப்பிடிப்பின் எச்சரிப்பை விடுத்தார். " *இதினி மித்தம் உன் பெண்ஜாதி நகரத்தில் வேசியாவாள், உன் குமாரரும், உன் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்; நீயோவென்றால் அசுத்த மான தேசத்திலே செத்துப்போவாய்; இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுக் கொண்டு போகப்படுவான்* " என்று கர்த்தர் சொல்லுகிறார் (7:17) என்றான்.

**இஸ்ரவேலின் பிடிவாதம்**

தேவனுடைய நீடிய பொறுமை யானது இஸ்ரவேலின் பிடிவாதத் தால் தளர்ந்து போனது. அவர் இஸ்ர வேலிடத்தில் தீர்க்கதரிசிகளை அனுப்பினது மட்டுமல்லாமல், மனந் திரும்புதல் உண்டாகும்படி அவர்கள் மேல் தண்டனைகளையும் அனுப்பி னார். ஆமோஸ் 4:6,7 வசனங்கள் தேவன் எப்படி பஞ்சத்தினாலும், வறட்சியினாலும், விஷப்பனியினா லும், கொள்ளை நோயினாலும் தண்டித்தார் என்பதைக் காட்டுகிறது.

ஆனால், தேவனுடைய வாயி லிருந்து திரும்பத் திரும்ப, ஆகிலும் " நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற் போனீர்கள் " என்று கர்த்தர் சொல் கிறார் என்பது ஐந்து முறைகள் இடம் பெறுகின்றன. இந்த விழுதல் எவ்வளவு சோககரமானது! தேவனு டைய அன்பு கடினமான இருதயங் களால் நிராகரிக்கப்பட்டது. இஸ்ர வேல் தேவனிடத்தில் திரும்பியிருக்க லாம். ஆனால், அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள்.

**தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு**

இஸ்ரவேலை விக்கிரக ஆராதனையிலிருந்து மீட்டெடுக்க தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்த பிறகு தேவன் இவ்விதமாகச் சொன் னார். " ஆகையால், இஸ்ரவேலே, இந்தப் பிரகாரமாக உனக்குச் செய் வேன்.... உன் தேவனைச் சந்திக்கும் படி ஆயத்தப்படு " என்று. இவ்வசனப் பகுதியில் அசீரிய சிறைபிடிப்பு முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. *"இஸ்ரவேல் என்னும் கன்னிகை விழுந்தாள், அவள் இனி ஒருபோதும் எழுந்திருக்கமாட்டாள்; தன் தேசத் தில் விழுந்து கிடக்கிறாள், அவளை எடுப்பாரில்லை; நகரத்திலிருந்து புறப்பட்ட ஆயிரம் பேரில் நூறுபேரும், நூறு பேரில் பத்துப்பேரும் இஸ்ர வேல் வம்சத்தாருக்கு மீந்திருப் பார்கள். ஆகையால், உங்களைத் தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டு வேன் என்று சேனைகளுடைய தேவன் என்னும் நாமமுள்ள கர்த்தர் சொல்லுகிறார்* " (ஆமோஸ் 5:2,3,27).

தேவனால் அவர்களைத் தப்பு விக்கவும் முடிந்தது, ஒடுக்குபவர் களிடம் அவர்களிடம் ஒப்படைக்கவும் முடிந்தது. அவர் சர்வ வல்லவர், சர்வ ஞானி, சர்வ வியாபி. உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு என்று அவர்களிடம் சொல்லிவிட்டு, அடுத்த வசனத்தில் தம்முடைய வல்லமை யை வெளிப்படுத்துகிறார். " அவர் பர்வதங்களை உருவாக்கினவரும், காற்றைச் சிருஷ்டித்தவரும் (சர்வ வல்லவர்) மனுஷனுடைய நினைவு கள் இன்னதென்று அவனுக்கு வெளிப் படுத்துகிறவரும் (சர்வஞானி), விடியற்காலத்தை அந்தகாரமாக்கு கிறவரும், பூமியினுடைய உயர்ந்த ஸ்தானங்களின் மேல் உலாவுகிற வருமாயிருக்கிறார்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்பது அவரு டைய நாமம் " (சர்வ வியாபி). சர்வ வல்லவர் இஸ்ரவேலர்களின் கீழ்ப் படியாமைக்கு சரிகட்ட வல்ல வராகவும், ஞானமுள்ளவராகவும் இருந்தார்.

## ஆயத்தம் முக்கியமானதாகும்

நாம் ஆமோஸ் 4:12-யை எவ்விதமாக பயன்படுத்தலாம்? கீழ்ப் படிதல் மற்றும் ஆயத்தத்தின் முக்கி யத்துவத்தை வலியுறுத்தி ஒரு விதத்தில் நாம் பயன்படுத்தலாம். நாம் இவ்வசனப்பகுதியின் பின்ன ணித் தகவல்களைக் கற்றுக் கொண் டிருக்கிறபடியால் நான் இப்போதும் வருங்காலத்திற்கும் போதுமான அளவு ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதன் அவசியத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. மனிதன் சேவைக்காக, ஜீவனுக்காக, மரணத் திற்காக மற்றும் நியாயத்தீர்ப்புக்காக எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டுமென்று வேதாகமம் போதிக் கிறது.

சபையானது ஒரு திராட்சைத் தோட்டமாயிருக்கிறது. வேலை செய்யும் ஓர் இடமாக இருக்கிறது (மத்தேயு 20). நாம் நல்ல வேலையாட் களாக இருக்க நம்மை நாம் ஆயத்த மாக்கிக் கொள்ள வேண்டும். புத்தி யில்லாத அந்த ஐந்து கன்னிகைகள் உங்கள் நினைவுக்கு வருகிறார் களா? அரைகுறையான ஆயத்தம் போதுமானதாக இருக்கவில்லை. ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோ டே கூட கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள் (மத்தேயு 25:10). ஒருவர் வேத பாட வகுப்புகளில் ஒழுங் காக பங்கேற்காத போது, தனிப்பட்ட முறையில் வேத வாக்கியங்களைப் படிக்காத போது, உண்மையாக ஜெபித்து, பக்தியுள்ள வாழ்க்கை வாழாத போது, கர்த்தருக்காக ஊழியம் செய்வதற்கு ஒருவர் எப்படி ஆயத்தமாக முடியும்? நாம் இயேசுவின் ஊழிய மாதிரியைப் பின்பற்ற வேண்டும். பகற்காலமி ருக்கு மட்டும் நான் என்னை அனுப் பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்; ஒருவனும் கிரியை செய் யக்கூடாத இராக்காலம் வருகிறது.

## நித்தியத்திற்கு ஆயத்தப்படு

ஒருவர் எதற்காக நித்தியத் திற்கு ஆயத்தமாக வேண்டும்? ஏனென்றால், நாம் எல்லாரும் ஒரு நாளில் மரிக்க வேண்டியதாயிருக் கிறது, நியாயத்தீர்ப்பில் கிறிஸ்துவுக்கு

முன்பாக நிற்க வேண்டியதாயிருக்கிறது. இதற்கு தப்பிக்க வழியே இல்லை. ஏனென்றால், *ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது* என்று எபிரெயர் 9:27-ல் நாம் வாசிக்கிறோம். மேலும், "*ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்* " என்றும் 2 கொரிந்தியர் 5:10-ல் வாசிக்கிறோம். தாவீது மிகப் பெரிய ராஜாவாக இருந்த போதிலும் கூட " *நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன்* " என்று தான் சொன்னார் (1 ராஜா 2:2). நாம் மரித்தே ஆக வேண்டும். அதன்பின்பு நாம் கிறிஸ்துவுக்கு முன்பாக நின்று "*நியாயந்தீர்க்கப்படுவோம். மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்* " (வெளி. 20:12).

நித்தியத்தில் தேவனைச் சந்திக்க ஆயத்தப்பட வேண்டுமென்றால் நம் பிடிவாதமான தேவ தேவ விரோத விருப்பங்களையும், தீமையான வழிகளையும் ஒழித்து விட்டு, அன்பும், விசுவாசமும் நிறைந்த இருதயத்தோடு தேவனிடத்தில் திரும்பி, அவருடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய ஆவலாயிருக்க வேண்டும். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு, அவரில் விசுவாசம் வைத்திருப்பவன் நம்பிக்கையோடே மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டும் (அப்போஸ்தலர் 2:38). ஆயத்தமாயிருக்கிற கிறிஸ்தவன், தன் வாழ்க்கை, வேலை மற்றும் ஆராதனையின் எல்லா நிலைகளிலும் இயேசுவை பின்பற்ற ஜாக்கிரதையாகப் பிரயாசப்படுகிறான். வழி தப்பிப் போகிற, தவறு செய்கிற கிறிஸ்தவர்களுக்கு எங்கள் உள்ளப் பூர்வமான ஜெபம் அவர்கள் மனந் திரும்பி, பாவமன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டுமென்பதாயிருக்கிறது. "*ஆகையால், நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்* " (அப். 8:22). ஆகவே, கிறிஸ்து எல்லாவற்றிற்கும் எல்லாமுமாகட்டும்.

## இப்பொழுதே ஆயத்தப்படு

நீங்கள் இப்பொழுதே ஆயத்தமாவது அவசரமாயிருக்கிறது. அநுக்கிர காலத்திலே நான் உனக்குச் செவி கொடுத்து இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; *இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்* (II கொரிந்தியர் 6:2)

# வாடகைக்கு ஆசாரியன்?

## *Priest For Hire?*

*Jeril (Polly) Cline*

" மீகா சுவாமிக்கு ஒரு அறைவீட்டை நியமித்து வைத்திருந்தான்; அவன் ஒரு ஏபோத்தையும் சுருபங்களையும் உண்டு பண்ணி, தன் குமாரரில் ஒருவனைப் பிரதிஷ்டை பண்ணினான்; இவன் அவனுக்கு ஆசாரியனானான். அந்நாட்களிலே இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தான் ". (நியாயாதிபதிகள். 17:5,6).

இது நம்முடைய காலத்தைப் போன்ற நிலை..... அதாவது, அவனவன் தன்தன் பார்வைக்கு சரிபோனபடி செய்து வந்த ஒரு காலம். (நியாயாதிபதிகள் 17:6). எப்பிராயீம் மலைத் தேசத்தானாகிய மீகா தன் தாயிடமிருந்து 1100 வெள்ளிக்காசுகளை திருடியிருந்தான். அதை அவன் தன் தாயிடம் திருப்பிக் கொடுக்கும் போது, முன்பு தன் மகனை சபித்ததாய் இப்போது ஆசீர்வதித்து அதை முற்றிலும் கர்த்தருக்கென்று நியமித்தாள். அதே நேரத்தில் அவர் அந்த காசுகளினாலே ஒரு சுருபத்தையும், வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டு பண்ணினாள். நாம் நம் பிள்ளைகளுக்கு கலப்பான செய்தியை அனுப்புகிறோமா? நாம் எப்போதாவது தெய்வத்தை நாமே உண்டாக்கியிருக்கிறோமா? அல்லது வெகுமதி தந்தவரை விட வெகுமதியை ஆராதிக்கத் தொடங்கி விட்டோமா?

இப்போது மீகாவிடம் உண்டாக்கப்பட்ட பல தெய்வங்கள் உள்ளன. அவனுக்கு உண்டு பண்ணின சுருபங்களை வைக்க ஒரு பரிசுத்த ஸ்தலமும், ஆசாரியத்துவத்தை அடையாளப்படுத்தும் ஏபோத்தும் தேவை. எனவே, உடனே அவன் தன் குமாரரில் ஒருவனை பிரதிஷ்டை பண்ணினான்! நீங்கள் எப்போதாவது உங்கள் பிள்ளைகளைப் பரிசுத்தமாக்க முயற்சித்திருக்கிறீர்களா? மனிதனால் பரிசுத்தமாக்க முடியாது. தேவனால் மாத்திரமே முடியும் (லேவி. 22:9,16,32; 1 தெச. 5:23). பரிசுத்தத்திற்கான தேவனுடைய திட்டத்தை நாம் தவிர்த்து அதை வேறு வழியாக அடைய எவ்வளவு முயற்சித்தாலும், அது வேறு வழியில் ஒரு போதும் வருவதில்லை. நாம் எவ்வளவு முயற்சித்தாலும், அதை அடைவதற்கு தேவன் மூலமாகத்தான் செல்ல வேண்டியதாயிருக்கிறது.

யூதாவிலுள்ள பெத்லகேம் என்னும் ஊரிலிருந்து லேவியனான ஒரு வாலிபன் அங்கே வருகிறான். அவன் தங்குவதற்கு இடமில்லாமல் அங்கு மிங்குமாய்த் தங்கி வந்தான். அவன் எங்கேயாவது போய்த் தங்கலாம் என்று அலைந்து திரிந்து கொண்டி ருந்தான். மீகா அவனை தனக்காக பயன் படுத்திக் கொண்டான்.

அப்பொழுது மீகா : நீ என்னி டத்தில் இரு, நீ எனக்குத் தகப்பனும் ஆசாரியனுமாயிருப்பாய்; நான் உனக்கு வருஷத்திலே பத்து வெள்ளிக் காசையும், மாற்று வஸ்தி ரத்தையும், உனக்கு வேண்டிய ஆகாரத்தையும் கொடுப்பேன் என்று அவனிடத்தில் சொன்னான் (வசனம் 10). அந்த லேவியனும் அதற்கு சம்மதித்தான். லேவியர்கள் ஆரோ னின் குடும்பத்திலிருந்து வந்தா லொழிய அவர்கள் ஆசார்யர்களல்ல. லேவியர்கள் ஆசாரியர்களுக்கு உதவியாளர்களாயிருந்தார்கள். அவர்கள் பரிசுத்தப் பொருள்களை தொட அனுமதிக்கப்படவில்லை எண்ணாகமம் 2:3,4.

இங்கே மீகா அந்த லேவி யனைப் பரிசுத்தப்படுத்தி " எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப் பட்டபடியினால், கர்த்தர் எனக்கு நன்மை செய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் " என்று சொன் னான் (வசனம் 13). ஆ! என் சுயநலத் திற்காக தேவனை பயன் படுத்துவது தேவனை தந்திரமாக ஏமாற்ற மற்ற வர்களைப் பயன்படுத்துவது இது என்ன வேதனையான காரியம். மீகாவும், அந்த இளம் லேவியனும் தங்கள் நலன்களைத் தான் பார்த்தார்கள். இது நம்முடைய இல்லங்களில் நடப்பதைப் பிரதி பலிக்கிறதா? (பிலிப்பியர் 2:4,21).

தாண் கோத்திரத்தாருக்கு அந்நாள் வரைக்கும் இஸ்ரவேல் கோத்திரங்கள் நடுவே போற்ற சுதந்தரம் கிடைக்கவில்லை. ஆகை யால், தேசத்தை உளவு பார்த்து வரும்படி, தங்கள் கோத்திரத்தில் பலத்த மனுஷராகிய ஐந்து பேரை அனுப்பினார்கள். அவர்கள் எப்பிரா யீம் மலைத் தேசத்தில் இருக்கிற மீகாவின் வீடு மட்டும் போய் அங்கே இராத்தங்கினார்கள். அப்போது அவர்கள் அங்கே தங்கியிருந்த லேவி யனை அடையாளங்கண்டு இவ்விடத் தில் என்ன செய்கிறாய் என்று கேட்டார்கள். அந்த லேவியன் அவர் களிடம், மீகா தன்னை ஆசாரியனாக வாடகைக்கு அமர்த்தினதாகவும் அதனால் தான் மீகாவுக்கு ஆசாரி யன் ஆனதாகவும் சொன்னான்.

ஆனால், நீங்களும் நானும் மனிதனாலல்ல, தேவனுடைய சொந்த ஜனங்களாயிருப்பதற்கு அவரால் ஆசாரியர்களாக பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம். அதுவும் வாடகைக் கல்ல, " அந்தகாரத்தினின்று தம்மு டைய ஆச்சரியமான ஒளியினிடத் திற்கு வரவழைத்தவருடைய புண்ணி யங்களை அறிவிக்கும்படிக்கு ராஜ ரீகமான ஆசாரியக் கூட்டமாக்கப் பட்டிருக்கிறோம் " (1 பேதுரு 2:9). எனவே, நாம் இவ்வுலகில் அந்நியர் களாக, பரதேசிகளாயிருக்கும்படி யாகவும், உலகத்தால் கறைபடாத படிக்கு நம்மை காத்துக் கொண்டு, ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு

விலகியிருக்க வேண்டுமென்று புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம் (1பேதுரு 2:9,11; யாக்கோபு 1:27).

ஆனால், தாண் கோத்திரத்தார் தேவனை விட்டு ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப்பிரகாரமாகவும் தூரமாக இருந்தார்கள். எனவே, அவர்கள் அந்த ஆசாரியனிடம் தங்கள் பிரயாணம் அனுகூலமாய் முடியுமோ என்று தேவனிடத்தில் கேட்கச் சொல்கிறார்கள் (நியாயாதிபதிகள் 18:5). அதற்கு அந்த ஆசாரியன் அவர்கள் என்ன கேட்க விரும்பினார்களோ அதைச் சொன்னான். " சமாதானத்தோடே போங்கள் : உங்கள் பிரயாணம் கர்த்தருக்கு ஏற்றது " என்றான். என்ன ஒரு சாதகமான செய்தி. நீங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டால் நீங்கள் விற்கிற பொருள் உங்கள் முதலாளிக்கு பிடித்திருக்கிறதா என்பதை நிச்சயித்துக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகள், குடும்பம் அல்லது நீங்கள் அங்கம் வகிக்கும் சபைக்கு பிடிக்கவில்லை என்பதற்காக கர்த்தருடைய செய்தியை எப்போதாவது மாற்றியிருக்கிறீர்களா?

தாண் கோத்திரத்தார் சீக்கிரமாக 600 ஆயுதந்தரித்த மனுஷர்களுடன் வந்தார்கள். அவர்கள் மீகாவின் வீட்டிற்குள் போய் விக்கிரகங்களையும், சுரூபங்களையும், ஏபோத்தையும் எடுத்துக் கொண்டு அங்கேயிருந்த ஆசாரியனைப் பார்த்து, " நீ எங்களோடே கூட வந்து எங்களுக்குத் தகப்பனும், ஆசாரியனுமாயிரு; நீ ஒரே ஒருவன் வீட்டுக்கு ஆசாரியனாயிருக்கிறது நல்லதோ? இஸ்ரவேலில் ஒரு கோத்திரத்திற்கும், வம்சத்திற்கும் ஆசாரியனாயிருக்கிறது நல்லதோ? என்று கேட்டார்கள் (நியாயாதிபதிகள் 18:19). ஆஹா புகழ்! உங்களை நீங்கள் விற்பதற்காகத் துணிந்துவிட்டால், அதை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இப்போது எனக்கு இது எப்படிப் பொருந்துகிறது? செழுமையான மார்க்கத்திற்கு, சமாதானமான மார்க்கத்திற்கு, புகழ் தரும் மார்க்கத்திற்கு என்னை நான் விற்றுப் போட்டுவிட்டேனா? எனக்கும் தேவனுக்குமுள்ள உறவின் அடித்தளம் தான் என்ன?

மீகாவின் கடைசி வார்த்தைகள் இவ்விதமாகச் சொல்கின்றன: " நான் உண்டு பண்ணின என் தெய்வங்களையும், அந்த ஆசாரியனையுங்கூட நீங்கள் கொண்டு போகிறீர்களே! இனி எனக்கு என்ன இருக்கிறது " என்றான் (18:24). உங்கள் தெய்வமும் ஆசாரியத்துவமும் வேறொருவருடைய பாதுகாப்பில் இருந்தால், உண்மையாகவே உங்களிடத்தில் ஒன்றுமில்லை. ஆனால், ஜீவனுள்ள தேவன் உங்கள் தேவனாயிருந்து, நீங்கள் அவருடைய உண்மையான ஆசாரியனாக இருந்தால், யாருமே அதை உங்களிடமிருந்து ஒருபோதும் எடுத்துக் கொள்ள முடியாது!

# தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயிருத்தல்

## *Faithful To God`s Word*

***Leon Barnes***

*" என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடது புறம் விலகாதிருப்பாயாக " (யோசுவா 1:7).*

**உ**ண்மையாகவே, தேவனுடைய ஜனங்கள் யோசுவா தங்கள் தலைவனாக இருந்த போதுதான் ஆவிக்குரிய நிலையின் உச்சகட்டத்தை அடைந்தார்கள். அர்ப்பணம், ஒப்புக்கொடுத்தல், பலம் மற்றும் தைரியம் போன்ற வார்த்தைகள் தான் இந்த மாபெரும் விசுவாச வீரனை விவரிக்கும் வார்த்தைகளாகும் (யோசுவா 1:7). யோசுவா 23,24 அதிகாரங்களை வாசித்து விட்டு மிகச்சிறந்த பிரசங்கங்களுள் ஒன்று பிரசங்கிக்கப்பட்டிருக்கிறது என்பதை யார் தான் புரிந்து கொள்ளமாட்டார்? அந்த வல்லமையான பிரசங்கத்தில் யோசுவா மற்ற கருத்துக்களோடு இவைகளையும் வலியுறுத்துகிறார்.

1. நீங்கள் தேவனை விட்டு விலகும்போது அடிமைத்தனம் உங்களுக்குக் காத்திருக்கும்.
2. உங்களைச் சுற்றிலும் இருக்கும் தேசங்களைப் போலிருக்க வேண்டுமென்கிற விருப்பம் உங்களைக் கெடுத்துவிடும்.
3. நீங்கள் யெகோவாவை ஏனோதானோ சேவிக்க முடியாது.
4. நீங்கள் ஒன்றைத் தெரிந்து கொண்டாக வேண்டும்.
5. விக்கிரக ஆராதனை தேவனோடு உங்களுக்கிருந்த உறவை கெடுத்து விட்டது.
6. யெகோவா இன்றும் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார்.
7. அவர் எல்லோருக்கும் கர்த்தராக இருக்க வேண்டும் அல்லது யாருக்கும் கர்த்தராக இல்லாமலிருக்க வேண்டும்.

அக்கால கட்டம், தேவனிடத்திலும், அவருடைய வார்த்தையினிடத்திலும் அர்ப்பணிப்பு மற்றும் உண்மையாயிருத்தலின் காலகட்டமாக இருந்தது என்று விவரிக்க முடியும்.

யோசுவா பிரசங்கத்தின் மாபெரும் முக்கியத்துவம் நாம் வேதாகமத்தின் பக்கங்களைத் திருப்பி நியாயாதிபதிகளின் காலகட்டத்திற்குள் கடந்து செல்லும் போது புரியும். யோசுவாவின் காலகட்டத்திற்கும், நியாயாதிபதிகளின் காலகட்டத்திற்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. இக்கால கட்டம் தேவனுடைய ஜனங்களின் மிக மோசமான வீழ்ச்சியின் கால கட்டமாக இருந்தது.

நியாயாதிபதிகள் 2:11-19 வசனங்களில் நாம் ஒரு சூழ்நிலையைக் காண்கிறோம். அது அக்காலகட்டதில் வாழ்ந்த ஜனங்களின் பாவங்களை மிகப் பொருத்தமாக விளக்குகிறது. இவ்வசனங்களை மிக ஜாக்கிரதையாகக் கவனியுங்கள். அப்போது நீங்கள் அப்பாவங்களை காண்பீர்கள்.

*1. விக்கிரக ஆராதனை அவர்களை ஆட்கொண்டது.*

*2. அவர்கள் தேவனை விட்டு விட்டார்கள்.*

*3. அங்கே பரலோக வழி நடத்துதலுக்கு நன்றியுணர்வு இல்லாதிருந்தது.*

*4. விரட்டப்பட்ட சத்துருக்கள் இப்போது இவர்களை சிறைப்படுத்தி விட்டார்கள்.*

*5. தேவனால் நியமிக்கப்பட்ட தலைவர்களுக்குச் செவி கொடுக்க மறுத்தார்கள்.*

*6. தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்தார்கள்.*

*7. அவர்களுடைய பிடிவாதமான விருப்பம் தொடர்ந்து நிலைத்து நின்றது.*

*8. இஸ்ரவேல் ஆவிக்குரிய விபச்சாரத்தில் ஈடுபட்டது.*


இப்போது காலத்தோடு கரம்பிடித்து நடக்கின்ற நாம் எப்படி யோசுவா 24:15-ல், யோசுவா ஜனங்களை தெரிந்து கொள்ளும்படியாகச் சொன்னாரோ அதேபோல் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் தேவனுடைய பட்சத்தில் நின்று, அவருடைய வார்த்தைகளுக்கு உண்மையாயிருப்போமாக! ❁

**சத்தியமானது ஏற்றுக்கொள்ளப்படும் சூழ்நிலை வரும்வரை அறிவிக்காமல் காத்திருப்பதைக் காட்டிலும், ஏற்றுக்கொள்ளப்படாமல் தள்ளப் பட்டாலும் அறிவிப்பது நல்லது.**

# எனக்குப் பிறன் யார்?

## WHO IS MY NEIGHBOR?

*T. Pierce Brown*



லூக்கா : 10:29-ல் எனக்குப் பிறன் யார்? என்று கேள்வி கேட்ட நியாயசாஸ்திரியின் கேள்வியிலிருந்து வெளிப்படையாகத் தெரிகிற காரியம், பிறன் என்பது பக்கத்து வீட்டுக்காரனைக் குறிக்காமல் வேறொருவனைக் குறிக்கிறது என்பது. 36 மற்றும் 37 வசனங்களிலுள்ள கேள்வியும், பதிலும் சமாரியன் அடுத்த தெருவில் வாழ்ந்த ஒரு நபரல்ல என்பதை உறுதி செய்கிறது. பிறன் என்பவன் ஒரே கோத்திரத்தையோ அல்லது ஒரே பகுதியையோ சார்ந்தவனல்ல. ஆனால், ஒருவருக்கு நன்மை செய்யும் எந்த ஒரு நபரும் பிறன் தான் என்னும் கருத்தை வலியுறுத்த அங்கே இயேசு ஆசாரியனையும், லேவியனையும்

சமாரியனோடு வித்தியாசப்படுத்திக் காட்டியிருப்பது போல் தெரிகிறது. " உன்னில் நீ அன்பு கூருவதுபோல் பிறனிலும் அன்பு கூருவாயாக என்று லேவி. 19:18-ல் இடம் பெற்றுள்ள தேவனுடைய பிரமாணம் மூன்று சுவிசேஷப் புத்தகங்களிலும், பவுல் மற்றும் யாக்கோபு போன்றோர் எழுதிய நிரூபங்களிலும் இடம் பெற்றுள்ளது. இவ்வசனத்தில் வேறு என்னவெல்லாம் அடங்கியிருக்கிறது என்பதை மிக விவரமாக ஆராய்வது நமக்குப் பொருந்தமான ஒன்றாகும். இயேசு கிறிஸ்து இது இரண்டாம் பிரதானகட்டளை என்று சொன்ன தினால் இதன் முக்கியத்துவம் மேலும் வலியுறுத்தப்படுகிறது (மாற்கு 12:33).

லேவி. 19:18-ல் இடம் பெற்றுள்ள பிறன் என்பதற்கான கிரேக்க வார்த்தை “ Pelas ” என்பதாகும். அது நம்மருகில் இருப்பவர்களை அல்லது நமக்கு நெருக்கமானவர்களைக் குறிக்கும். ஒருவர் நம்மை விட்டு 10,000 மைல்கள் தூரத்தில் இருந்தால் கூட நமக்கு நெருக்கமானவராக, நமக்கு முக்கியமானவராக இருக்க முடியும். அவர் அடுத்த வீட்டில் அல்லது தெருவில் இருக்க வேண்டிய அவசியமில்லை. எளிதான முறையில் சொல்ல வேண்டுமென்றால்; இவ்வுலகில் ஒருவர் எந்தப் பகுதியில் இருந்தாலும் நீங்கள் அவருக்கு நம்மை செய்தால் அவர் பிறனாக கருதப்படுவார். ஒருவருக்கு நீங்கள் செய்யும் மிகப் பெரிய நன்மை அவரை கிறிஸ்துவுக்குள் இரட்சிப்புக்குள்ளாக வழி நடத்துவது தான். ஆகவே, உன்னில் நீ அன்பு கூருவதுபோல் பிறனிலும் அன்பு கூருவாயாக என்பது நீங்கள் இரட்சிக்கப்பட விரும்புவது போல் மற்றவர்களுடைய ஆத்துமா இரட்சிப்படைய நீங்கள் விரும்புவதையும், முயற்சி எடுப்பதையும் உள்ளடக்கியதாகும்.

நம் முதன்மையான கருத்தோடு தற்செயலாகத் தோன்றும் மற்றுமொரு கருத்து என்னவென்றால், இயேசு " உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று சொன்ன போது நீ உன்னிடத்தில் எந்த அளவு அன்பு கூருகிறாயோ அந்த அளவு பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக " என்று சொல்ல வில்லை. உங்களுக்கு சிறந்த அன்பையே விரும்புவீர்கள். உங்களுக்கு நன்மைப் பயக்கும் பொருத்தமான எதையும் இவ்வுலகத்தில் நீங்கள் செய்வீர்கள். நீங்கள் உங்களுக்கே பொய் சொல்ல மாட்டீர்கள் அல்லது உங்கள் நற்கீர்த்திக்கு களங்கம் ஏற்படும் எந்த ஒரு காரியத்தையும் வேண்டுமென்றே செய்யமாட்டீர்கள். களங்கம் ஏற்படுவதிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள மரிக்கவும் செய்வீர்கள்.

இங்கே அன்பு என்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை " Agape " என்பதாகும். இதன் பொருள் தன்னலமற்ற தியாகப் பூர்வமான உயரிய அன்பு என்பதாகும். இது சகோதர, சகோதரிகள் அல்லது நண்பர்களுக்கிடையே வெளிப்படுத்தப்படும் பிரியம் அல்ல.



# பூரணமானதா அல்லது பலவீனமானதா?

*Perfect & Weak?*

***Royce Frederick***

**ப**ழைய ஏற்பாடு இஸ்ரவேலுக்கான தேவனுடைய பிரமாணமாகிய மோசேயின் பிரமாணத்தை உள்ளடக்கியது. (சங்கீதம் 19:7) அப்பிரமாணத்தை " குறைவற்றது " என்று வேதாகமம் அழைக்கிறது. ஆனால், ரோமர் 8:3 அதை " பலவீனமானது " என்றழைக் கிறது. இரண்டும் எப்படி சரியாக இருக்க முடியும்?.

**" குறைவற்றது "**

*" கர்த்தருடைய வேதம் குறைவற்றது..."* (சங்கீதம் 19:7). அது அதன்

எல்லா நோக்கங்களையும் நிறைவேற்றுகிறது. ஆனால், நம் எல்லாத் தேவைகளையுமல்ல. இது மனித உடலைப் பொறுத்தளவிலும் உண்மையாயிருக்கிறது. அது தேவன் எவைகளை உத்தேசித்திருந்தாரோ அவைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுகிறது. ஆனால், நமக்கு தேவையான எல்லாவற்றையும் அல்ல. தேவன் நம் சரீரத்தை பிரமிக்கத்தக்க அதிசயமாய் வடிவமைத்திருக்கிறார். ஆனால், இவ்வுலகத்திற்காக மாத்திரமே அந்த சரீரத்தை வடிவமைத்திருக்கிறார். அது ஒரு நாளில் அழிந்துபோகும். அது என்றென்றும் நம் ஆத்துமாவுக்கான வீடாக இருக்க முடியாது. அது தற்காலிகமானது. இவ்வுலகம் முடிவுக்கு வரும்போது, தேவனுக்கு சேவை செய்த யாவரும் அழிக்க முடியாத, பாதிப்புக்குள்ளாகாத நிரந்தரமான சரீரத்தைப் பெற்றுக் கொள்வார்கள் (2 கொரி. 5:1,4; 1 கொரி. 15:42-44; 50-57).

அதுபோல், இந்தப் பூமியும் தேவனுடைய கையின் ஆச்சரியமான கிரியையாயிருக்கிறது. அது தேவன் உத்தேசித்திருந்த எல்லாவற்றையும் நிறைவேற்றியது. ஆனால், நமக்குத் தேவையான எல்லாவற்றையும் அல்ல. ஒருநாள் தேவன் இந்த பூமியை அக்கினியால் அழித்து அதற்குப் பதிலாக ஒரு போதும் அழிக்க முடியாத புதிய பூமியை உண்டாக்குவார் (2 பேதுரு 3:7, 10-13).

இக்கருத்து தேவன் இஸ்ரவேலோடு ஏற்படுத்தின உடன்படிக்கையிலும் உண்மையாயிருக்கிறது. அது நித்திய உடன்படிக்கையாயிருந்தது. இஸ்ரவேல் தொடர்ந்து மோசேயின் பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தால் சகல ஜனங்களிலும் அவர்கள் தேவனுக்குச் சொந்த ஜனமாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னார் (யாத். 19:5). அப்பிரமாணம் அதன் நோக்கத்தை நிறைவேற்றியது; அது இஸ்ரவேலை ஆளுகை செய்தது; தேவனைப் பற்றிய பல பாடங்களை அது போதித்தது, ஜனங்களை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்தியது (கலா. 2:19; 3:19-25; 1 கொரி. 10:11). இது தேவனுடைய நோக்கம் எல்லாவற்றையும் நிறைவேற்றியது. ஆனால், மனிதனுக்குத் தேவையான எல்லாவற்றையும் அல்ல.

" *பலவீனம்* " *மோசேயின் பிரமாணத்திற்கு ஒரு பலவீனமாயிருந்தது.* "....அது மாம்சத்தினாலே பலவீனமயிருந்தது அது பாவ மனிதன்." (ரோமர் 8:3). மோசேயின் பிரமாணம் மனிதன் நீதிமானாயிருக்க வேண்டுமென்று கட்டளையிட்டது. ஆனால், அப்பிரமாணத்தால் எந்த ஒரு பாவியையும் நீதிமானாக மாற்ற முடியவில்லை. அது பாவத்தை கண்டித்தது. ஆனால், பாவியான மனிதனை அப்பிரமாணத்தால் இரட்சிக்க முடியவில்லை (ரோமர் 7:13; எபிரெயர் 10:4).

மோசேயின் பிரமாணத்தால் எதை நிறைவேற்ற முடியவில்லையோ அதை இயேசு கிறிஸ்து நிறைவேற்றினார். அவர் நம்முடைய பாவங்களுக்காக மரண தண்டனையை ஏற்றுக் கொண்டார் (1 பேதுரு 3:18; யோவான் 3:16; ரோமர் 6:23; எபி. 9:15) அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின்

சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்; மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப் பிரமாணத்தின் நீதி நிறை வேறும்படிக்கே அப்படிச் செய்தார் (ரோமர் 8:34; ரோமர் 3:21-26) யை பார்க்கவும்.


ஓர் உதாரணத்தை சிந்தித்துப் பாருங்கள். இஸ்ரவேலில் ஒரு ஆசாரியன் குஷ்டரோகம் பிடித்த வனைப்பார்த்து அவன் தீட்டுள்ள வன் என்று தீர்க்க முடியும் (லேவிய ராகமம் 13). ஆனால், அவனை சுக மாக்கும் வல்லமை ஆசாரியனுக்கு இல்லா திருந்தது. இயேசு கிறிஸ்து குஷ்ட ரோகிகளை சுகமாக்கினார் (மாற்கு 1; லூக்கா 17). அதே மாதிரி, மோசேயின் பிரமாணத்தால் ஒரு மனிதனை பாவி யென்று தீர்க்க முடிந்தது. ஆனால், அவனுடைய பாவத்தை நீக்கி அவனை இரட்சிக்க முடியவில்லை. இயேசு கிறிஸ்துவால் நம் பாவங்களிலிருந்து நம்மை இரட்சித்து நமக்கு நித்திய ஜீவனைத் தர முடியும்.

இயேசு மரித்த போது, தேவன் பழைய ஏற்பாட்டை எடுத்துப் போட்டு அதற்குப் பதிலாக புதிய ஏற்பாட்டை ஏற்படுத்தினார் (கொலோ 2:14; எபேசி. 2:11-16).

" *ஆகையால், முதலாம் உடன் படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரண மடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்வதற் காக புதுஉடன்படிக்கையின் மத்தி யஸ்தராயிருக்கிறார். ஏனென்றால், எங்கே மரணசாசனமுண்டோ அங்கே அந்தச் சாசனத்தை எழுதின வனுடைய மரணமும் உண்டாக வேண்டும்; எப்படியெனில், மரண முண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே* " (எபிரெயர் 9:15,17). " ..... இஸ்ரவேல் நியாயப் பிரமாணங்களை மீறி, கட்டளையை மாறுபாடாக்கி, நித்திய உடன்படிக் கையை முறித்தது" (ஏசாயா 24:5)

எந்த ஒரு மனிதனும் நியாயப் பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதினாலே பரலோகம் போக முடியாது (ரோமர் 3:20). எல்லோரும் பாவம் செய்திருக் கிறபடியால், எல்லோருக்கும் தேவனு டைய கிருபை அவசியமாகிறது (ரோமர் 3:23; 6:23). தேவன் இவ்வுல கத்தை உண்டாக்குவதற்கு முன்பே, நம் தேவைகள் என்னவென்பதை அறிந்து தம்முடைய குமாரனை நமக்காக இப்பூமிக்கு அனுப்பத் திட்டமிட்டிருந்தார் (எபே. 3:3,6; 1 பேதுரு 1:18,21) ஒரு பாவி கிறிஸ்து வுக்குள் ஞானஸ்நானம் பெறும் போது தேவனுடைய ஈவாகிய இரட்சிப்பைப் பெறுகிறான் (ரோமர் 6:3,4; அப். 2:38) " எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும், சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின " (யோவான் 1:17)


## சத்திய வழி




- ❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- ❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
- ❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

தொடர்புக்கு : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560 084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




- ❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
- ❖ தமிழன் TV : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி
- ❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ❖ ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)
Srilanka all Asia Service



**ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம் :**
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்தலகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை




- ❖ பேச்சாளர் : சகோ. பிலேமோன் ராஜா
- ❖ தமிழன் TV : ஞாயிறு காலை 6:45 மணி & வெள்ளி காலை 6:00 மணி
- ❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ்/English )
- ❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை மற்றும் கைப்பிரதிகள்
- ❖ English Quaterly Magazine : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- ❖ J.C. School of Evangelism : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பணி

தொடர்புக்கு : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**



| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

## அஞ்சல் வழி வேதாகம கல்வி

வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.**
**தமிழ்நாடு, இந்தியா.**

**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.**

| | |
|---|---|
| E.Z.S. ராஜநாயகம் : 98427 30382 | P.C. பிலேமோன் ராஜா : 92442 04420 |
| P.R. சுவாமி : 098440 70763 | B. அர்ஜுனன் : 94435 58041 |

## " சத்தியத்தின் குரல் " சந்தா விண்ணப்பம்

❑ " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ.100 (4 இதழ்கள்) (அ) ரூ. 200 (8 இதழ்கள்) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................... முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. .................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ " சத்தியத்தின் குரல் " நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

**கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி**


**E.Z.S. ராஜநாயகம்**

" சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழ்

288, தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385

E-mail : rajarichal@yahoo.co.in


பெயர் : ______________________

தெரு / ரோடு : ______________________

நகரம் : ______________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________